# வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய்
# கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர்

ஆலய
கும்பாபிஷேக
மலர்





252
கண்ண
SL/PR

வெளியீடு :- மண்டலாபிஷேக பூர்த்தி தினமாகிய (48ம் நாள்)
வெகுதானிய வருடம் ஆடி மாதம் 23ம் நாள் (08-08-1998) சனிக்கிழமை
வெளியிடுவோர் :- ஷ ஆலய பரிபாலன சபையும், தொண்டர் சபையும்.

# ரட்ணாஸ்

## சகல விதமான வைண்டிங் வேலைகளும்

- ★ மின்சார உபகரணங்கள்
- ★ மோட்டார் சைக்கிள்
- ★ அவுட்மோட்டர்
- ★ வாட்டர்பம்
- ★ ஆட்டோ
- ★ எலக்ரோனிக் எஞ்சின்கள்

ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**ரட்ணாஸ்**
வைண்டிங் வேக்ஸ்,
219, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

252

உ
சிவமயம் ந ப. 17620



தனம்தரும், கல்விதரும்; ஒரு நாளும் தளர்வுஅறியா
மனம்தரும்; தெய்வ வடிவும் தரும்; நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

17620

உ

சிவமயம்

# வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய்
# கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர்

## ஆலய கும்பாபிஷேக மலர்

வெகுதானிய வருடம் ஆடி மாதம் 23ம் நாள் சனிக்கிழமை

08 - 08 - 98

## கணபதி ஸ்தோத்திரம்

*கஜானனம் பூதகணாதி ஸேவிதம்*
*கபித்த ஜம்பு பலஸார புஷிதம்*
*உமா ஸீதம் சோக விநாச காரணம்*
*நாமமி விக்னேச்வர பாத பங்கஜம்*

யானை முகத்தையுடையவரும் பூதங்கள் முதலானோரால்
சேவிக்கப் பட்டவரும் விளாம்பழம் நாவல்பழம் ஆகியவற்றின்
சாற்றினை விரும்பி உண்கின்றவரும் உமையின் மகனும்
தெளிவான முகத்தையுடையவரும் சகல விக்கினங்களையும்
போக்குகின்றவருமாகிய விநாயகனைத் தியானிப்போமாக.

## காயத்திரி மந்திரம்

*ஓம் பூர் புவஸ் ஸீவ*
*ஓம் தத் ஸ்விதுர் வரேண்யம்*
*பர்கோ தேவஸ்ய தீமஹி*
*தியோ யோ நப்ரசோத யாத்*

(ஓமாதா ! முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே ! எனது புத்தியைக் கூர்மை அடையச் செய்து சூர்ய ப்ரகாசம் எல்லா இருளையும் அகற்றுவதுபோல் எமது சகல அறியாமையையும் அகற்றி எனது புத்தியைச் சாந்த சித்த நிர்மலமானதாக பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக்கிறேன்.)

## விநாயகர் ஸ்லோகம்

*ஸிம் ஹப்ரஸேணம் அவதீக ஸிம்ஹோ*
*ஜாம்பவதா ஹத : ஸுகுமார : மாரே (அ)*
*தி : தவ : யேஷ : ஸ்யமந்தக :*

இந்த ஸ்லோகத்தை விநாயகர் சதுர்த்தி அன்று சொல்கிறவர்களுக்கு வருஷம் முழுவதும் எந்த சுக்லபட்ச சதுர்த்தியில் சந்திரனைக் கண்டிருந்தாலும் அந்த தோஷம் நிவர்த்தி அடைகிறது.

# ஆசிச் செய்தி

*"மாசில வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கின வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே"* என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். இறைவனின் திருவடி நிழல் எவ்வளவு இனிமையாது என்பதைப் பாடல் விளக்குகின்றது. இறைவனின் திருவடி நிழலை எவ்வாறு ஒவ்வொரு மனிதரும் அடையலாம் என்பதை இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளில் ஒன்றாகவும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகவும் கொண்டுள்ள சைவ சமயம் வழிகாட்டுகின்றது. நாம் ஒவ்வொருவரும் முதலில் சமய தீட்சை பெற்று சைவர்களாக வேண்டும். பின் சிவன் இருக்கும் ஆலயம் சென்று சரியை, கிரியை முதலிய தொண்டுகளை செய்து கொண்டு வந்தால் எப்பொழுதும் இன்பம் செய்து கொண்டுள்ள அத்திருவடிகளை அனுபவரீதியாக அடையலாம். இறைவனின் திருவடிகளை அடைவதற்கு ஒரு கருவியாக விளங்குவதே ஆலயமாகும். காற்றானது எங்கும் பரவியுள்ளது என்றாலும் அக்காற்றை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி வைப்பதற்கு காற்று அடிக்கும் கருவி தேவைப்படுகின்றது. ஆகவே தான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று சொல்வர்.

ஆலயத்தில் உள்ள இறைவன் திருவுருவத்தில் தயிரில் நெய் எவ்வாறு இருக்கின்றதோ அதே போல் இறைவனின் திருவருட் சக்தியுள்ளது. இறைவனின் திருவருட் சக்தி எவ்வாறு ஆலயங்களில் உள்ளதெய்வத் திருவுருவங்களில் எவ்வாறு எப்படி வருகின்றது. சிவபெருமான் அருளிய 28 ஆகமங்களில் உள்ள ஆகம வடிவினரை ஆகம வினோதராக செய்வதனால் திருவருட் சக்தி உண்டாகின்றது. மின் சக்தி தருகின்ற இயந்திரத்தை எடுத்தோமானால் அந்த இயந்திரத்தை இயக்கக் கூடிய பல அமைப்புக்களால் அது இயங்குகின்றது. அதே போல இறைவனின் திருவுருவத்திற்கு கீழாக மந்திரங்களால் வரையப்பட்ட செப்பு, பவுண், வெள்ளி போன்ற உலோகங்களில் வரையப்பட்ட யந்திரங்கள் வைக்கப்பட்டு அதன் மேல் கருங்கற்களால் செய்யப்பட்ட உருவம் வைக்கப்பட்டு இரண்டுக்கும் இணைப்பாக அஷ்டபந்தனம் என்னும் தேன்மெருகு, கபற்காவி, சுக்கான் கல்லு, சாதிலிங்கம், எருமை வெண்ணெய், செம்பஞ்சு போன்ற 8 பொருட்களால் செய்யப்பட்ட அஷ்ட பந்தனம் சாத்தப்படுகின்றது. அதன்பின் மந்திரம், பதம், வர்ணம், கலை, தத்துவம், புவனம்போன்ற அத்துவாக்களால் அந்த பிம்பத்திற்கு உயிர் ஊட்டப்படுகின்றது. அதன்பின் அவ்வுருவம் திருவருளைப் பெருக்கும் தெய்வீக உருவமாகின்ற தன்மையைப் பெறுகின்றது.

எல்லாம் வல்ல அருள்மிகு கண்ணகாம்பா சமேத கண்ணலிங்கேஸ்வரர் பெருமானின் அருளுக்கு பாத்திரமாகி பதினாறு செல்வங்களும் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

*கும்பாபிஷேக குரு*
*'சிவஞான பாஸ்கரன்', குருவம் சசிகாமணி'*
**சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள்.**
**ஊரெழு**

சிவமயம்

# ஆசியுரை

*மிகவும் பழமை வாய்ந்ததும் திருவருள்*
*சக்தியுடன் கூடியதும் புண்ணிய*
*தீர்த்தஸ்தலமும் சகல வளங்களுடன் சிறந்து*
*விளங்கும் வட்டுக்கோட்டை நகரில்*
*தெக்கணப்பாய் எனும் பதியில் வீற்றிருந்து*
*திருவருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கும்.....*

கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் வெகுதானிய வருடம் ஆனி மாதம் 08ம் நாள் திரயோதசி திதியும் ரோகினி நட்சத்திரமும் சித்தயோகமும் அமையப் பெற்ற (22–06–98) திங்கட்கிழமை பகல் 11 மணி 50 நிமிடம் தொடக்கம் 1மணி 30 நிமிடம் வரையுள்ள கன்னிலக்ன சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இத்திருப்பணியாகிய புண்ணிய கைங்கரியத்தை செய்து முடிக்க உதவிய பெருந்தகைகளுக்கும் பொருள் பணம் மற்றும் பல விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும் பிரதிஷ்டா குருவுக்கும் மற்ற குருமாருக்கும் சிற்ப செல்வர்களான ஸ்தபதிமாருக்கும் கட்டிட வர்ண வேலைக்கலைஞர்களுக்கும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடக்க உதவிய நன்மக்களுக்கும் இந்த கும்பாபிஷேக மலரை மலர வைத்தவர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் எல்லாம் வல்ல கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானின் திருவருளினால் சகல சிறப்புகளுடனும் வாழ்க என வாழ்த்தி எனது நல்லாசியைக் கூறுகிறேன்.

குறிப்பாக இவ்வாலய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக செயற்படும் பரிபாலன சபையினருக்கும் தொண்டர் சபையினருக்கும் எனது நல்லாசியைக் கூறுகிறேன்.

ஷ ஆலய பிரதம குரு
**பிரம்மஸ்ரீ நா. கமலநாத சர்மா.**

# ஆசிச் செய்தி

*பொன்மலைக் கொடியுடைனமர் வெள்ளியம் பொருப்பில்,*
*தன்மையாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்*
*பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணித்தே*
*மன்னமாதவர் தம்பிரான் கோயில் முன்வந்தார்*

*கண்ணலிங்க சமேத கண்ணகாம்பிகை கோயில் வட்டுக்கோட்டை*
*கிராமத்திற்கு ஏன், யாழ்குடா நாட்டிலேயே ஓர் சிறப்பு*
*வாய்ந்த தொன்றாகும். சிவமில்லாமல் சக்தியில்லை,*
*சக்தியில்லாமல் சிவமில்லையென்பது ஓர் முதுமொழி.*
*அம்மையப்பனாக திகழ்கின்ற சிவபெருமான்,*

*அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வப் பொருளாய், வேறாம்,*
*குறியது உடைத்தாய், வேதாகமங்களின் குறியிரந்து அங்கு,*
*அறிவினில் அகளான்மன்னி அம்மையோடு அப்பனாகிச்*
*செறிவொழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.*

*எங்கள் மனமாசு நீங்க, மனவமைதி பெற உறுதுணையாய்*
*நிற்பது சிவசக்தி வழிபாடேயாகும். மனம், வாக்கு, காயம்*
*ஆகியவற்றை ஒருமுகப்படுத்தி அம்மையப்பனை அழுது வேண்டினால்*
*நிச்சயம் எமது பிறவித் தளை அறும்.*

இதைக் கருதி இறைபணியாக எமது கோயில் நிர்வாகம் தேவர்கள் மகிழ, அந்தணர் சிறக்க, மக்கள் சிவனருள் பெற்று பிறவிப் பயன்பெற மேற்படி கோயில் சீர்பெற புனருத்தாரணம் செய்திருக்கின்றது. மிகக் குறுகிய காலத்தில் பாலஸ்தாபனம் செய்து, பல திருப்பணிகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுகமாக நிறைவெய்தி மகா கும்பாபிஷேகம் செய்யப்பெற்று சிவன் திருவருளால் மண்டலாபிஷேகம் நடைபெற்று முடிவாகின்றது. இக்கோயிலில் கண்கொள்ளாக் காட்சி தந்து மக்களனைவரையும் சிவசக்தி கடாச்சம் பெற அழைக்கின்றது.

திரிகரணம் சுத்தியோடு இப்பெருங் கைங்கரியத்தை நிறைவுபெற உழைத்த நிர்வாகத்திற்கும், சிறப்பாக இளைஞர் தம் தொண்டர் சபையூடாக தொண்டு புரிந்தவர்களுக்கும், ஆக்கமும் ஊக்கமும் தந்து நிதியுதவி செய்த அன்பர்களுக்கும் சகல செல்வங்களும் பெற்று சிவசக்தியின் பாதாரவிந்தங்களையடையப் பிரார்த்திக்கின்றேன்.

*ஷ மேற்படி கோயில் நிர்வாக சபைப் போஷகர்*
**கு. சிவசுப்பிரமணியம்.**

சிவமயம்

# ஆசியுரை

கண்ணாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர சுவாமி கோவில் கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை அளிப்பதில் மனமகிழ்வடைகின்றேன். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கமைய எமது சமுதாயத்திற்கு கோயில்கள் இன்றியமையாதன. கோயில்களில் நித்திய நைமித்திய பூசைகள் மட்டுமன்றி குறைந்தது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது குடமுழுக்கு செய்யப்பட வேண்டும் என ஆகமங்கள் கூறுகின்றன.

இக்கோயில் காலத்தால் பழமை வாய்ந்ததும் வரலாற்றுப்பெருமை மிக்கதும் ஆகும். கற்புக்கரசி கண்ணகியின் புகழ்பெற்ற ஆலயங்களுள் இதுவும் ஒன்றாகும். இவ்வாறு புகழ்பெற்ற இவ்வாலயம் வளர்ச்சி பெற்று மேலோங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இவ்வரும்பெரும் கும்பாபிஷேக நன்நாளிலே அனைத்து மக்களும் நோய் நொடியின்றி எல்லா நலன்களுடனும் மனநிறைவான வாழ்வைப் பெற இறைவனை வேண்டுகின்றேன். தீய எண்ணங்களை நீக்கி, அன்பினையும் அருளினையும் எல்லா உள்ளங்களிலும் நிலைநிறுத்த வேண்டியும் எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

(கா. சந்திரராசா)
*பிரதேச செயலாளர்*
*பிரதேச செயலகம்*
*சங் கானை*

# கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை செயலாளர் அறிக்கை

*"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்*

*திண்மை யுண்டாகப் பெறின்"*

என வள்ளுவப் பெருந்தகை கற்பின் பெருமையைப் பகர்ந்துள்ளார் அடக்கம் பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு தொண்டு எனும் அரிய பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கிய கண்ணகி கற்பின் பெருமையால் தெய்வ நிலை எய்தி உலக மக்களுக்கு எல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள் இச் சிறப்பு வாய்ந்த கண்ணகிக்கு வட்டுக்கோட்டையிலே தெக்கணப்பாய் எனும் புண்ணிய பூமியில் கோயில் கட்டி வழிபட்டு வந்தனர்.

இவ்வாலயத்தை போர்த்துக்கீசர் இடிக்க முற்பட்ட போது இவ்வூரவர் இது மாதா கோயில் என கூறியதால் இடிக்காது வணங்கிச் சென்றனர். இச் சம்பவமானது அம்பாளின் அருளாட்சியையே குறிக்கின்றது. இவ்வாறாக பல அற்புதங்கள் நிகழ்ந்த இவ்வாலயத்திலே பல கும்பாபிஷேகங்கள் நிகழப்பெற்று இறுதியாக 1978ம் ஆண்டு திருப்பணிச் சபையால் மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு திருப்பணிச் சபையே பரிபாலன சபை எனப் பெயர் மாற்றம் பெற்று ஆலய பரிபாலனத்தையும் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறாக ஆலய பரிபாலனத்தையும் மேற்கெண்டு வரும் வேளையில் சில குறிப்பிடத்தக்க திருப்பணி வேலைகளையும் மேற் கொண்டோம். குறிப்பாக நூறு வருடத்திற்கு மேற்பட்ட பழைய குதிரை வாகனத்தை திருத்தி புதுப் பொலிவுறச் செய்தமை ஆலயத்திற்கென சொந்தமாக ஒரு சகடையும் கட்டுத்தேரும் செய்தமை, வயிரவ மண்டபத்தை அறிக்கைபடுத்தி ஓடு போட்டமை, நித்திய பூசைகள் உற்சவங்கள் இடையூறின்றி நடக்க வழிவகுத்தமை ஆலய எல்லைகளை பலப்படுத்தியமை போன்ற திருப்பணிகளை எல்லாம் வல்ல கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரரின் திருவருளினாலே சிறப்பாக நிறைவேற்ற முடிந்தமையை இட்டு திருப்தியுறுகிறோம்.

இவ்வாறாக ஆலய பரிபாலனத்தை மேற்கொண்டு வரும் போது இவ்வாலயத்திலே கும்பாபிஷேகம் நடைபெற்று இருபது ஆண்டுகளாவதை உணர்ந்த அடியார்களும் பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும் அடுத்த திருப்பணியாக பாலஸ்தாபனம் செய்து ஆலயத்தை புணரமைத்து மகாகும்பாபிஷேகம் செய்ய தீர்மானித்தோம் இதன் பிரகாரம் ஊரெழு வாகீசக் குருக்கள் ஐயாவினாலேயே பாலஸ்தாபனம் செய்து கும்பாபிஷேகம் செய்விப்பதெனவும் தீர்மானித்து நடைமுறைப்படுத்தினோம். இம் முயற்சிக்கு எமது ஆலய குரு பிரம்மஸ்ரீ நா. கமலநாத சர்மாவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய வைகாசி மாதம் 8ம் நாள் (22-05-98) வெள்ளிக்கிழமை காலை 7.33 மணி தொடக்கம் 9.32 மணி வரையுள்ள மிதுன லக்கின சுப வேளையில் பாலஸ்தாபனம் நிகழ்ந்தது. இதன் பின் கும்பாபிஷேகத்தை

விரைவில் நடாத்துவதற்கான திகதியாக 22–06–98 ஐ இறைவன் திருவருள் துணையுடன் சபையினரும் குருக்கள் ஐயாவும் ஆலய குருவும் தீர்மானித்தோம்.

இவ் ஒரு மாத காலத்துள் சிலர் சில வேலைகளை உபயமாகப் பொறுப்பேற்றும் குறிப்பாக விநாயகர் தூபி மூலஸ்தான தூபி, கண்ணகி அம்மன் தூபி, நடேசர் தூபி, மணிக்கூட்டு கோபுரம் ஆலய முன் முகப்புப்படம் நந்தி பலிபீட கட்டிடம் லிங்கோற்பவ மூர்த்தி மாடம் கண்ணகி அம்மன் மண்டப மாபிள் பதித்தல் மகா மண்டப முன் முகப்பு வர்ணவேலை வசந்த மண்டப நில வேலையும் மாபிள் பதித்தலும் வசந்த மண்டபத்தின் முன் மண்டப நில வேலைகள், இயந்திர அன்பளிப்பு முன் முகப்பு அலங்கார வளைவு தம்ப விநாயகர் நீர்மாணிப்பு, கலசம் முலாம் பூசுதல் போன்ற உபயங்களையும் ஏனைய மெய்யடியார்கள் தம்மால் இயன்ற பண உதவி, பொருள் உதவி, சரீர உதவி என்பவற்றை மனங்குளிர கை நிறைய வாரி வழங்கியதன் பயனாக 1998ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தை இவ்வாலய அடியார்கள் கண் குளிரக் கண்டு எல்லாம் வல்ல கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானின் கிருபா கடாட்சம் பெற்றுய்ய உதவினார்கள். மற்றும் கொழும்பிலும் வெளிநாட்டிலும் உள்ள கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர மெய்யடியார்கள் தம்மால் இயன்ற பண உதவி வழங்கியதற்கும் அங்கெல்லாம் பணம் சேகரித்து அனுப்பி வைத்ததிற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறாக பண உதவி, பொருள் உதவி, மற்றும் சரீர உதவி வழங்கிய அனைவருக்கும் எல்லாம் வல்ல கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரரின் கிருபா கடாட்சம் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழப் பிராத்திக்கிறோம்.

குறிப்பாக இவ்வாலய தொண்டர் சபை இளைஞர்கள் இவ்வாலய வளர்ச்சியில் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டு தொண்டு செய்கிறார்கள் இக் கும்பாபிஷேகம் மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக நடாத்த முன்னின்று உதவி புரிந்தமை பாராட்டிற்குரியது. அரும்பாடுபட்டு மண்டலாபிஷேகம் முழு மண்டலமாக (48 நாட்கள்) நடாத்த உதவினர். இக் கும்பாபிஷேக மலர் வெளியிடுவதற்கு முன்னின்று உழைத்த தொண்டர் சபையினருக்கும் அவர்களுடன் தோளோடு தோள் நின்று உதவி புரிந்த கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர மெய்யடியார்கட்கும் நன்றி கூற கடமை பட்டுள்ளோம்.

மண்டலாபிஷேக காலத்தில் பொருட்களை வழங்கியோர் குறிப்பாக தம்பவிநாயகர் கவசம், திருவாதி, ஆசனத்தகடு கண்ணகி அம்மன் கிரீடம் கற்பூரம் கொழுத்தும் தாங்கி, அபிஷேக ஆசனதட்டு வழங்கியோர் மண்டலாபிஷேக உபயகாரர் மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெற உதவியோர் எல்லோரும் சீரும் சிறப்பும் பெற்று வாழப் பிரார்த்திக்கிறேன்.

**இங்ஙனம்**
**திரு. வ. அமிர்தலிங்கம்**
***பரிபாலன சபை, செயலாளர்.***

# எல்லாம் இறைவன் செயலே !

*காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி*
*ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது*
*வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சி வாயவே.*

கடந்த பல வருடங்களாக, எமது மக்கள் பட்ட இன்னல்கள் ஏராளம். சுகம் சொத்து, உறவு, வழிபாடு செய்து வந்த ஆலயம் எல்லாவற்றையும் விட்டு சிதறி ஓடியதும், பின்னர் திரும்பவும் எமது வீடு, எமது மண், ஆலயம் என்று திரும்பி வந்ததும் எல்லாம் இறைவனின் திருவருள்தான். இவ் அனுபவங்களால் நாம் படித்தவை ஏராளம். எனவே இறை நம்பிக்கையுடன் நல்லனவற்றை நினைக்கவும், நல்லனவற்றைச் செய்யவும், பொதுத்தொண்டு, ஆலயத்தொண்டு முதலானவற்றைச் செய்யவும் நாம் பழகிக் கொள்வோம்.

இன்றைய நிலையில் மக்கள் எல்லோரும் சாந்தியும், சமாதானமும் வேண்டி நிற்கிறார்கள். அடியார்களும் எமது பரிபாலன சபையினரும் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரரின் கும்பாபிஷேகம் செய்வதன் தேவையை உணர்ந்து, ஆலயத்திருப்பணி வேலைகளைப் பூர்த்திசெய்து, ஆலயத்தைப் பொலிவுறச் செய்து, மனங்குளிரவும், கண்குளிரவும் கண்டுகளிக்க ஆசைப்பாட்டார்கள். இப்புனித கைங்கரியத்தை நிறைவு செய்வதற்கு அம்மை அப்பனின் திருவருளும் கிடைத்தது. எமது ஆலய தொண்டர் சபைப் பிள்ளைகளின் மூச்சில் திருவருள் சக்தியாகத் தோன்றி அவர்களின் அயராத முயற்சியாலும்; உழைப்பாலும் வேண்டிய பண உதவியைக் கூடுதலாக உள்ளூரிலேயே சேகரித்தும் வெளிநாடுகளில் இருந்து கிடைத்த பண உதவியையும் சேர்த்து திருப்பணி வேலைகளை மிகவும் குறுகிய காலத்திற்குள் எமது ஒத்தாசையுடனும் மற்றும் தொண்டர்களின் உதவியுடனும் திருப்பணி வேலைகளைச் செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது.

22.05.1998 அன்று பாலஸ்தாபனமும், 22.06.1998 அன்று சுபநேரத்தில் பிரதம குருக்களினதும், கோவில் குருக்களினதும் ஆசியுடன் மகாகும்பாபிஷேகம் மங்களவாத்தியங்களுடன் மிகவும் சிறப்பாக அடியார்கள் மெய்சிலிர்க்க நடைபெற்றது. இந்த நன்நாள் வழமையாக எமது ஆலய கொடியேற்றத் திருநாளாக அமைந்தது, ஓர் அற்புதம் தானே. இதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் முறையாக இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. ஆவணிமாதம் 08.08.1998 அன்று மகா சங்காபிஷேகமும் நடைபெறத் திருவருள் கிடைத்தமையும் ஓர் அற்புதம் தானே.

இப்புண்ணிய திருப்பணி வேலைகளைச் செய்து முடிக்க முன்வந்து பொருளுதவி, பணஉதவி, சரீரஉதவி செய்த சகல பெருமக்கள் எல்லோருக்கும் இறைவன் ஆசி வேண்டியும், பரிபாலன சபையோரின் சார்பில் அம்மை அப்பனின் திருத்தாள் பணிந்து எல்லோருக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன்.

*பரிபாலன சபைத்தலைவர்,*

**இ. பொன்னுராசா.**

## திரு. து. பாக்கியநாதன் சட்டத்தரணியும், சத்திய ஆணையாளரும், பிரசித்த நொத்தாரிசும் மூளாய் - வீதி வட்டுக்கோட்டை அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

*'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்*
*திண்மை உண்டாகப் பெறின்'*

என திருவருள் கற்பின் பெருமையைப் பகர்ந்துள்ளார். அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு என்னும் அரிய பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கிய கண்ணகி கற்பின் பெருமையால் தெய்வநிலை எய்தி உலகத்து மாந்தரின் உள்ளங்களிலெல்லாம் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றாள். பண்டைத்தமிழ் மன்னர்களின் காலத்திலிருந்து சீரோடு வழிபாடு நடைபெற்றுவரும் ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். கற்புக்கரசியான கண்ணகியின் பெயர்தாங்கி ஆலயங்கள் சிலவே யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன. அத்தகைய ஆலயங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது இவ்வாலயமே.

ஆலங்களில் நடக்கும் கிரியைகளுள் மிகவும் முக்கியமானதான மண்டலாபிஷேகம் இவ்வாலயத்தில் 48 நாட்களாக முறையாக நடைபெறுவது மிகவும் சிறப்பானதாகும். இம்மண்டலாபிஷேகத்திற்கு குடங்களில் நீர் எடுத்து இறைவனுக்கு நிருமுழுக்காட்டுவது விசேடமானதாகும். தீய எண்ணங்கள் நீங்கவும், கல்வி, செல்வம், சீரியவாழ்வு பொருந்தவும், சாந்தம், தயை, பொறை, அருளுடைமை என்பன பொருந்தவும் எல்லாம் வல்ல கண்ணகி அம்பாள் ஒவ்வோர் அன்பர் உள்ளங்களை வழிப்படுத்த வேண்டியும், சகல மக்களும் சிறந்து வாழவும் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்.

# நல்லாசி

பழமை பொருந்திய புதுமை மிக்க கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும் இறுதி மண்டலாபிஷேக வைபவத்திலே சமர்ப்பிக்க இருக்கும் இதழில் அடியேனின் சில வரிகள் அடங்குவதில் நல்ல பாக்கியம் என கருதி எல்லாம் வல்ல அகிலாண்ட நாயகியின் அருளை வேண்டி இறைஞ்சி நிற்கும் பக்த கோடி மக்களுக்கும் திருகடாட்ச பேறு கிடைக்க எனது நல்லாசிகள்.

சரித்திர முக்கியத்துவம் பெற்ற இவ்வாலயத்தை போர்த்துக்கீசர் தகர்க்க எத்தனித்த காலத்திற்கு முன்பு கூட இன்றும் அன்றும் என்றென்றும் அடியார்களுக்கும், கிராமவாசிகளுக்கும் நல்அருளை குன்றாது பாலித்து வருவதை உணர முடிகிறது.

ஒவ்வாத சூழ்நிலை, சிக்கல்கள், சிரமங்கள், மத்தியிலும் உயர்நிலை, விமோசனம், பக்தி அருளையும், கீர்த்தியையும் பூரணமாகச் சொரிகிறாள். எல்லாம் வல்ல அம்பாள் நம்பி விசுவாசத்துடன் அணுகிற பக்தர்களுக்கு பல நாடுகளிலுள்ள ஆலயங்களை தரிசிக்க அடியேனுக்கு வாய்ப்பை அளித்த பேறினால் பிரசித்தி பெற்ற ஆலங்களில் வீற்றிருக்கும் விக்கிரகங்களும், இவ்வாலய விக்கிர அமைப்பும் அனுபவம் வாய்ந்த சிற்பாசாரியின் சிறந்த கை வண்ணமே எனக் கூறலாம்.

சில வாரங்களுக்குள் இந்த ஆலயத்தை புனரமைத்து புதிதாக இருவிக்கிரங்களை பிரதிஷ்டை செய்து பல்வேறு விதத்தில் மெருகூட்டி உதவி புரிந்தவர்களுக்கும் பணம், பொருள், உதவி புரிந்தவர்களுக்கும், ஆலய பரிபாலன சபைக்கும், தொண்டர் சபைக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொண்டு ஆன்மீக வழிபாட்டில் தொண்டாற்றும் பலருக்கும் காரண காரிய விதியும் சிருஷ்டியின் நியமனமும் அமையட்டும் செழுமையுடன்.

*இப்படிக்கு,*

ஹலக் விசுவநாதன்

உ

*சிவமயம்*

*ஓம்*

# வட்டுக்கோட்டை-மேற்கு-மூளாய் வீதி தெக்கிணப்பாய்

## கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் சரணம்

### பிள்ளையார் துணை

1. முன்பு முதியோர் பணிந்துற்ற மூளாய் வீதித் தெக்கிணப்பாய் பதிதனில்
பின்பு அடியார் தொழுதேற்ற பெருமான் கண்ணலிங் கேஸ்வரர்
அன்பு பெரு அன்னை கண்ணகாம்பிகையுடன் அருள்தரும் பாங்கினையே
என்பு உருகப் பாடிடவே எடுத்தடி தருவாய் உடுக்கியவளைப் பிள்ளையாரே.

### கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் துணை

2. ஆதி நாயகன் அடியார்க்கு அருள்ரூபன் ஆனந்தமயச்
சோதி வானவன் சொற்றுடைப் பொருள்வேதன் சுந்தரப்
பாதி உடலினில் பரம்சக்தி கண்ணகாம்பிகைதனைப்
போதித்திடும் ஐயன் பெரும் தெக்கிணப்பாய் கண்ணலிங் கேஸ்வரர் சரணே.

3. அன்றே கோயில் கொண்டாய் அரும்பெரும் தெக்கிணப்பாய்ப் பதியினில்
நின்றே அருட்சக்தியாய் நித்தியபூரண கண்ணகாம்பிகையாயே
ஒன்றே உமை அம்மையாய் உயிரினிற் கலந்து ஒளியாய் விளங்கும்
குன்றே குலவிளக்காய், குவலயத்தின் மாதாவே, கும்பிடுவோம் தாழ்தனையே.

*குறிப்பு : இவர் ஆலயத்தைப் பற்றிப் பல பாடல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*ஆக்கியோன்*
**முருகேசு சவுந்தர சண்முகநாதன்**
*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை*

# நம் கடன் பணி செய்து கிடப்பதே!

*"பண்ணின் பயனாம் இன்சுவையும்*
*பாலின் பயனாம் இன்சுவையும்*
*கண்ணின் பயனாம் பெருகொளியும்*
*கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்*
*விண்ணின் பயனாம் பொழிமழையும்*
*வேதப் பயனாம் சைவமும் போல்*
*மண்ணின் பயனாம் அப்பதியின்*
*வளமும் சிறப்பும் வரம்புடைத்தோ"*

என்று 'உலகெலாம்' எனத் தொடங்கி 'உலகெலாம்' என முடிந்து பக்திச் சுவை நனி சொட்டும் ஓர் அற்புதக் காவியம் படைத்த சேக்கிழார் பெருமான் கூறியருளியபடி வேதப் பயனான சைவம் ஓங்கவும் மண்ணின் பயனான இவ்வூரின் வளமும் சிறப்பும் வரம்பில் ஆகவும் இலங்கையின் யாழ் குடாநாட்டிலுள்ள வட்டு மாநகரின் தெக்கணப்பாயில் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் தேவஸ்தானம் அமைந்துள்ளது. இப்பதிக்கே பெரும் சிறப்பினைத் தேடித்தந்த வரலாறும் இவ்வாலயத்திற்குண்டு. இவ்வாலயமானது போர்த்துக்கேயர் காலத்தில் பல சைவ ஆலயங்கள் இடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட போதும் அவர்களால் அழிக்கப்படாத பெருஞ் சிறப்பினைப் பெற்ற மிகவும் தொண்மை வாய்ந்த ஆலயமாகக் கருதப்படுகின்றது.

இவ்வாலயத்திலே எழுந்தருளியிருக்கும் அம்பாளான கண்ணகி சாதாரண மனிதர்களைப் போன்ற உலகிலே தோன்றி இல்வாழ்க்கை நடாத்திப் பெருஞ் சோதனைக்களுக்குகெல்லாம் உட்பட்டுப் பின் தெய்வநிலைக்கு உயர்த்தப்பட் சாதாரண மனிதப் பெண் ஆவாள். தனது வாழ்க்கையில் பல இன்னல்களை எதிர் நோக்கிய போதும் தன் கற்பினின்றும் வழுவாது கணவனையே கண்கண்ட தெய்வமாக மதித்து மனதில் போற்றி வாழ்ந்து இறுதியில் தனக்கு நேர்ந்த கொடுமைக்கு அறக்கடவுளிடம் நீதி கேட்டு,

*"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யு மழை"*

என்று வள்ளுவரின் குறளுக்கு ஏற்றபடி அக்கினி தேவனுக்குக் கட்டளையிட்டு மதுரை மாநகரினையே தீக்கரையாக்கியவள். இத் தண்டனையைக் கூட அறநெறி வழியேதான் வழங்கியமை அவளின் நீதி வழுவாத திறத்தினையே எமக்கு எடுத்தியம்புகிறது.

இத்தகு சிறப்பினை உடைய கண்ணகியின் ஆலயம் எழுந்தருளியிருக்கும் இடங்கள் மிக அரிதே. இவ்வகையில் வட்டு மாநகரிலே எழுந்தருளியிக்கும் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் அண்மையில் மிகக் குறுகிய கால எல்லைக்குள் புனரமைக்கப்பட்டு 22.06.1998 அன்றைய சுபவேளையிலே மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக கண்ணாற் காணுதற்கரிய காட்சியாக கண்டவர் மெய்சிலிர்த்து கண்கள் ஆனந்த பரவசத்தினால்நீர் மல்கிட வைத்த திருவருள் சக்தி நிறைந்த காட்சியாக நடந்தேறியமையை எண்ணும் போது இத்திருவருள் அம்மையின் அரும்பெரும் அருட்சக்தி வெளிப்பாடென்றே கூறவேண்டும்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற மணிவாசகரின் கூற்றுப்படி யாவும் நடைபெற்று முடிகின்றன என்றால் அதுவும் அவள் அருள் தானே !

இவ்வாலயத்தின் பாலஸ்தாபன, கும்பாபிஷேக, மண்டலாபிஷேக மற்றும் வருடாந்த மகோற்சவங்கள் சிறப்புற நடைபெறுகின்றனவென்றால் இவ் வைபவங்களை முறைப்படி ஆரம்பித்துப் பின்பு அவற்றைத் திட்டமிட்ட ஒழுங்குமுறையில் நிறைவேற்றுவதிலும் அதற்கான சரீரத் தொண்டுகள் ஆற்றுவதிலும் இக்கோயிலின் தொண்டர் சபையினரின் முன்னின்று ஆற்றும் பெரும் பணியே காரணமாம். இவர்களின் சுறுசுறுப்பினையும் காரியங்களை நிறைவேற்றும். ஆர்வத்தினையும் 'அதிலும் மனத் திருப்தி ஏற்படும் வகையில் திட்டமிட்டு "வறுமையிலும் செம்மை" என்ற முதுமொழிக்கு ஏற்பக் காரியங்களை நிறைவுடன் ஒழுங்குபடுத்தும் திறனையும் நாம் கண்கூடாகவே காணக் கூடியதாகவுள்ளது. ஏனெனில் சாதாரண அழகுடன் இருந்த அம்மன் ஆலயத்தைத் "தேய்த்தெடுத்த செப்பு விளக்கு" போன்று அதீத அழகுடனும் பொலிந்த தோற்றச் சிறப்புடனும் ஆக்கிக் காண்போரின் கண்ணைக் கவர்ந்து பரவசமாக்கிய பெருமை, குறுகிய காலத்தில் திருத்த வேலைகளைத் திறம்பட முடித்தமை போன்றன நாம் நேரிடையாகக் கண்கண்ட செயல்களே! இவர்களுக்கு இணை இவர்களே தான் !

இன்னும் தொண்டர் சபையுடன் ஒத்தாசையாக நின்று பல வழிகளிலும் உதவிய பரிபாலன சபையினரின் பங்கும் அளப்பரியதே. அத்துடன் இம்மகா கும்பாபிஷேகத்தில் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்றதற்கிணங்க சிறிதளவிலோ முடிந்தளவு பெருமளவிலோ பல்வேறு வகைப்பட்ட நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி ஆற்றியவர்களின் சேவைகளும் சொல்லற்கரிதாம். இந்நேரத்தில் இவ்வாலய நித்திய வளர்ச்சியில் நித்திய சேவையாளனாக இருந்து மறைந்த அம்பாள் அடியார் வயிரவநாதர் முருகேசு செல்லத்துரை அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூருதலும் எம் கடமைப்பாடன்றோ!

இவ்வகையில் வெகு சிரமத்தின் மத்தியிலும் குறுகிய காலப்பகுதியில் வெகு சிறப்புடன் கும்பாபிஷேகத்தை மட்டுமல்லாது தொடர் வைபவங்களான மண்டலாபிஷேகம் சங்காபிஷேகம் போன்றவற்றையும் நிறைவேற்றத் திருவருள் பாலித்த அம்மை அப்பனை நாம் சிரம்தாழ்த்தி வணங்குவோமாக ! இத் தொடர் உற்சவத்தில் சகல பங்களிப்பினை நல்கியோருக்கும், வருகை தந்து அம்பாளின் பாதங்களைப் பணிந்தோருக்கும் இன்னும் அம்மையை நாடிவரவுள்ள பக்தர்களுக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க மிகவும் பணிவன்புடன் அன்னையை வேண்டுவோமாக !

*"தினம் தினம் அவனின் திருவடி நினைந்து துதித்திட நாமே*
*சினமது எல்லாம் சிந்தையிலிருந்து சிதைந்திடும் தானே*
*வனமதில் உறையும் விலங்கு போலன்றி வாழ்ந்திட நாமே*
*தனமது கிடைத்தால் தர்மங்கள் செய்து தழைத்திடுவோமே"*

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !*

***சைவ மகளிர்,***
***மூளாய் வீதி,***
**வட்டுக்கோட்டை.**

# கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வரலாறு

*"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"*
*"கோயில் அழியக் குடியும் அழியும்"*

என்பவை எமது முன்னோர் வாக்கு இதற்கமைய இன்றைக்கு ஏறக்குறைய 750 ஆண்டுகளுக்கு முன் வட்டுக்கோட்டையில் தெக்கணப்பாய் என்னும் புண்ணிய பூமியில் இவ்வாலயம் அமைத்து வழிபட்டு வந்தனர், இதனால் இவ்வூர் சிறப்படைகிறது.

ஆரிய மன்னர் ஆட்சிக் காலமாகிய கி.பி. 13ம் நூற்றாண்டில் தென் இந்தியாவிலுள்ள திருவையாறு என்னும் இடத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த இராமநாதபட்டர் என்னும் பக்தர் வட்டுக்கோட்டையின் மேற்குப் பகுதியிலே குடியேறினார். இவர் வேதம், ஆயுள்வேத மருத்துவம் இவற்றில் விற்பன்னர் ஆவார்.

சிவபத்தரான இவருக்கு இறைவன் திருக்குறிப்பு காட்ட இவர் தெக்கணப்பாய் எனும் புண்ணிய பூமியில் கண்ணகி அம்மனுக்கு கோவில் அமைத்து பூசை வழிபாடு செய்து வந்தார். இவ்வூர் மக்களும் சக்தியை வழிபட்டு சகல சித்தியும் பெற்றனர்.

தென்னிந்தியாவிலிருந்து கண்ணகி வழிபாடு இலங்கையின் வடபாகத்திற்கு வந்தபோது முதலில் நயினாதீவிற்கும் தொடர்ந்து புங்குடுதீவிற்கும் பரவி அங்கிருந்து வட்டுக்கோட்டைக்கும் பரவியது. இங்கு தெக்கணப்பாய் பகுதியில் கோயில் கொண்ட பின் நவாலியிலுள்ள களையோடை எனும் பதியில் கோயிலமைந்து அங்கிருந்த மட்டுவிலுக்கும், முல்லைத்தீவிற்கும் பரவியது என ஆன்றோர் கூறுவர்.

கூழங்கை சக்கரவர்த்தி காலத்தில் 13ம் நூற்றாண்டின் மத்திய பகுதி (1240ம் ஆண்டளவில்) மந்திரிசபையில் அங்கம் வகித்த வேதிய விற்பன்னர் சுப்பிரமணிய சாஸ்திரியும் அவர் முன்னோரும் பின்னோரும் இக் கோயிலை பராமரித்தனர். காசிப கோத்திரமும் மந்திரியும் ஆன சுப்பிரமணிய சிவாச்சாரியார் ஆகியோர் இக் கோயிலை பராமரித்தார்கள். இவர்கள் அம்மை மீது பாடலைப் பாடித் தொழுதனர்.

1513ம் ஆண்டளவில் பிரமஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் கோயிலைத் திருத்திப் பெரிதாகக் கட்டினார். ஆலயத்தில் பூசைகள் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. 1505ம் ஆண்டு இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் 1597ம் ஆண்டு கோட்டை இராச்சியத்தை பெற்ற பின் 1619ம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தையும் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். 37 ஆண்டுகள் அரசாண்ட இவர்கள் தம்மதத்தைப் பரப்பும் ஆவலில் சைவக்கோயில்களை இடித்து அழித்து தம் வணக்க தலங்களை தாபித்தனர். ஏறக்குறைய 1621ம் ஆண்டளவில் இக்கோயிலையும் அழிக்க வந்த பொழுது இவ்வூரிலிருந்த அறிஞர்கள் அண்டமனைத்திற்கும் அன்னையாக (மாதாவாக) விளங்குபவள் எழுந்தருளியுள்ள ஆலயமாதலால் இக்கோயில் மாதா கோயில் என்று கூறினர். மாதா என்ற நாமத்தைக் கேட்டதும் தாம் வணங்கும் மாதாவே இங்கு எழுந்தருளியுள்ளதாக எண்ணி ஆலயத்தை அழிக்காது வழிபட்டு சென்றனர். இதனால் இக்கோயில் அழிவிலிருந்து தப்பியது. இச் சம்பவத்தினால் இக்கோயில் மாதாங்கோவில் என்றும் அழைக்கப்படுகிறது.

1865ம் ஆண்டளவில் இக்கோயிலின் மேற்கு வீதியில் திருக்குளங்களும், இளைப்பாறு மண்டபங்களும், மடமும் திருக்கோயிலைப் பரிபாலித்து வந்த நாகேசையர் சிவசுப்பிரமணியக் குருக்களினால் கட்டப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவசமய புரட்சியினை மக்கள் ஏற்றுக் கொண்டதன் பயனாக கண்ணகி வழிபாடு யாழ்ப்பாணத்தில் மிகக் குறைந்தது இத்தாக்கம் இவ்வாலயத்திற்கும் ஏற்பட்டது எனலாம். 1882ம் ஆண்டு நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்கள் கோயிலைத் திருத்திக் கட்டி மூலஸ்தானத்தில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து கண்ணலிங்கேஸ்வரர் என நாமம் சூட்டினார். முன்பு மூலஸ்தானத்தில் வீற்றிருந்த கண்ணகை அம்மன் தெற்கு வாயில் (வடபாகத்தில்) பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

1882ம் ஆண்டு கும்பாவிஷேகம் சிறப்பாக நடைபெற்றதை தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற தொடங்கின. அன்று தொட்டு இன்று வரை அம்பாள் கால்சிலம்பை கையில் ஏந்திக் காட்சி அளித்து அருள் பாலித்து வருகிறார். நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்களை நாவன்னா ஐயர் எனவும் அழைத்தனர். இவர் இத்தலத்திலுள்ள இறைவன் இறைவி மீது பல பாடல்கள் பாடியும் திருவூஞ்சல் பாட்டுகளும் அக்காலத்திற்கு உரிய எச்சரிக்கை ஏசல், பராக்கு லாலி கப்பல்பாட்டு போன்ற பாடல்களையும் பாடியுள்ளார். இவரின் திருக்குமாரர் ஆகிய ஆனந்த சுப்பிரமணிய சர்மா காலத்தில் 1930ம் ஆண்டளவில் இவ்வூரில் வாழ்ந்த கா. சுப்பிரமணியம் என்ற அடியவர் வசந்த மண்டபம், தெற்கு மண்டபம், மணிக்கூட்டு கோபுரம் ஆகியவற்றை கட்டி கோயிலை விஸ்தரிக்கும் பணியினை செய்தார். இச்சமயம் நடராஜர் அம்பாள் திருச்சொரூபங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அத்துடன் வடக்குப் பக்கத்தில் இன்னும் ஒரு திருக்குளம் அமைக்கப்பட்டது.

பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியாரின் பரம்பரையின் ஒருவரான பல்கலை வல்லுனர் பிரம்மஸ்ரீ க. குருமூர்த்திக் குருக்களால் ஆலயம் பரிபாலிக்கப்பட்டது. இக் கோயிலில் பரம்பரை பரம்பரையாக திருவிழாக்களையும், தொண்டுகளும் செய்து வந்த வேளாள குலத்தினர் பிரம்மஸ்ரீ க. குருமூர்த்தி குருக்களின் அனுசரணையுடன் 1975ம் ஆண்டு ஆனி மாதம் 29ம் திகதி திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டது.

தலைவர் :– திரு. க. சிவசுப்பிரமணியம்
செயலாளர் :– திரு. க. ஆனந்தராசா
பொருளாளர் :– திரு. க. கந்தையா
போசகர் :– பிரம்மஸ்ரீ க. குருமூர்த்தி குருக்கள்

திருப்பணிச் சபை ஸ்தாபகரும் வெளிநாட்டு பிரதிநிதியுமான திரு. ச. நவரத்தினம் இவர்களை உள்ளடக்கிய பதின்மூன்று பேர் கொண்ட நிர்வாகசபை அமைக்கப்பட்டது. இத்திருப்பணிச்சபையால் கோயில் புனர்நிர்மாணம் செய்த சர்வமங்கள காலயுக்தி வருடம் உத்தராயன காலம் கிரிஷ் மருகு மிதுன மாதம் ஆனி 28ம் திகதி (12–07–1978) வளர்பிறை சப்தமித் திதி உத்தர நம்சத்திரம் புதன் கிழமை இவை கூடிய சுப தினத்தில் காலை 6மணி முதல் 6–18 மணிவரையுமான மிதுனலக்கின சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து திருப்பணி வேலைகளையும் ஆலய பரிபாலனத்தையும் இச்சபையே மேற்கொண்டு வந்தது. 1983ம் ஆண்டு வைகாசி மாதம் இவ்வாலயத்தின் பொதுக்கூட்டத்தில் திரு. பிரம்மஸ்ரீ க. குருமூர்த்தி குருக்கள் அவர்களின் பிரேரணைப்படி திருப்பணிச்சபை பரிபாலன சபை எனப் பெயர் மாற்றப்பட்டது.

தலைவர் :– திரு. எஸ். தில்லையம்பலம்
செயலாளர் :– திரு. இ. ஆனந்தராசா
பொருளாளர் :– திரு. கா. செல்வநாயகம்
போசகர் :– பிரம்மஸ்ரீ க. குருமூர்த்தி குருக்கள்

இவர்கள் அடங்கலாக பத்தொன்பது பேர் அடங்கிய நிர்வாகசபை உருவாக்கப்பட்டது. இச்சபையே பிரம்மஸ்ரீ க. குருமூர்த்தி குருக்களின் மறைவின் பின்பு கோவிலை பரிபாலித்து வந்தது. இக்கால கட்டத்தில் கண்ணகை அம்மன் (1986ம் ஆண்டு) இலுப்பையடி வைரவர் கோவிலில் கன்னி வாழை வெட்டும் உற்சவம் பல வருடத்தின் பின் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் சிவராத்திரி உற்சவம், சோமவார உற்சவம் கண்ணகை அம்மன் பவனி வரும் தேர் பெண்கள் இழுத்தல் என்பன ஆரம்பமாகியது.

1970ம் ஆண்டு ஆனி மாதம் இளைஞர்களை கொண்ட தொண்டர் சபை பரிபாலன சபையின் ஒரு அங்கமாக உருவாக்கப்பட்டது.

இவ்வாலய வைரப்பெருமான் வரலாறு ஆனது ஏறக்குறைய 80 ஆண்டுகளின் முன் இவ்வாலய பக்தர் ஒருவரின் வீட்டில் வழிபாடு செய்யப்பட்டுவந்த வைரவப் பெருமான்அவ் அடியவரின் கனவில் தோன்றி தான் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு செல்வதாகவும், அவ்வாலயத்திற்கு தான் சென்றதன் அறிகுறியாக அவ்வாலயத்தில் இருக்கும் இலுப்பைமர கொப்பு (கிளை) முறிந்து விழும் என்றும் கூறினார். எனவே அவ்விடத்தில் வைரவப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பிரம்மஸ்ரீ க. குருமூர்த்தி குருக்களின் மறைவின் பின் அவரின் மகளாகிய திருமதி ச. நாகம்மா அவர்களினால் ஆலய பரிபாலன சபைக்கு ஆலயத்தை பரிபாலிக்கும் உரிமை சட்டபூர்வமாக வழங்கப்பட்டது.

1984ம் ஆண்டு இந்த சமய திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை திருநாட்டின் இந்துகோயில் என்ற நூலின் 61ம் பக்கத்தில் இவ்வாலயம் பற்றி பின்வரும் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. மூலமூர்த்தி சிவன் அம்பாள் பெயர் கண்ணகாம்பிகை பரிவாரமூர்த்திகள் பிள்ளையார் நடேசர். ஆனி மாதத்தில் கொடியேறி திருவிழா பத்து நாட்கள் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்துக்கு அருகில் தனியாக வைரவ சுவாமிக்கு கோவில் உண்டு. வருடாந்த உற்சவம் ஆனி உத்தரத்தை தீர்த்தமாகக் கொண்ட பத்து நாள் உற்சவம் இடம்பெறும். தைப்பொங்கல் விழாவும், மகா சிவராத்திரி, பங்குனித் திங்கள் பொங்கல், வருடப் பிறப்பு, ஆடிப்பூர சங்காபிஷேகம், நவராத்திரி, சோமவாரம், விளக்கீடு, திருவெம்பாவை போன்ற உற்சவங்கள் நடைபெறுவது வழக்கம். செவ்வாய் கிழமைகளில் பஜனை நடைபெறுவதும் வழக்கம்.

நம் முன்னோர் காலத்தில் சமய அறிவை வளர்க்க வல்ல கண்ணகி காதை, மார்க்கண்டேயர், திருத்தொண்டர் போன்ற நாடகங்களும் ஆலய 'நிர்வாகஸ்தவராக இருந்தவருமான அமரர் திரு. வ.மு. செல்லத்துரையும் கூறியுள்ளார்கள். திருவெம்பாவை காலத்தில் திருவாதவூரர் புராணம் படிப்பது வழக்கம்.

இவ்வாலயத்திலே மகாகும்பாபிஷேகம் செய்யும் நோக்கோடு வைகாசி மாதம் 8ம் நாள் 22.05.98 வெள்ளிக்கிழமை காலை 7.33 – 9.32 வரையுள்ள மிதுன லக்கின சுபவேளையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஒரு மாதத்தில் வெகுதானிய வருடம் ஆனி மாதம் 8ம் நாள் திரயோதசி திதியும் ரோகினி நட்சத்திரமும், சித்தயோகமும் அமையப்பெற்ற 22–06–98 திங்கட் கிழமை பகல் 11மணி 50 நிமிடம் தொடக்கம் 1 மணி 30 நிமிடம் வரையுள்ள கன்னிலக்கின சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக குரு:– சிவஸ்ரீ. சோ. வாகீஸ்வரக் குருக்கள் (ஊரெழு)

ஆலய குரு :– பிரம்மஸ்ரீ நா. கமலநாத சர்மா

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48ம் நாள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 08–08–1998ல் மகா சங்காபிஷேகம் நடைபெறும்.

சுபம்.

# கும்பாபிஷேகம்

பிரதிட்டை என்றால் என்ன? இக்கிரியையில் யாகசாலை எதற்காக? கும்பங்கள் எதற்காக? குண்டங்கள் அமைத்த தீ வளர்பது யாது காரணம் பற்றி? நேரே திருவுருவிலேயே இறைவனைத் தோற்ற வைக்காது கும்பம், குண்டங்கள் முதலிய உபாயங்களைக் கையாளும் நோக்கந்தான் யாது? என்ற கேள்விகளுக்கு உரியவாறு விடை கூறமுகுமாக கும்பாபிஷேகக் கிரியையமைப்பையும் அடிப்படைத்தத்துவத்தையும் சுருக்கி அறியத்தருவது இக்கட்டுரை.

எங்கும் நிறைந்தவன் இறைவன் அவ்வாறிந்தும் அவனைத்தரிசித்தல் வேண்டிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கோவிலையே நாடிச் செல்லுகின்றனர். இதனால் அவன் எங்கும் உளன் என்ற சிறப்புக்குன்றுமோவெனின், ஒரு பொழுதும் குன்றாது. சிக்கலான இக் கேள்விக்குத் தெளிவான விடை பகருகின்றது. சிவஞானசித்தியார் (12–3–4) பசுவின் உடலெங்கணும் பால் பரந்து சுவறியுள்ளது. எனினும் அது முலைகளின் வழியேதான் வெளியேறுகின்றது அதே போன்று எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் குறிப்பிட்ட இடத்தையே சிறப்பாக வெளிப்போந்து அருள் சுரப்பான். இவ்வாறு அருள் சுரக்குமிடம் குருலிங்க சங்கமெனச் சமய நூல்கள் கூறும். இம் மூன்றனுள் இலிங்கத்தில் இறைவன் தோற்றியருளுதலையே ஆலய வழிபாட்டில் நாம் உணருகின்றோம்.

இலிங்கம் என்பது அடையாளம் எனப் பொருள்பெறும். இவ்வடையாளம் சிவபெருமானை மட்டிலும் சிறப்பாகச் சுட்டுதல் பற்றிச் சிவலிங்கம் எனவும் பாடலாயிற்று பரம்பொருளான சிவபெருமானின் இயல்புகளை உணர்த்தும் அடையாளமான சிவலிங்கம் 'அப்பரமன் இத்தகையன்' என எமக்கு விளக்கி நிற்கின்றது. அவ் விளக்கத்தின் சுருக்கம் "உருவமில்லாத எம்பெருமானை எவ்வாறு கிரகிப்போம் என ஏங்கி அலமந்து நிற்பார்க்கு உருவங்காட்டியும், 'எம் போன்று உருவம் வாய்ந்தவன் இவன்' எனத் தற்பெருமை தோன்ற இறுமாந்து நேக்குபவர்களுக்கு கை, கால் முதலிய உறுப்புகளைத் தெளிவாக பெறாத அருவநிலையில் தோற்றியும் அருவுருவமாக விளங்குவது இலிங்கத் திருமேனி' என்பதாம். இத்துணைப் பெருமை வாய்ந்த இலிங்கத்திருமேனி அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய்ப் பரமன் விளங்கும் உயர் தத்துவத்தை உணர்த்துவது. சிவபிரானுக்கு உரித்தான இச் சிவலிங்கத் திருமேனி இல்லாத கோவில் கோவிலாகாது. அரசன் இல்லாத நாடு போன்றதே இலிங்கத் திருவுருவம் இல்லாத திருக்கோவில். பாரத நாட்டில் ஆகம முறைப்படிஅமைந்த கோவில்களில் இலிங்க ஸ்தாபனம் இல்லாத கோவிலை காணலரிது. கோவில்களில் எல்லாம் இறைவன் தம்மைச்சுட்டும் அடையாளமான இலிங்க மூர்த்தியாகிக் கருவறையில் மூலவிக்கிரமாய் முதன்மை பெற்று எழுந்தருளுகின்றான். சிவபிரானுக்கு அல்லாது ஏனைய மூர்த்திகளுக்கு நிறுவப்படும் மூலவிக்கிரகம் அவ்வுருவமான இலிங்க வடிவில் அமையாத தாய் உருவநிலையிலேயே உபாயமாக நிறுவப்படுதல் உபசார வழக்கு.

பாரெங்கணும் நிறைந்து பரந்து விளங்கும் பரமனை பால்கறப்பவன். பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று, எவ்வாறு குறிப்பிட்ட ஓர் இடத்தில் வெளிப்படுவது? இவ்வாறு வெளிப்படுத்தும் வழிகளையே ஆகமங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. வெளிப்படுத்தும் இவ்வரிய நிகழ்ச்சியை நிகழ்த்துபவனே அருச்சகன். கல்லில் வடிக்கப்பட்ட வடிவத்தில் ஆகமங்கள் கூறும் வழியை கடைப்பிடித்தே இறைவனை எழுந்தருளச் செய்கின்றான். இது நிகழுமாற்றை சிறிது விரிவாக நோக்குவதற்கு முன் பிரபஞ்ச அமைப்பைச் சற்று நுணுகி அவதானித்தல் பயன் தரும். பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் அனைத்தையும் எட்டுப் பிரிவுகளுள் அடக்கலாம் இவற்றிற்குப் புறம்பான பொருள் ஒன்று உண்டு என்றால், அவை இயையட்டும் ஒருங்கு ஒன்று சேரும் வண்ணம் அருளுருவம் தாங்கும் இறைவனே ஆகும். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐந்து பூதங்களும் இவற்றுக்கு புறம்பாய் இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும் இவ்வேழனின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இப்பிரிவுகள். பிரபஞ்சம் முழுவதும் இறைவன் நிறைந்து நிற்பவன். ஆதலால் இப்பிரபஞ்சத்தின் கூறுகளான இவ்வெட்டுப் பொருள்களிலும் இறைவனை உணருகின்றோம். இவ்வெட்டு அம்சங்களையுமுடைய பரமன் இது பற்றி அட்ட மூர்த்தி என சிறப்புப் பெற்றவன். எனவே இவ்வெட்டு அம்சங்களில் நிகழ்த்தும் வழிபாடு அவனது வழிபாடாகும். இவ்வம்சங்களில் இறைவன் எழுந்தருளலைக்காணல்

அவனைக் காணலேயாகும். இவ்வடிப்படையிலேதான் சிவாச்சாரியார் இறைவனை சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளுவித்து அங்கு என்றும் சாந்நித்தியமாக விளக்கும்படி செயலாற்றுகின்றார். இவ்வாறு நிகழும் கிரியையே பிரதிட்டை எனப்படும்.

பிர என்னும் பகுதிக்குச் சிறப்பாக என்றும் நன்கு புலனாகும்படி என்றும் திஷ்ட என்னும் பகுதிக்கு நிற்றல் என்றும் பொருள் உண்டு. எனவே பிரதிஷ்டை என்னும் சொல் ஏனைய இடங்களில் புலனாகுவதைக் காட்டிலும் சிறப்பாக நிலைநிற்றல் என்றும் ஏனைய இடங்களில் நிற்பதைக்காட்டிலும் நன்கு புலனாகும் படி நிலை நிற்றல் என்னும் பொருள் பெறும். இந் நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிட்டை ஆகும்.

பிரதிட்டை என்னும் கிரியை கும்பாபிஷேகம் என்னும் மறுபெயரால் வழங்கி வருகிறது. இச்சொல் பிரதிட்டை என்னுஞ் சொல் போல கிரியையின் விளைவை சுட்டாது. கிரியையின் ஓரமைப்பாகிய முழுக்காட்டுதலை மட்டும் குறித்து நிற்கின்றது. பிரதிட்டை என்னும் கிரியையில் குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இலிங்கத்திருமேனிக்கு நிகழ்த்தும் நீராட்டுதலே சிகரமான அம்சம். சிகரமான இக்கும்பாபிஷேகமே – குடமுழுக்கு – பிரதிட்டையே இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலை நிற்கச் செய்யுஞ் செயலைச் சுட்டுகின்றது.

ஆகமங்கள் கூறும் இவ்வுபாயத்தினை, குட நீரால் முழுக்காட்டல் மூலம் இறைவனை நிலைநிறுத்தும் முறையின் சிறப்பினை வேதாகமங்களைத் துணை கொண்டு நோக்குமிடத்து இக் கிரியை முறையின் சிறப்பும் உயர் தத்துவமும் புலனாகும். அதனை சற்று நுணுகி நோக்குவாம்.

எங்கும் நிறைந்த இறைவன் புலன்களால் கிரகிக்கப்படாத பெருமான் எமக்கிரங்கி, திருவருள் பாலித்து படிப்படியாக எங்கட்குப் புலனாகிக் கிட்டும் முறையை உபநிடதங்கள் எடுத்துரைக்கின்றன. இதைத்துணையாகக் கொண்டு வகுத்தமைக் கப்பட்டுள்ளது. பிரதிட்டை என்னும் கும்பாபிஷேகக் கிரியையாகும் சர்வ வியாபி என சுவதோசுவரதங் கூறும் பகவான் முதலில் சிறு அளவில் மட்டுமே புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகிறான். ஆகாயத்தாலும் இந்திரியங்களால் செவ்விதாகக் கிரகிக்கப்படாமையால் வாயுவாகச் சற்று விரிகின்றன. ஆகாயத்திலும் பார்க்க வாயு சிறிது அதிகமாக உரைப்படக்கூடியதெனினும் அது கண்ணால் காண்பதற்கு அரிதானதொன்று அன்றோ! இதை அடுத்தநிலை அக்கினியாக விரிந்த நிலை, இது கட்புலனாவதே இது தூய்மை பெருக்கி எம்மை ஈடேற்ற வல்லது அக்கினியைப் பெரிதும் நெருங்கி பேணிப் பாதுகாத்து தொடர்ச்சியாக வழிபடுதலில் இன்னல்கள் பல உள. இவ்வின்னல்கள் எதுவும் இல்லாது தானே எல்லாமாய் விளக்குவது நீர் என்றாலும் கிரகிக்கத் தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுதல் எளிதன்று இது காறும் கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவது பொருளாகிய மண் இதனிடத்து இறைவனை நிலை நிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் எமக்கு நன்கு கைகூடவல்ல நிலை. இவ்வாறு இறைவன் அருவநிலையினின்றும் இழிந்து ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் நுன்மை அகன்று படிப்படியாக பருமை வளரும் வகையில் விரிந்து விளங்குகின்றான். இதைத் தைத்திரிய உபநிடதம்

> "ப்ரமஹண ஆகாச : ஸம்பூத :
> ஆகாசாத் வாயு :
> வாயோ ரக்தி :
> அக்நே ராப :
> அத்ப்ய பிருத்வீ"

என எடுத்தியம்புகின்றது.

இறைவனை முற்றிலும் புலனாகாத நிலையிலிருந்து பால் கறப்பவன் பசுவுடலெங்கனும் பரந்து சுவறிய பாலை முலைகளில் வெளிப்படச் செய்வது போன்று விக்கிரகத்தில் வெளிப்பட வைப்பதற்காக இது காறும் கூறிய விரிவு முறை வழிநின்று, விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகப் பெருங் கிரியையின் அம்சங்களாய் விளங்கக் காண்கின்றோம். ஆகாய வெளியிலமைவது யாகசாலை. அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனோடு நெருங்கிய தோழமை பூண்ட வாயுவும் குண்டங்களில் ஒருங்கு உறையக் காண்கின்றோம். வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர் இவை நான்கிலும் புலனாகாது எங்கும் பரந்து நின்ற இறைவனைக் கிரியைகள் மூலம் படிப்படியாக வெளியாக்கிப் புலனாக்கவைத்தலே யாகசாலையில் நிகழும் கும்பாபிஷேகக் கிரியையாகும். இக்கிரியையிலே யாகசாலையில் குண்டங்களில் வளருந் தீயில் இறைவன் தோற்றமடைப்பிக்கப்பெறுகிறான். மேடையில் நிறுவப்பட்ட கும்பங்களின் நீரிலும் கிரியைகளின் சிறப்பினால் மேலும் வெளிப்படுகின்றான். இவ்வாறு வெளிப்படும் நிகழ்ச்சி இறுதியில் மண் அம்சம் வாய்ந்த திருவுருவத்தில் வந்து முடிவெய்கின்றது. முன்னர் கூறிய எட்டு அம்சங்களுக்காகத் தனித் தனியே அமைக்கப்பட்ட குண்டங்களில் சாந்நித்தியமானவனை, நீர் நிறைந்த கும்பத்தில் வெளிப்பட்டு நிற்கும் அவனை மண் இயல்பு வாய்ந்த கிரகத்தில் ஒடுக்கி அங்கேயே நிலைபெறச் செய்த பின்னரே அவன் அவ்விக்கிரகத்தில் பாரெங்கணும்

புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக வெளிப்பட்டு பிரதிக்கப்பட்டவனாய் விளங்குகின்றான். இது பற்றியே அறவே கிரகத்தற்கரிய இறையை எளிதில் கிரகித்தற்கு முடியாதவாறு ஆகாயம் நுண்ணியதாய் இருத்தல் பற்றி முதன் முதல் புலனான ஆகாயத்தில் நிறுத்தி வழிபடுவதற்கு வகையறியாராய் அதையடுத்து கட்புலனாகாத வாயுவிலும் பொருத்தி வழிபடும் ஆற்றல் அற்றவராய் புலனாகித் தோற்றும் தன்மையனாயும் ஒரே வழிப் புலனாகாது திடீரென மறைந்து விடும் இயல்பினனயும் விளங்கும் அக்கினியிலும் நிறுவி வழிபடுதலில் திருப்தி காணாதவராய் வற்றும் இயல்பு காரணமாக என்றும் தொடர்ந்து நிலைபெறாத – எனவே பிரதிட்டைக்கு ஏற்றவாறு பொருந்தாத நிலையினதாதல் பற்றி நீரிலும் இறைவனைத் தாபித்து வழிபடும் வாய்ப்புப் பெறாதவராய் மண்ணிலேயே இறைவனை நிரந்தரமாக நிறுவி வழிபடும் ஒரே வழியைக் கடைப்பிடிக்கும் நிலையுற்றோம். எனவே என்றும் வெளிப்பட்டுப் புலனாகி விளங்கும் வண்ணம் இறைவனை நிறுத்திப் பிரதிட்டை செய்யும் பொருட்டுத் திருக்கோவிலில் நிறுவுவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் திருவுருவங்கள் மண்ணுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. இவ்விக்கிரகங்களில் சில மண்ணோடு உறவு கொண்ட மலைகளில் பிளந்தெடுத்த கருங்கல்லில் அமைக்கப்படுவன. சில மண்ணிலே அகழ்ந்தெடுக்கப்படும் ஐவகை உலோகங்களில் வடிக்கப்படுவன. சில மண்ணிலே வளரும் மரங்களில் செதுக்கப்படுவன இன்னும் சிவ மண், சுண்ணாம்பு முதலியன கலந்த கதையால் அமைவன. இவ்வாறு மண்ணின் அம்சத்தை மட்டுமே கொண்டு அமையும் விக்கிரகத்தை நிறுவி அதிலே இறைவனை குடிபுகுத்திச் சிறப்பாக தோற்றி விளங்க வைக்கும் கிரியையில் தோற்றுவித்தலை நேரே விக்கிரகத்திலேயே நிகழ்த்துதலை விடுத்து அவன் படிப்படியாக வெளிப்படும். முறையே இலகுவான வழியென உணர்ந்து அதையே உபாயமாகக் கையாண்டு இதுகாணும் சுட்டப்பட்ட விண், வாயு, தீ, நீர் ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டு, இறைவனை படிப்படியாக அவற்றினூடே விக்கிரகத்தில் சுலபமாக எழுந்தருளியிருக்கும் கும்பாபிஷேகப் பெருங் கிரியையில் ஆகாய ரூபமான யாகசாலையிலும் குண்டங்களில் எரிவளரக் காரணமாகி நின்று அக்கினியின்றும் வேறுபடாது இணைந்து நிற்கும் வாயுவிலும் அங்கு வளரும் அக்கினியிலும் மேடையில் அமைக்கப்பட்ட கும்ப நீரிலும் இறைவனைப் பாரனைத்தையும் கடந்து நிற்கும். துலாசதாந்தத்தில் இருந்து இழிந்து வந்து தோற்றம் பெறுமாறு எழுந்தருளச் செய்து ஆவாகித்து பூசனை புரிந்து, இத் தோற்றம் முழுவதையும் கிரியை முடிவில் மண இயல்பினதான திருவுருவத்தில் ஒடுக்கி அங்கு நிலைபெற வைத்து இவ்வொடுக்கம் நிறைவுறக் கும்பநீரால் விக்கிரகத்தை முழுக்காட்டுவதன் மூலம் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் சிவாசாரியார் எங்கும் பரந்த இறைவனின் வியாபகத்தினை, பசுவின் முலைகளில் பால் வெளிப்படுவது போன்று திருவுருவத்தில் வெளிப்படும் வண்ணம் ஒருமுகப்பட்டு உறைந்து, நிறைந்து விளங்கச் செய்கின்றர்.

கும்பாபிஷேகம் என்னும் இக்கிரியையின் பின்னர் எங்கும் பரந்து நிற்கும் இறைவன் ஏனைய இடங்களில் இருப்பதைக் காட்டிலும் திருவுருவத்தில் விசேட சாந்நித்தியம் பொருந்தி விளக்குகின்றான். இந் நிலை கும்பாபிஷேகத்தின் பின் என்றுந் தொடர்ந்து விளங்கும் நிலை. இந் நிலையிற்தான் அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அருச்சனை, உபசாரங்கள் முதலிய ஆராதனைகளால் இறைவனை வழிபடத் தொடங்குகின்றோம். இவ்வம்சங்கள் கொண்ட வழிபாடு சுருக்கமான நித்தியக் கிரியைகளாகவும் விரிவான நைமித்திகக் கிரியைகளாகவும் திருக்கோவில் வழிபாட்டில் என்றென்றும் நிரந்தரமான இடம் பெறுவன.

"ஆதலின் நமது சத்தி ஆறுமுகன் அவனும் யாமும் பேதகமன்றால் நம் போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்" என இறைவன் கூறியவாங்கு சிவபிரானும் முருகனும் வேறுபாடற்றவர்கள் எனவே முருகனது பிரதிட்டையிலும் அவன் உருவம் பற்றிய தத்துவங்களிலும் அட்ட மூர்த்தங்கள் அடிப்படையாக விளக்குவன.

இதுகானும் கூறப்பட்ட கும்பாபிஷேக முறை கோவிலே இல்லாத இடத்தில் புதிதாக கோவிலெடுத்து விக்கிரகத்தை நிறுவி முதன் முதல் நிகழ்த்தும் அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்னும் முதற் கும்பாபிஷேகம் பற்றியது.

பிரதிட்டை ஆகி, நெடுங்காலம் வழிபாடு நிகழ்ந்து வரும் கோவிலில் கருவறையின் பகுதிகள் பழுதடைந்து சிதிலமடையின் மூலவிக்கிரகத்தில் சாந்நித்தியமாய் விளங்கும் இறைவனை உரிய கிரியைகளால் கும்பத்தில் எழுந்தருளச் செய்து வேறு ஒரு இடத்தில் தற்காலிகமான "பாவ ஆலயம்" கற்பித்து அங்கு நிறுவப்படும் மரத்தால் ஆன சிலையிலோ திரையால் எழுதப்பட்ட திருவுருவிலோ ஒடுக்கி, கோவிலில் உள்ள பழுதுகளை அகற்றிச் சீராக்கிய பின் பாவ ஆலத்தில் இதுகாறும் சாந்நித்தியம் கொண்டருளிய இறைவனை மீண்டும் கும்பத்தில் ஆகருஷித்து, ஆவாகித்து யாகசாலை அமைத்த அங்கு அக்கும்பத்தை ஸ்தாபித்து யாகக் கிரியைகளை முறைப்படி நிகழ்த்தியபின் திருத்தியமைக்கப்பட்ட கோவிலின் கருவறையில் முன்னரேயிருந்த மூலவிக்கிரகத்தில் இறைவனை முன்போல் சாந்நித்தியங் கொண்டருளும்படி சேர்ப்பித்தல் முறையாகும். இவ்வாறு நிகழும் கும்பாபிஷேகம் ஜிர்ணோத்தாரண கும்பாபிஷேகம் எனவும் புனர்ஆவர்த்தன பிரதிஷ்டை எனவும் சுட்டப்படும். ஜிர்ணம் = பழுதடைந்த (கோவிலை) உதாரணம் = மீட்டல் (திருத்துதல் ; புனர்= மறுபடியும் = ஆவர்த்தனம் – திருப்பிக் கொண்டு வருதல்.

# கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும்

அனாதி மல முத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும் அனாதி மல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப் போக மோக்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் விநாயகரை திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகத்திலே கும்பாபிஷேகமாம்.

"கும்பாபிஷேகம்" என்பது குடமுழுக்கு, "குட நன்னீர் ஆட்டுவிழா" என்று சொல்லுவார்கள். இது பிரதிஷ்டை என்று கூறப்படும். இது நான்கு வகைப்படும். அவையாவன

1. ஆவர்த்தம் 3. புனராவர்த்தம்
2. அனாவர்த்தம் 4. அந்தரீதம்

**ஆவர்த்தம் :** புதிதான ஓரிடத்தில் விநாயகரை வைத்துப் பாலப் பிரதிஷ்டை செய்து பூஜித்து புதிதாக கோவில் கட்டி, பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாம்.

**அனாவர்த்தம் :** வெகுகாலத்திற்கு முன் கோயில்கட்டி பூஜையில்லாமல் அழியவிட்டும் சீர்குழைந்து இருந்து, முன் போல் அவைகளைத்திருத்தி ஆலயம் கற்பித்துக் கும்பாபிஷேகம் செய்தலாம்.

**புனராவர்த்தம் :** கற்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அட்ட பந்தனத்தில் பழுதுண்டானாலும், விமானத்தில் உள்ள விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தை புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாம்.

**அந்தரீதம் :** ஆலயத்தில் சோரன் சண்டாளன் நாய் முதலிய உட்சென்று தீண்டியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பாட்டால் அவைகளை திருத்தி உடனே செய்வதாகும் இதில் அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள், நட்ஷத்திரம் பார்க்க வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அனுஞ்ஞை :** இறைவணக்கம் செய்து சர்வசாதகரிடத்திலும் விநாயகர் இடத்திலும் நாள் குறித்த காலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தை செய்ய உத்தரவு தரவேண்டும் என்று வணங்கி உத்தரவு கேட்பதாகும்.

**தன பூஜை :** புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தை பூஜை செய்தலாகும்.

**திரவிய விவாகம் :** பூஜை செய்த திரவியத்தை ஒரு பாகம் ஆலய கட்டட வேலைக்கும், இரண்டாவது பாகம் நித்திய பூஜை, மாதாந்த விசேட நட்சத்திர பூஜை, உற்சவம் ஆபரணாதிகட்கும் இராமாதி வாங்கவும், மூன்றாவது பாகத்தை பதினொருபாகம் செய்தல் வேண்டும்.

**ஆசாரிய வர்ணம் :** பிரதான ஆசாரியரையும், சர்வசாதகரையும் வணங்கி இத்திரவியத்தைக் கொண்டு மகா கும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றுத்தர வேண்டும் என்று எசமான் குருவை வழிபடுதலாகும்.

**கணபதி பூஜை :** எவ்வகையினராயினும் முதலில் விநாயகரை வழிபாடு செய்தல் வேண்டும் ; செய்யாவிடில் அவர்களின் காரியத்தை இடையூறு செய் என்று இறைவன் கட்டளை என்பது "என்னரேயாயினும்" என்ற திருவிளையாடற் புராணத்தில் விளங்குகின்றது. ஆகவே இங்கு தொடங்கிய மகா கும்பாபிஷேகம் இடையூறு இன்றி நிறைவேற விநாயகப் பெருமானுக்குப் பூஜை அபிஷேகம் ஹோமம் செய்து முதலில் பிரதான சிவாசாரியர் வழிபடுதல்

கிராம சாந்தி : *"சர்வலோக இதம் புண்ணியம்*
*வட்சியே கந்த சடானன*
*கிராம நுதன காலேது*
*ஷேத்திரவா மந்திரேவிவா*
*பிரதிஷ்டோத்துவ காலேச*
*பூஜாம் கருத்துவாவி வேசவதா"* என்று

காரணாகமம் கூறுகிறது. விளக்கம் சகலலோக சுகத்துக்கும், புதிதானபட்டினம் கிராமங்களில் உள்ள அசுர, ராட்சத, பிசாசு, பரம ராட்சதர்களைத் திருப்தி செய்து சந்தோசப்படுத்தி கிராம அதிதேவதையான வைரவரை பூஜிக்கலாம்.

பிரவேசபலி : நாம் பிரவேசம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத்திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரம இராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி, அவர்களை முறையே கடல், மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களிற் சென்று சுகமாய் வீற்றிருங்கள் இது இறைவன் கட்டளை எனக்கூறித் திருப்தி செய்தலாம். இது மகா கும்பாபிஷேகம், திருவிழா, புதுவீடு குடிபுகல் போன்ற காரியங்களிற் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

திசாஹோமம் : நான்கு திக்குகளில் முறையே பாசுபதாஸ்தம், அஹாராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களைப் பூசித்து காவல் செய்யும்படி கட்டளை இடலாம்.

இரட்சோக்கிரஹோமம் : அசுர, ராட்சதர்களின் தொல்லை நீங்குவதற்கு ஆக மூன்று மேடைகள் அமைத்து, நடுவில் கும்பம் வைத்து, அதில் ரட்சோக்கிர தேவதையை வடவாமுகாக்கினிக்குச் சமமாக பாவித்து பூசை செய்து அதன் தென்புறத்தில் வெள்ளை வஸ்திரம் இட்டு, தேங்காய் வைத்து, தேங்காயில் சிவனையும் வாளில் கட்சேசுவரனையும் வாளைச் சுற்றி அசிதாங்க பைரவர், குருபைரவர், சண்டபைரவர் முதலிய எண்மரைத் பூசித்து அவர்களுக்கு உள்ள திரவியங்களாலும் சமித்தாலும் ஹோமம் செய்து, சம்யோசித்துக் கும்பஜலத்தை ஆலயத்தைச் சுற்றித் தெளித்தலாம்.

ஆயுஸ் கர்மம் : குருமார் செய்து கொள்ளும் தசவித ஸ்நானமாம்.

நவக்கிரக மகம் : கும்பாபிஷேகத்தால் உலகத்துக்கு அதிக மழையாலும் மழையின்மையாலும், விரோதிகளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கவும் எல்லாப் பிராணிகளின் பயம், நோய், பிணி நீங்கவும் சூரியன் முதலிய நவக்கிரகங்களைப் பூசித்து வணங்கி ஹோமம் செய்தலாம்.

வாஸ்து சாந்தி : பூமியானது அசத்ததாக, ஜடசம்பந்தம் உள்ளதினால் அதை நோக்கிச் சத்பாவம் உண்டாவதற்குச் செய்வது அசுத்த சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்துப் பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக் காற்றினாற் சோதி ரூபமாக்கிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப் பூசினிக்காயைப் பூமியின் வடிவமாகத் தியானித்து அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து எல்லாவற்றையும் ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையினாற் பரிசுத்தமானதாகப் பாவித்தல் வாஸ்து சாந்தியாம். இச்சாந்தி கும்பாபிஷேகம் பலஸ்தாபனம், யாக மண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்ய வேண்டும்.

கோபூஜை : பசுமாடு கன்று கட்டுதல்

விற்பிர போசனம் :வேதம் அறிந்த பிராமணர் பிருதுவி முதல் சுத்த தத்துவம் வரையுள்ள எல்லாத் தத்துவங்களையும் சுத்தமாகக்குகின்றேன். ஹோமம் செய்கின்றேன். இது நன்கு சுத்தி அடையட்டும் என்று சிதாக்கினியில் ஹோமம் செய்கின்ற பாவனையில் போசனம் செய்வித்தலால் அந்த இடம் சுத்தியாகும்.

மிருத்சங்கிரகணம் : கிராமத்துக்குச் சாந்தியையும் தேச நன்மையடையவும் நினைந்து பூமா தேவியைப் பிராத்தித்து; இந்தப் பூமி கண்டங்களாகப் பிரிந்து இருப்பதால் ஒவ்வொரு கண்டத்திற்கும் பூசை செய்து பிராத்தித்து, ஞானயாகம் செய்ய முளையிடுவதற்காக மண்வெட்டியை சிவாஸ்திரமாகப் பூசித்து, பூமி தேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணை எடுத்தலாம். எடுத்த தோசம் நீங்க அந்த இடத்திற்கு வேறு மண் போட்டுச் சப்தவாரிதி சம்பத்தால் அபிஷேகம் செய்யலாம்.

அங்குரார்ப்பணம் : முளையிடுதல், இந்தப் பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைந்து சுத்தமானது. ஆகையால் உலகச் சேமத்தின் பொருட்டு நெல் முதலிய நவதானியங்களைப் பாலில் ஊறவிட்டு "ஒசதி சூக்தம்" செபித்துச் சந்திரனினை வணங்கி முளையிடுதலாம்.

ரஷாபந்தனம் : காப்புக்கட்டுதல், குழந்தையின் வருத்தம் தீர மாதா மருந்துண்ணுதல் போல, உலக சேமத்திற்காக ஆசாரியர் எடுத்த காரியம் செவ்வனே நிறை வேற இடையூறுகள் தடுக்கா வண்ணம் இறைவியின் கர்ப்ப நாடியில் நின்றும் உண்டானதாக நாகராசனைப் பூசித்துக் கையில் கங்கணம் கட்டுதலாம்.

இரத்தின நியாசம், நைநோன்மின்னம், தானியாதிவாசம், சயானரோகணம், கிராமப் பிரதட்சணம் : இவைகள் புதிதான மூர்த்திகளுக்குப் பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படும் கிரியைகளாம். அன்றியும் இறைவன் "இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங்காற்றுமாகி என்ற தேவாரத்தில் இருந்து இறைவடிவத்தை உண்டு பண்ணும் குறிப்பை உணர்த்துவதும் ஆகும்.

**யாகசாலா தனியாகதி ஸ்தாபனம்** : யாகசாலையிற் சப்ததாக்துகள் மயமான சப்த தானியங்களைப் பரப்புதல்.

**சூரியகாந்தி சங்கிரகணம்** : ஞானாக்கினிக்கு சூரிய காந்தத்தில் இருந்து அக்கினியை எடுத்தல்.

**ருத்விக் சாதகாதி வரணம்** : பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற குருமானரையும் சாதகர்களையும் உபசாதர்களையும் நியமித்தல்.

**பிரசன்ன அடிவேக பூஜை** : எங்கும் நிறைந்த மூர்த்தியைப் பூஜிப்பதற்காகத் தமக்கு நேர்முகப்படுத்தல்.

**கடஸ்தாபனம்** : குடத்தைச் சுத்தமாக்கிச் சப்ததாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காகக் கும்பத்தின் அடியில் ஆன்மதத்துவத்தையும் பிரமாவையும், குடும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும் விஷ்ணுவையும் கும்ப நுனியிற் சிவதத்துவத்தையும், ருத்திரனையும், கும்பத்தில் 9 சக்திகளையும் மூவினை நூலிற் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்திரி ஆகியோரையும் கும்பத்திற்குப் பிடிக்கப்படும் தூபத்தில் அர்ச்சினி சக்தியையும், தீர்த்தத்திற் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும் மத்தியில் வருணனையும், நவரத்தினங்களில் வாமை முதலிய நவசக்திகளையும், தங்கத் தாமரைப் பூவிற் சதாசிவத்தையும், வாசனைத் திரவியங்களிற் சப்த மாதுருக்களையும் பூசித்து குடத்தில் இட்டு மாவிலைச் சடையாகவும் தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சத்தை முடியாகவும் வஸ்திரத்தை தோலாகவும், ஜெஞ்ஞோப வீதத்தைப் பஞ்சப்பிரம மந்திரமாகவும் பூஜிப்பதால் கும்பம் ஆனது சர் தேவதா சொரூபம் ஆகின்றது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

**கலாகர்சணம்** : கலைகளை இருத்தலாம். சடத்து வன்னியாகமும் கும்பத்திற்கு செய்ய வேண்டும். சடத்து வாவானது பரமேஸ்வரர் இருக்கும் ஸ்தானத்தை அடைதலுக்கு உரிய வழியாகும். இதில் சர்வ வியாபகர் ஆக உள்ள பரமேஸ்வரர் இந்த ஆறு அத்தவாக்களிற் கலந்தும் இருக்கின்றார். பரமேஸ்வரர் சக்தி சொரூபர் அதீதர் சக்திக்கும் சக்தனுக்கும் பேதமின்மை ஆதலால் அங்காங்கி பாபம் என்றும் கூறப்படுகிறது. ஆகவே சக்தியின் இடத்தில் இருந்து கலையும் கலையில் இருந்து தத்துவமும் தத்தவத்தில் இருந்து புவனமும், புவனத்தில் இருந்து வர்ணனும் வர்ணத்தில் இருந்து பதமும், பதத்தில் இருந்து மந்திரமும் உண்டாயின. கலையில் தத்துவம் அடங்கி உள்ளதாததில் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கி இருந்து திரும்ப வந்த தாதலின் இந்தச் கடத்துவாக்களைச் செய்ய வேண்டும் என்பதாம். அன்றியும் கலாநியாகத்தால் சர்வஞ்ஞா சக்தியும், தத்துவநியா சத்தால் நித்திய திருப்தி யத்துவமும், புவன நியாசத்தால் அனாதி போதத்துவமும், வான நியாசத்தால் சுவதத்திரத்துவமும், பாத நியாசத்தால் அலுப்த சத்தித்துவமும், மந்திர நியாசத்தால் ஆனந்த சத்தித்துவமும் சித்திக்கின்றமையால் அவசியம் செய்ய வேண்டும்.

**யாகசாலை பூஜை** : யாகசாலை கலாமயமாக விளங்குகின்றது. நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளும் நான்கு பக்க நிலைகளாகவும் இதற்கு நான்கு கலசமும், இவைகளுக்கு இரு புறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளராகவும் கிழக்கு முதல் எட்டுத்திக்குகளில் கீழ் மேல் ஆகிய பத்துத் திசைகளில் இந்திரன் முதல் விஷ்ணு ஈறாத தசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவசூரியனுப்நிருதிக்கு கிழக்கில் யாக பலனைத் தரும் வாஸ்து பிரம்மனும், வாயுவிற்குத் தெற்கில் உத்தமப்பாக மண்டப ரூபமாகிய மகா லக்சுமியும் வாயுவின் வலப்புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்கும் விநாயகனும் ஈசானத்திற்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்ய சதாசிவம் முதல் சப்த குரு மூர்த்திகளையும் பூசிப்பதற்கு, 27 கலசங்கள் வைத்து ஞானவாள் ஏந்திய படி யாகேஸ்வரன் யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்து 9 குண்டங்களோடு விளக்குகின்றமையால் யாகசாலை கலாமயமாகும்.

**நவகுண்டம்** :சிவபெருமானுக்கு சொரூபம், தடத்தம் என இரு வடிவங்கள் உள்ளன. சொரூபத்திருமேனி, சுயப்பிரகாச திருமேனி ஆகும். அது உலகத்தை கடந்த வடிவம் தடத்வடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவம் ஆகும். இந்த உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, நீள், விசும்பு, நிலா, பகலோன் இயமாளன் எனும் எண் வகைப் பொருளிலும் கலந்தது இதனால் இறைவனை எண் வகை உருவில் வைத்து வணங்க வேண்டும் என்பது பெற்றாம் முதலில் நிலம் என்பது ப்ருதுவி ஆகும். அது சதுரம் ஆன வடிவம். அதைக் குறிப்பது கிழக்குத் திக்கில் அமைந்த நாற் கோணவடிவம் ஆன குண்டமாம்.

நீர் என்பது அப்பு. இதன் வடிவம் பாதிச் சந்திரனான பிறை வடிவம் அது தெற்கில் உள்ள பிறை வடிவம் ஆன குண்டமாம்.

நெருப்பு என்பது தேயு. இதன் வடிவம் முக்கோணம். இது தென் மேற்கு மூளையில் உள்ள முக்கோண வடிவம்.

வாயு : இது அறு கோண வடிவம். இது வடமேற்கு மூளையில் அமைந்திருக்கிறது.

**ஆகாயம்** : இது வட்ட வடிவினது. மேற்குத்திக்கிலுள்ள குண்டத்தில் அமைந்திருக்கிறது.

**சூரியன்** : இது தாமரைப் பூ வடிவம். இது வடக்குத் திக்கில் அமைந்திருக்கிறது.

**சந்திரன்** : இது எண்கோண வடிவினது. இது வட, கிழக்கு மூளையில் அமைந்திருக்கிறது.

இயமாணன் என்னும் ஆன்மர மாய தத்துவத்தைக் குறித்து அரசிலை வடிவமாய் தென் கிழக்கு மூளையில் அமைந்திருக்கிறது இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கும், கிழக்கிற்கும் மத்தியில் வட்ட வடிவமான பிரதான குண்டத்தில் சுயம் பிரகாச மூர்த்தியாய் அமைந்துள்ளது தான். இறை வடிவம் இறைவன் மேலே குறித்த எட்டு வடிவம் ஆகிய உலகத்தில் கலந்து இருக்கிறான். ஆகவே அவரை இந்த எட்டு வகையான குண்டத்தில் வைத்து பூஜித்து ஏமம் செய்து வணங்குகின்றோம். இது எப்படி எனில் நமது அருவமான உயிரை உருவம் ஆன உடம்பில் வைத்து அனுமானித்து காண்பது போல இறைவனை வழிபாடு செய்தலே என்பது குண்டங்களின் அமைப்பாடல். இன்னும் ஈசானம் முதல் சத்தியோசாதம் இறுதியாக உடைய பஞ்சப் பிரம்ம மந்திரங்களும் இறுதியாக உடைய பஞ்சப் பிரம்ம மந்திரங்களும் மூல மந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை, வரம்பில் இன்பம் உடமை, இயல்பாகவே பாசங்களில் நீங்கிய தன்மை, தன்வயத்தாகும் தன்மை, பேரறிவுடமை, பேர் அருணாடைமை, அளவிலாற்றல் உடமை, தூய உடம்பினல் ஆதல் முதலிய எண் குணங்களும் பிரான குண்டத்தில் இறைவனுக்குப் போல் அமைந்து விளங்கும். மேலும் பிரதான வேதிகையில் அமைந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வதேவதா சொருபமான இறைவனை வைத்து வணங்கும் இடமும் சிறந்த யாகசாலையேயாம்.

**பதவின்யாசம்** : மூலஸ்தானத்து இறைவனை ஸ்தாபித்து ஏற்படுத்தும் இடத்தைக் குறித்தல்.இதை ஆசார்யசில்பின சார்த்கம், பிரவி சேக்காப கேமகம் என்ற காரணாகம் விதிப்படி ஆசாரியரும் சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன் அம்மாள், விநாயகர் முதலிய மூர்த்திகளை பிரதிஷ்டை செய்வதற்குரிய இடத்தை வகுத்தலாம்.

**ஸ்தூபி ஸ்தாபனம்** : அதிஸ்டானம் மதல் (பட்டிகை) ஸ்தூபிவரியந்தமும் முறையே ஆறு அத்துவாக்களும் அமைய தூய லிங்கமாக அமைந்த பத்மத்தின் மேல் ஸ்தூவியை வைத்தலாம்.

**தீப ஸ்தாபம்** : இறைவன் சோதி வடிவினன். இவனை சோதி வடிவாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீப ஸ்தாபனாம். "இல்லக விளக்கது இருள் கொடுப்பது ... நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்னும் தேவாரம் இங்கு நினைவு கூறத்தக்கது.

**இரத்தினஸ்தாபனம்** : நவரத்தினம், நவலோகம் முதலிய வஸ்துக்களை, ஆரோக்கிய, வீரிய, பிரபா சக்திமயமானத் திரவியங்களைப் பீடத்தின் மேல் இட்டு, இந்திராதிலோக பாலகர்களைப் பூஜித்து பத்மாசனம் வரை பூசித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்.

**இயந்திரஸ்தாபனம்** : கோடுகளும், கோணங்களும் இறைவனின் மூல பிராசாத மந்திரங்களும் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை உரிய இடத்தில் வைத்தலாம். இது இறைவனுக்கு அருள் சக்தியை ஊட்டுவதாம். (இது லைட்டுக்கு பற்றரி போல எனலாம்.

**பிம்பஸ்தாபனம்** : மூர்த்திகளை முறைப்படி வைத்தலாம்.

**அஷ்டபந்தனம்** : என்பது இறைவனின் அம்சமாகிய அஷ்ட மூர்த்திகளின் அருள் பெற்று. அணிமாதி அஷ்ட சித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தோன்றி பரம்பொருளின் ஆணையால் சாம்பிராட்சிய லட்சுமியும், அதில் இருந்து பயன் தரும் வகையில் தனலட்சுமி, தான்யலட்சுமி, வித்தியா லட்சுமி, கீர்த்தி லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, வீரலட்சுமி, ஜெயலட்சுமி, சத்தான லட்சுமி, ஈறாக அஷ்ட லட்சுமிகளும் உருக் கொண்டு உயிர்களை உள்விக்கும் வண்ணம் உள்ள கதிகளைத் தருவது அஷ்டபந்தன சமர்ப்பணமாகும்.

**சொர்ணபந்தனம்** : தங்கத்தால் செய்வது.

**தைலாப்பியங்கம்** : விநாயகருக்கு தைலத்தினால் (எண்ணெய்) ஆசாரியரும், சிற்பாசாஸ்திரியாரும், அன்பர்களும், சாத்துதல், அன்பர்கள் தங்களிடத்தில் உள்ள ஆணவ மல சம்பந்தத்தாலும், திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றம் நீங்கி சுத்தி அடைதற் பொருட்டு எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல்எண்ணெய்யை

சுவர்ணத்தினால் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு, செவி, தொப்புள், பாதம் முதலிய எல்லா அங்கங்களிலும் குளிரும்படி நிறையச் சாத்துவதாம்.

பிரம்ப சத்தி : தீட்சாயினர்கள் முதலானோரால் பரிசிக்கப்பட்ட தோச நீக்கத்திற்காகவும், உஷண சாந்திக்காகவும், பிம்பத்திற்குச் சுத்தம் உண்டாவதற்கு உதகம், கந்தம், புஷ்பம், பத்திரம், காசாயம், மிருத்தி, பீஜம், பல்லவம், இரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஏசதி, கவ்வியம், குசம், கிருங்கம் முதலிய 16 வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூசித்து, ஏமம் செய்து, பின்னர் மூர்த்திக்கு முறைப்படி பஞ்சாமிர்தாதி முதலியவைகளால் அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசித்தலாம்.

பிம்பிரஷாபந்தனம் : கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்புக் கட்டுதலாம்.

பூர்வ சந்தானம் : மூர்த்திக்குப் பக்கத்தில் ஆசாரியர், சாதகர் உட்கார்ந்து ஆதார சக்தி முதுல் பஞ்ச மாவரணம் வரை பூசித்து, கலை முதல் மந்திரம் இறுதியாகச் சஙகோபாங்கமாக அவயவ பேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் தியாகம் செய்தலாம்.

விசேட திரவிய ஹோமம் : இறைவனை அக்கினி வடிவில் பூசித்தலாம். சகல விதமான ஹோமத் திரவியங்களையும் இறைமயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்சப் ரம மந்திரமும் வியாகிருதியும் சேர்த்துச் சொல்லி அக்கினயில் ஹோமம் செய்தலாம்.

ஸ்பரிசாகுதி : யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்திஸ்வரன், மூர்த்தீஸ்வரி, மந்திரம் ஆகியவைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்பு படுத்தலாம்.

ஸ்ரோத்திர வந்தனம் : ஆசாரியர் மூர்த்தியர்கள் செய்த தொடர்புகளில் கூடுதல், குறைவு ஏற்பட்டால் அவைகளைக் கருணையினால் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தலாம்.

ஆசாரிய பூஜை : குருமாருக்கும், சர்வசாதகர்களுக்கும் உடை, உத்தரீயம், வஷ்ணீசம், உருத்திராக்ஷயம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.

அக்கினிசம் யோஜனம் : பிரதான குண்டத்தில் பூஜை செய்து எடுத் அக்கினி மூர்த்தி, முதலானவைகளைப் பிரதான ஆசாரியர் மூலம் குண்டத்தில் சேர்த்தலாம்.

பூரணாகுதி : ஓமத்தைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்யப்படும் கிரியை.

தீபாராதனை : சோட சோபசார விசேட பூசையாம்.

வேத கோசம் : வடமொழி வேதம் முதலியன ஓதல் தமிழ் வேதம்.

ஸ்தூபி கும்பாபிஷேகம் : விமானங்களில் உள்ள ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தல்.

மகா கும்பாபிஷேகம் : அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்தி கணத்தலைவராகப் பூஜை செய்து, அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து அவரது சிரசின் மீது பிரதான குடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதான குரு, மூர்த்தியர்கள் முதலியோர் கும்பத்தை தொட்டுக்கொண்டு, எஜமான்கள் பக்த ஜனங்கள் சூழ்ந்து, புஷ்பாஞ்சலி, வேதம், தேவாரம், தோத்திரம், சங்கு மங்கள வாத்தியம் பேரி, மணி முதலிய வாத்திய கோசங்களுடன் பஜனை செய்து பக்தியுடன் மெதுவாக வீதி வலம் வந்து, மூலாலயம் சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும், மூர்த்திக்கும் நாடி சந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவன் ஆவாகனம் செய்து, மூலமந்திரம் உச்சரித்து பதமந்திரத்துடன் பக்தர்கள் ஹர ஹர என்ற சத்தம் சகலவாத்திய கோசங்களுஒலிக்க, மகா கும்பாபிஷேகத்தைச் செய்து எஜமானர்களும் சகல ஜீவராசிகறும் உய்தி அடையப் பிராத்தித்துச் செய்வதே மகா கும்பாபிஷேகமாகும். வர்த்தனீ கும்பத்தை ஆவுடையாருக்கும், வித்தியேஸ்வரக் கும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து, மகாநைவேத்திய உபசாரம் செய்து, அகண்ட தீபம் வைத்து பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூசைக்காக மூன்றேமுக்கால் நாழிகைக்கு கதவைச் சாத்தி வைக்கவும்.

பிராயச்சித்த ஆகுதி : இது யாகத்தில் செய்வது.

ஆசார்ய உற்சவம் : குரு வழிபாடு.

எஜமானுக்குப் பால் பிராப்தி : எஜமானுக்கு கும்பாபிஷேகப் பலனை ஒப்புவித்தல். **இன்றும் இதைப் பற்றிய விளக்க விரிவுகள் அநேகம் உண்டு. அவைகளை** இன்னும் அறிந்தோர் வாயிலாகக் கேட்டு பேரானந்தப் பெருவாழ்வு அடைவோமாக.

# கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய தொண்டர் சபையின் எழுச்சியும் வளர்ச்சியும்

வைத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த காரணத்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட அன்னையவளின் இவ்வாலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தினை போர்த்துக்கீசர் இடிக்க முற்பட்ட வேளை மக்கள் "மாதா கோயில் எனக் கூற எம்பெருமாட்டியின் அருளால் போர்த்துக்கீசப்படை அழிவு வேலையைக் கைவிட்டு வணங்கிச் சென்றது. இதனால் இவ்வாலயம் "மாதாங் கோயில்" என இன்றும் வழங்கப்பட்டு வருவதைக் காணலாம்.

மேற்படி இவ் ஆலயத்தின் பழமையை பேணிக் காப்பதற்கும் திருப்பணிகள் புரிவதற்குமென இவ்வூரில் உள்ள ஆயலத்தோடு தொடர்புடைய வழிபடுவோர்கள் இணைந்து திருப்பணி சபையை ஆரம்பித்து இவ்வாலயத்தினை இவ்வாலய சொந்தக்காராகிய குருமூர்த்தி ஐயாவின் அனுசரனையோடு திருப்பணிகள் செய்து வந்தனர். காலப்போக்கில் இச்சபை பரிபாலன சபை என்ற பெயர் மாற்றத்தோடு இயங்கி வந்தது. அவ்வேளையில் இச்சபையினரிடம் இவ்வாலயத்தை பரிபாலிக்கும் உரிமை வழங்கப்பட்டது. இச்சபையினர் இவ்வாலயத்தினை பரிபாலித்து வருகையில் இச்சபையின் அனுசரணையோடு இளைஞர்களை ஒன்று திரட்டி தொண்டர் சபை ஆரம்பிக்கப்பட்டது.

ஆலய அபிவிருத்தி வேலைகள் போன்றவற்றை முனைப்போடும் விரைவாகவும் சிறந்த முறையிலும் செய்து முடிக்கும் ஆற்றல் இளைய சமுதாயத்திடமே உண்டு என்பதை உணர்ந்த பரிபாலன சபை அவ்வூர் மக்களின் ஏகோபித்த வேண்டுதலின் பெயரில் தனது கட்டுப்பாட்டின் கீழ் தொண்டர் சபையை ஆரம்பித்து வைத்தது. இச்சபை 1990ம் ஆண்டு யூன் மாதம் 14ம் தேதி பரிபாலன சபைத்தலைவர் திரு.வி. சபாரத்தினம் அவர்களின் தலைமையில் ஆலய தெற்கு பகுதி மண்டபத்தில் 5.30 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவராக திரு. ஆ. சிவராசா அவர்களும் செயலாளராக திரு.கு. குலோத்துங்கர் அவர்களும் பொருளாளராக திரு.இ.பிரபாகரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு இத் தொண்டர் சபையை வழி நடாத்தி வந்தனர். இதன் செயற்பாடுகளுக்கு யாப்பு அமைக்கப்பட்டு பரிபாலன சபை தலைவர் போஷகராக இருந்து இச்சபையினை செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சமயப் பணி

எமது சபையானது இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற சகல நிகழ்வுகளிலும் முன்நின்று பொறுப்புடன் செயலாற்றி வருவதோடு ஆடிப்பூரத்தினத்தன்று நடைபெறும் மகா சங்காபிஷேயத்தை பொது மக்களின் உதவியோடு பொறுப்பேற்று நடாத்துவதுடன் சிவராத்திரி நிகழ்வுக்குரிய நிகழ்ச்சிகளையும் எமது சபையினரே பொறுப்பேற்று ஒழுங்கு செய்வதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பரிபாலன சபையின் வழிநடத்தலின் கீழ் ஆலய புனருத்தானங்களிலும் முன்னின்று செயற்படுவதோடு ஆலய நன்மை கருதி கொழும்பு, வெளிநாடுகளிலும் எமது பிரதிநிதிகள் மூலம் ஆலய வளர்ச்சிக்கு நிதி சேகரித்து வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஆலயத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கி வருகின்றது. எமது அயலில் உள்ள ஆலயங்களிலும் எமது சபையினர் தொண்டாற்றியும் வருகின்றனர். மேலும் மக்களின் நலன் கருதி தேர் உற்சவத்தின் போதும் தாகசாந்தி தடாகம் நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே.

## சமூகப் பணி

எமது தொண்டர் சபையானது சமயப் பணி மட்டுமல்ல சமூகப் பணிகளையும் மக்களுக்கு ஆற்ற வேண்டுமென்ற பரந்த நோக்கோடு பல பணிகளையும் ஆற்றி வருகின்றது. வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வருவதோடு இப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு அமரர் வ.மு. செல்லத்துரை அவர்களின் ஞாபகார்த்தமாக பரிபாலன சபையோடு இணைந்து ஞாபகார்த்தப் பரிசில்களையும் வழங்கி வருகின்றது. மேலும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டிக்கு வெற்றிக்கிண்ணங்களையும் வழங்கி வருகின்றது. தொடர்ந்தும் நன்மை தரும் பல திட்டங்களையும் சமூகத்திற்கு ஆற்றுவதற்கு திட்டமிட்டு வருகின்றது. சமூக நிறுவனங்களோடு இணைந்து அவற்றிற்கு ஆதரவு வழங்கி அவற்றினை ஊக்குவித்தும் வருகின்றது.

## மக்களிற்கு

எமது சபையானது வளர உதவிய அனைவர்க்கும் நன்றியை தெரிவிப்பதோடு எமது சபையானது மேன்மேலும் சிறப்பாக இயங்க உங்களின் ஆக்கமும் ஊக்கமும் எமக்கு வழங்கியதோடு எமது சேவை திறம்பட நடைபெற உங்கள் ஆதரவை வேண்டி இக்கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி நிகழ்வில் அம்பாளின் மூர்த்தி கரம் நிறைந்த நல்லருள் எல்லோர்க்கும் கிடைப்பதோடு நாடு நலம் பெற எம்பெருமாட்டியை இறைஞ்சுகின்றோம்.

நன்றி

ப. தேவகுமார்
*தொண்டர் சபை தலைவர்*

நா. அகிலன்
*தொண்டர் சபை செயலாளர்*

# பெருஞ்சாந்திக்குச் சாந்தியாயமையும் மண்டலாபிஷேகம்

## அதற்கு அங்கமான சங்காபிஷேக மகத்துவம்.

ஆலயத்திலே மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விதிப்படி, கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்னர் தினந்தோறும் அபிஷேகமும் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும். இவை குறைந்தது ஒரு பக்ஷத்துக்கேனும் நடைபெறும். இங்ஙனம் மூன்று பக்ஷங்கள் கொண்ட காலம் திரிபக்ஷம் எனப்படும். ஒரு பக்ஷம் என்பது 15 நாட்களாக திரிபக்ஷம் என்பது 45 நாட்களாகும். இக்கால எல்லையில் விசேடமான ஓரபிஷேகம் மூலமூர்த்திக்குச் செய்யப்படும். இது பொதுவாக 'மண்டலாபிஷேகம்' என வழங்கப்படும்.

'மண்டலம்' என்னும் சொல் பல துறைகளிலும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டது. எக்கருத்தில் அது வழங்கப்படினும் அளவைப் பொருளிலேயே அது பெரும்பாலும் ஆளப்படுகின்றது. உதாரணமாக இருக்கு வேதத்தை வகைப்படுத்தினோர் அதனைப் பத்து மண்டலங்களாக வகுத்தனர். வானசாஸ்திர ரீதியில் இது சூரியமண்டலம், சந்திரமண்டலம் முதலிய அளவைகளைக் குறிக்கும் வைத்தியசாஸ்த்திரத்திலும் மருந்துகள் புடம் பண்ணுவதற்கும்,மருந்துண்ணலுக்கும் மண்டலக்கணக்கு கடைப்பிடிக்கப்படுகின்றது. அரசர்களும் தத்தம் அதிகாரத்துக்கேற்ப மணட்லவர்த்தி, மண்டலேஸ்வரன், மண்டலாதிபதி என்றெல்லாம் இவ்வளவைச் சொற்கள் கொண்டே பெருமை பேசுவர். மாந்திரீகம் முதலியவற்றிலும் "மண்டலம்" என்னும் இச்சொல் விசேட பரிபாஷையாக வழக்கிலுண்டு தீக்ஷா மண்டபம் முதலியனவும், குண்ட மண்டலங்களை முக்கிய அம்சங்களாகக் கொண்டிருக்கும்.

இங்ஙனம் பல்வேறு காலம் தூரம் என்பவற்றைக் குறிக்கும் "மண்டலம்" என்னும் சொல் நாம் முன்னர் கூறியவாறு 45 தினங்களையே பெரும்பாலும் குறிப்பது சிலர் 48 நாள் எனவும் கொள்வர். கும்பாபிஷேகத்துக்கு முன்னர் 45 நாட்கள் மூலமூர்த்தியின் யந்திரத்துக்கு ஸ்நபனம் மந்திரஜபம் என்பன செய்வோர் பின்னர் மண்டலாபிஷேகம் வரை ஸ்நபனம், உற்சவம் என்பன செய்து மண்டலத்தை பூர்த்தி செய்வர். இடம், பொருள், ஏவல் என்பன இடங்கொடாவிடில் ஒரு பக்ஷமாகிய 15 நாட்கள் வரை அபிஷேகம் உற்சவம் என்பன நிகழ்த்த 45வது தினமாகிய மண்டல பூர்த்தியில் மண்டலாபிஷேகம் செய்வர். இது பெரும்பாலும் சஹஸ்ரகலசஸ்நபனமாக அல்லது சகஸ்ரசங்காபிஷேகமாக நிகழ்த்தப்பெறும். மண்டலாபிஷேக பூர்த்தியிலே தான் சுவாமிக்கு இரக்ஷாபந்தன உத்வாசனம் செய்தல் ஆகம முறையாகும். ஆசார்யாபிஷேகம் முதலிய தீக்ஷாவைபவங்களிலும் மண்டலாபிஷேகம் முடிந்த பிற்பாடுதான், இப்க்ஷாவிசர்ஜனம் (காப்பவிழ்த்தல்), கண்கூடு. விரிக்கிற்பெருகும்.

### மண்டலாபிஷேகத்தின் நோக்கம்

கும்பாபிஷேகக் கிரியைகள் எங்ஙனம் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள கிராமமக்கள் ஷேமமாக வாழவேண்டுமென்னும் உயர்ந்த நோக்கங்கொண்டு செய்யப்படுகின்றனவோ அதே இலட்சியத்துடன் தான் மண்டலாபிஷேகமும் நிகழ்த்தப்படுகின்றது. அத்துடன் இவ்வபிஷேகம் மேலும் அநேக சாந்திகளைச் செய்கிறது. கும்பாபிஷேகம் அல்லது 'குடமுழுக்கு' என்னும் பிரதிஷ்டைக்குப் "பெருஞ்சாந்தி" என்றும் வழக்காறுண்டு இப்பெருஞ்சாந்தியிலே அஷ்டபந்தனம் சாத்திய தோஷங்கள் நீக்கற்பொருட்டும் வேறு குறைகுற்றங்கள் நேர்ந்திருப்பின் அவற்றை நீங்குதற்பொருட்டும், கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டுமே மண்டலாபிஷேகம் அவசியம் செய்யப்படுகின்றது. ஆதலின் கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தியின் சாந்தியாக விளங்கும் மண்டலாபிஷேகத்தில் இடம்பெறும் சங்காபிஷேகத்தின் தனிப்ரெுமையை இக்கட்டுரையில் சிறிது விளக்குவோம்.

### சங்கின் பெருமை

சங்கு வைதிக சமயத்தவர்களுக்கு மட்டுமன்று பௌத்தர் முதலிய ஏனைய மதத்தவர்க்கும் சிறப்புடையது. இது சிறந்த இரத்தினங்களுள் ஒன்றாக எல்லோராலும்

மதிக்கப்படுகின்றது. ஆலயங்கள், இல்லங்கள் முதலிய எத்தகைய கட்டிட நிர்மாண வேலைகளிலும் அத்திபாரத்துக்குரிய பொருள்களுடன் நவரத்தினங்களுடன் சேர்ந்து உபயோகிக்கப்படுகின்றது. இதனுடைய நாதம் ஆலயங்களில் நடக்கும் மகோற்சவத்தில் சர்வாத்ய கோஷங்களில் முக்கியமானது. இவ்வொலி ஓங்கார ஒலியைக் குறிப்பது.

### சங்கும் நித்ய பூசையில் அதன் பங்கும்

வைதிக சைவர்கள் ஆத்மார்த்தமாகவோ, பரார்தமாகவோ செய்யும் நித்திய, நைமித்திக காமிய பூசைகளில் சங்கு பூசைமுக்கிய இடத்தை பிடிக்கின்றது. ஆசாரியர் கண்டாநாதம் செய்து தீபதேவியைப் பிரார்த்தனை செய்ததும், கலச பூசைக்கு முன்னர் சங்கபூசை செய்வார். ''நத்தார்படை''யின் மகிமை சொல்லுந்தரமன்று சங்குப் படையின் மத்தியிலே அதன் அதிதேவதைகளாகிய கங்காதேவியும் வருணனும் வசிக்கின்றனர். அதன் பிற்பக்கத்தில் பிரஜாபதி விளங்குகின்றார். அதன் முன்பாகத்தில் கங்கையும் சரஸ்வதியும் உறைகின்றனர். ஸ்ரீவாசுதேவன் ஆணையினாலே மூவுலகத்திலுள்ள தீர்த்தங்கள் யாவும், சங்கின் கண்ணே நின்று நிலவுகின்றனர். இக்காரனத்தினால் சங்கு அறிவாளிகளால் பூசிக்கப்படுவதாக ஓ ! பாஞ்ச ஜன்னியமே ! நீ முன்னர்த் திருப்பாற் கடலில் உதித்தனை ! மஹாவிஸ்ணுவினால் கரத்தில் தரிக்கப்பட்ட எல்லாத் தேவர்களாலும் பூசிக்கப்பட்டன ! இப்பெற்றித்தாய உன்னைப் போற்றதும் தேவர் தம் பகைவராய பாதலத்து அசுரர்களின் மனைவியரின் கருத்துக்களையெல்லாம் உன் போரொலியினால் ஆயிரம் துகள்களாக்கின ! உனக்குவணக்கம் !'' என்று துதித்து மந்திரபூர்வமாக நிரப்பப்பட்ட சங்கு தீர்த்தத்தின் பாதியினால் கலசத்தை நிரப்பி, மீதிப் பாதியினால் பூசைத் திரவியங்களின் மீதும் தன்சிரசின் மீதும் தெளித்து மீட்டும் மந்திர பூர்வமாகச் சங்கை நிரப்பவேண்டும்.

### சங்கு இருவகை

சங்கு இருவகைப்படும் இடம்புரி, வலம்புரி எனஅவை புராணங்களில் முறையே வாமாவர்த்தம், தக்ஷிணாவர்த்தம் என்றழைக்கப்படும். இவை இரண்டிலுனுள்ளும் வலம்புரி மிக விசேடமானதும் கிடைத்தற்கரியதுமாகும்.

### சங்கு தீர்த்த விசேடம்

சங்கு தீர்த்தம் பற்றி பத்ம புராணங்களில் 126ம் அத்தியாயத்தில் சிறப்பான குறிப்புக்கள் உள. சங்குதீர்த்தம் தேவர்களுக்கும் பெரு விருப்பமானது. அதன் நீர் புனிதப்படுத்தும் தன்மையது. அது புனித தீர்த்த சொரூபமானது. (சாக்ஷாத் பரமேசுவரன் ஒருவரைத் தவிர) எவ்விடத்தில் சங்கொலி உண்டோ. அங்கு இலக்குமி நீங்காது வாசம் செய்வாள். எவன் சங்கு தீர்த்தத்தினால் நானமாடுகிறானோ அவன் எல்லாத் தீர்த்தங்களிலும் நானமாடிய பலனைப் பெறுகிறான். சங்கு அரியின் உறைவிடம். சங்கு எங்குளதோ அதற்கு வெகுதூரத்தில் மூத்தாள் உதைவாள்.

சங்கில் பால்நிரப்பி இறைவனை நீராட்டினால் ஆயிரம் யாகங்கள் செய்த பலனை அடையலாம் என்றும், ''சங்கிலே கங்காதீர்த்தம் கொண்டு இறைவனை நீராட்டுவோன் பிறவிப்பிணியை வேரறுப்பர்'' எனவும் பலவிதமாகச் சங்கு தீர்த்த விசேடம் பற்றிப் பிரமணவர்த்த புராணம் முதலியவை கூறும்.

### வலம்புரிச் சங்கின் மகிமை

தக்ஷிணாவர்த்த (வலம்புரி) சங்கின் சிறப்புப் பற்றியும் அதன் இலக்கணங்கள் பற்றியும் சாஸ்திரங்கள் வரித்துக் கூறுகின்றன.

வலம்புரிச்சங்கில் வார்த்த நீர் கொண்டு எவன் இறைவனை அர்ச்சிக்கிறானோ அவன் ஏழு பிறவிகளிலும் செய்த வினைகள் யாவும் அக்கணமே நீங்கப் பெறுகிறான் என்று ஸ்காந்தம் கூறும்.

இத்தகைய சிறப்புக்களோடு கூடிய இடம்புரி வலம்புரிச் சங்குகளினால் நீர் பெய்து சிவாகமங்களின் விதிமுறை வழுவயது. வேதமந்திரங்களினால் ஆசன மூர்த்தி மூலமாக அர்ச்சித்து சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசுவரப் பெருமானை நீராட்டினால் பக்தர்கள் அடையும் பலன் சொல்லும் தரமன்று. பல்வகை மூலிகைகளோடு கூடிய அபிஷேக தீர்த்தத்தை பக்தகோடிகள் சிரசில் புரோட்சித்து உள்ளும் பருகின், வைத்தியநாதன் திருவருளால் உடற்பிணி உயிர்ப்பிணி யாவும் நீங்கப் பெற்று இஷ்டசித்திகளைப் பெற்றுய்தல் சத்திவம்.

*சுபம்.*

# சங்காபிஷேக மகத்துவம்

மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களுக்கு அப்பாற்பட்டு எங்கும் பரந்து பரம் பொருளாக விளங்கும் இறைவன் ஒருருவன் நாமம் அற்றவன் ஆயினும் பக்தகோடிகளின் பாவப்பிணியை நீக்கி, அவர்களின் இஷ்ட காம்யங்களை அருளி ஈடேற்றுவான் வேண்டிய உருவத்திருமேனியுடன் வந்து பல திருவிளையாடல்களைப் புரிந்து காட்சி கொடுத்து அருளுகின்றான். இத்தகைய உருவங்களை நமது பரிபக்குவ நிலைகளுக்கேற்ப விக்கிர வடிவினிலே வடித்தெடுத்து ஆலயங்களிலே பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றோம். இவ்வாறாக இறைவன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயங்களிலே நிகழும் கிரியைகள் நித்தியம், நைமித்திகம். காமியம் என மூவகையின. தினந்தோறும் நிகழும் கிரியைகள் நித்திய கிரியைகள். ஒரு காரணத்தைக் கொண்டு நிகழ்வன நைமித்திகக் கிரியைகள். பெறுபேற்றினை அவாவிச் செய்யப்படுவன காமிய கிரியைகள் எனப்படும்.

காமியம் என்றால் நாம் மனதில் விரும்பிய இஷ்ட சித்திகளை அடையும் நோக்குடன் பலன்கருதி செய்யப்படும் கிரியை பூஜை ஆகும். பெரும்பாலும் நிஷ்காமியமாக அதாவது பலன் கருதாது வழிபடுதலே சிறந்தது. ஆயினும் மானிடராகப் பிறந்த நாம் பயனை விரும்புவதே இயற்கையல்லவா! ஒரு சில பெரியோர், மேனிலை பெற்றவர்கள், அறிவு முதிர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே பலன் கருதாது நிஷ்காமியக் கிரியை செய்ய முற்படுவர். பலவிதக் கிரியா முறைகளை, விளக்கிக் கூறும் பொக்கிஷங்களான ஆகமங்கள், இவ்வாறு பயன்கருதி செய்வோருக்கும் தக்கபடி பலகிரியைகளைக் கூறுவதுடன் முடிவினில் அக்கிரியைகளால் வரும் பயன்களையும் கூறுகின்றன. இவ்வாறு பலனைக் கருதி நேர்கடன் முதலியன செய்தல் வழக்கமாகிவிட்டது.

உருவம் பொருள்களையே கண்டு மனத்தை அதில் பதிக்க – செலுத்தவல்லன பரிபக்குவமடையாத ஆன்மாக்கள், ஒருருவம், நாமம், விருப்பு வெறுப்பு ஆகியன இன்றி நின்மலராக விளங்கும் பரம்பொருளுக்கு தங்கள் மனத்தை ஒரு முகப்படுத்தி வழிபடுவதற்காகப் பல உருவங்களில சிலைகளை வடித்து அவற்றின் மூலம் பேரருள் பெற முனைகின்றனர். தன்னைப் பெற்று வளர்த்து மேனியை அடையச் செய்த பெற்றோர்களுக்கு தங்கள் நன்றிக்கடனாக மனநிறைவுக்காக உள்ளன்புடன் அவர்களை குளிப்பாட்டி விலைமதிப்பற்ற ஆடை அணிகள் அழகு செய்து ஆனந்தமடையும் நற்புதல்வர்களைப் போல், நாமும் ஆண்டவனுக்கும் அவற்றை செய்து மனநிறைவு பெறுகின்றோம். பலவித நேர்கடன்களைச் செய்து திருப்தி அடைகின்றோம் அல்லவா!

ஆலயங்களில் நிகழும் காமியக் கிரியைகளில் ஒன்றான சங்காபிஷேகம் பற்றி சுருக்கி விளக்குவதே இக்கட்டுரை ஆகும்.

சங்காபிஷேகம் என்பது சங்கினால் செய்யப்படும் அபிஷேகம் என்று பொருள்படும். பலவிதமான அபிஷேகங்களுள் சங்கினால் செய்யப்படும் அபிஷேகமானது மிக மிகச் சிறந்த பலனைக் கொடுக்க வல்லதாய் விளங்குகின்றது. இதனை மண்குடத்திலும் பார்க்கச் செப்பினால் செய்யப்பட்ட குடம் ஆயிரம் மடங்கு விஷேசமானது. அதனிலும் வெள்ளியினால் செய்த குடம் பதினாயிரம் மடங்கு விசேடமானது. அதினிலும் பொன்னால் செய்யப்பட்ட குடம் இரண்டு லட்சம் மடங்கு விசேடமானது. இவைகளிலும் பார்க்க இரத்தினங்களினாலலங்கரிக்கப்பட்ட காண்டாமிருகக் கொம்பு இருமடங்கு விசேடமானது. அதைக் காட்டிலும் கடலிற்றோற்றிய சங்கு கோடி மடங்கு விசேடமானது என்ற பொருளில்

"மருத் கும்பாத் அதிகம் சஹஸ்ரகுணிதம்
தாம்ரம் ததோ ரௌப்யஜம்
கும்பஞ்சாப்யயுதம் ததோப் த்வி குணிதம்
லக்ஷசம் சுவர்ணோத் பவம்;
ஏதேப் யோ த்விகுணிதம் சரத்ன
கசிதம் ச்ருங்கம் சவேயஸ்ய தத்
தஸ்மாத் கோடிகுணம் சமுத்ர
ஜநிதம் சங்கம் சிவேனோதிதம்"

பாடல் மூலம் அறிகின்றோம்.

இச்சங்கமானது முன்னொருபோது

சாகரத்திலே (தேவர்கள் திருப்பாற் கடலை கடைந்தபோது தோன்றியவைகளுள் ஒன்றாக) தோன்றி விஷ்ணுபகவானுடைய திருக்கரத்தில் அமர்ந்திருக்கும் பேறு பெற்றது. எல்லாத் தேவர்களாலுமு ஏத்திப் போற்றப்படும் பெருமை பெற்று விளங்குகின்றது. இத்தகைய சங்கே உனக்கு வணக்கம், என்ற பொருளமைந்த

"த்வம் புர சாகரோகுபந்தா
விஷ்ணுநா வித்ருத: கரோ!
பூஜித்: சர்வதேவைஸ்ச பாஞ்சஜந்ய
நமோஸ்து தே" !

என்ற சுலோகம் இதைநன்கு விளக்குகிறது.

மேலும், சங்கு சந்திரனையும் சூரியனையும் அதிதேவதையாகக் கொண்டது. நடுவே வருணனும், பின்பாகத்தில் பிரஜாபதியும், நுனியில் கங்கா நதியும் சரஸ்வதி நதியும் அடிப்பாகத்தே பிரமனும், நடுப்பகுதியில் சரஸ்வதியும், சகலவிதமான புண்ய தீர்த்தங்களும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர் என்ற பொருளில்

"சங்கம் சந்த்ரார்க்க தைவத்யம்
மத்யே வருண தைவதம்!
ப்ருஷ்டே ப்ரஜாபதிம் வித்யாத்
அக்ரே கங்கா சரஸ்வதீ!
சங்காக்ரே சர்வ தீர்த்தாநி
தஸ்மாத் சங்கம் ப்ரபூயேத்"!

என்ற பாடல் மூலம் சங்கினுடைய பெருமை தெள்ளத் தெளிவாகின்றது.

மேலும், இறைவனுடைய இருகண்களாக விளங்கும் ஒளிப் பொருள்களான சூரியனும் சந்திரனும், நிர்மலமான பாற் சமுத்திரத்திலே. தோன்றி அப்பழுக்கின்றிப் பரிசுத்தமாக மிளிரும சங்கிலே அமர்ந்திருந்து அருள்வதும்; தனக்கோர் நிறமற்றிருக்கும் புனித ஜலதேவதையான வருணனும், வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைக் கமலத்தே வீற்றிருந்து அருள் பாலிக்கும் சரஸ்வதி தேவியும், தாமரையாசனராகிய பிரம்மனும், சுத்தமான சங்கிலே உன்றவதும் கண்ணுக்குத் தோன்றாத உருவத்தில் பூமியினடியில் சென்று உறைகின்ற பெருமை பெற்றதான சரஸ்வதி நதியும், பாபஞ் செய்தோர்களையும் தனது ஸ்பரிசத்தினால் புனிதம் செய்து மேலான பேற்றினையளிக்கும் கங்கா நதியும், ஏனைய பல புனித புண்ணிய தீர்த்தங்களும் வந்தமர்ந்து, சங்கினில் நிறைந்து – அபிஷேகிக்கும் நீரினிலே ஆவிர்பவித்து அருள்மழை பொழிகின்றன எனின் இதன் பெருமையினைப் புகலவும் வேண்டுமோ!

இவற்றின் மூலம் சங்கு தெய்வீக சக்தி வாய்ந்தது. என்பதனையறிந்தோம். இத்தோடு மட்டுமன்றி சங்கு பற்பல நோய்களையகற்றித் தீர்க்கக் கூடிய சக்தி வாய்ந்தது. இதனாலன்றோ நம் மூதாதையர் தொன்று தொட்டு குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கும் போது "பாலடைச் சங்கு" என்பதில் மருந்தினை வார்த்துக் கொடுத்து வந்தனர்.

இவ்வாறு பல சக்திகளைக் கொண்ட சங்குகளில் நீர் நிறைத்து அபிஷேகித்தலையே சங்காபிஷேகம் என்று கூறுகின்றறோம்.

சங்காபிஷேகம் – பெரும்பாலும் அஷ்டோத்தர சத (1108) அல்லது அஷ்டோத்திர சகஸ்ர (1008) எனறு இரு வகையினதாகும் விதிமுறைப்படி அமைக்கப்பட்ட யாகசாலையிலேலிருத்த (வட்ட) கிரமமாகவோ 'வியூக' கிரமமாகவோ அமைத்து அதனில் சங்கங்களைத் தாபித்து சுகஸ்ந்த வஸ்துகள் முதலியவற்றுடன் கலந்து ஜலத்தை நிறைத்து – மேலே – மாவிலை – தருப்பை புஷ்பம் முதலியவற்றால் அலங்காரஞ் செய்து – அதில் இறைவனை ஆவாகித்து யாக பூசனை புரிந்து சங்க பூசை செய்து பூசிப்பர். (ஐந்து) பஞ்ச குண்டமோ, (ஒன்பது) நவகுண்டமோ தக்கபடி அமைத்து ஓமஞ் செய்து பின் – அந்தச் சங்க நீரினால் – இறைவனுக்கு அபிஷேகஞ் செய்வர். இதனால் இறைவனுக்கு மூர்த்தீகரமும், சாந்நித்தியமும் உண்டாவதோடு பக்தர்களின் மனோபீஷ்டங்களும் பூர்த்தியாகி அருள்மழை பெருகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

யாக மண்டபமானது ஷடத்தவாக்களின் சொரூபமாக அமைந்துள்ளது. யாகசாலை எங்கும் சாந்தியதீத கலை சொரூபமாக உள்ளது. கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு முதலிய நான்கு வாயில்களும் சாந்தி

வித்தை – பிரதிஷ்டை – நிவிருத்தி என்னும் காலத்வா வடிவாக உள்ளன. இவ்வாறு ஆறு அத்துவாக்களின் சொரூபமாக விளங்கும் யாகசாலையை முறைப்படி அமைத்து நடுவில் வேதிகை அமைப்பார்கள். அதில் பிரிதிவிதத்துவம் கூர்மாசனம், உபவேதிகை அநந்தாசனம், மகா வேதிகை சிம்மாசனத்தைக் குறிக்கும. நெல் யோகாசனம், அரிசி பத்மாசனம், எள்விமலாசனம் நென்மலர் சத்தியாசனமுமாக – பிருதுவி முதல் குடிலை ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களும் ஆசனமாக அமைகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட வேதிகையின் 1008 சங்குகளை விருத்தக் கிரமமாகவோ அதாவது வட்டமாக பீடமமைத்து அதில் 16 ஆவரணம் அல்லது 17 ஆவரணம் என்ற முறையில் அமைத்து அதில் சங்குகளை ஸ்தாபனம் செய்வர். இதேபோல் வீயூகக் கிரமமாக – அதாவது அகாரந்தினம் க்ஷகாராந்த வீயூகமாகவும் சங்குகளை ஸ்தாபிக்கலாம். சிவாலயங்களில் சிவனை – சக்தியுள் பிரதானமாக மத்தியில் வைத்துப் பின்னர் அஷ்டவித்யேசுவரர்கள் என்பாரை அமைப்பர். அவருடைய பரிவாரங்களாக 1008 சங்குகளிலும் அவ்வவ் மூர்த்திகளின் நாமக்களைக் கூறி – அத்தெய்வங்களை ஆலாகித்து பூசனை நிகழும், ஓரரசன் சபையில் வீற்றிருக்கும் போது மந்திரி – பிரதானி முதலியோர் புடைசூழ அமர்ந்திருத்தல் வழக்க மல்லவா! இது போன்றே உலகின் தனிப்பெரும் பேரரசராகிய இறைவனை அவரது பரிவாரத் தெய்வங்களுடன் சூழ அமர்த்தி அவ்வவற்றுக்குரிய நாமாக்களுடன் பூசை நிகழும். இவ்வாறு விரிவாகச் செய்யப்படும் அபிஷேகத்தால் இறைவன் உளம் பூரித்து இஷ்ட காம்யார்த்தங்களை, வேண்டுவார் வேண்டியவாறு அருளுவான் என்று ஆகமங்கள் கூறிகின்றன.

இவ்வாறு இறைவனுக்குப் பல நாமங்களைக் கூறி வழிபடும் முறை முதலில் யஜீர் வேதத்தில் காணுகின்றோம். இதனை ''சதருத்ரீயம்'' என்னும் பகுதியில் காணுகின்றோம். இவை காலக்கிரமத்தில் நூறாகவும் ஆயிரமாகயும் பெருகி இவைகளைக் கூறி அர்ச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறு இக்கிரியைகள் ஆகம விதிப்படி அமைந்த கோவில்களில் இன்றும் நிகழ்வதைக் காணலாம்.

இவ்வாறு தொடர்பாக – நிகழும் கிரியையின் பின்னர் – பிரதான வேதிகையில் பூஜை தொடங்கும். அதில் – முறைப்படி ஆதார சக்தி முதல் பங்சாசன – பஞ்சாவரண பூசையுடன் எந்தத் தெய்வம் – பிரதானமோ அதன் மந்திரங்களைக் கூறி தியானித்து ஆவாகனம் செய்து மூல மந்திரத்தைக் கூறி அக்கும்பத்தில் இறைவனை வணங்குவார். இவ்வாறு நிகழுங்காலை ஒவ்வொரு உறுப்புக்கள் – அங்கங்களில் – பலவித நியாயங்கள் நிகழ – அக்கினிகாரீயம் – தொடங்கும் "அக்கினி முகா தேவா: என்று வேதத்தில் கூறியபடி அக்னி தேவர்களின் முகம் போன்றவர், ஆகையால் – அக்கினியில் செய்யப்படும் கிரியைகள் ஓமங்கள் எல்லாம் எத்தெய்வத்தின் பெயரில் ஆகுதி செய்கின்றோமோ – அத் தெய்வங்களை சென்றடையும் – அதனால் – திருப்தியடைந்த தேவர்கள் வேண்டிய சித்திகளை அளிப்பர். இவ்வக்னி கார்யம் ஆலயக்கிரியைகள் எல்லாவற்றிலும் அதாவது – பிரதிஷ்டை முதல் உற்சவம்வரை உற்சவம் தொடங்கி பிராயச்சித்தம் வரையுள்ள சகல கிரியைகளிலும் மற்றும் மங்கள விஷயங்களிலும் அக்கினி பூசிக்கப்படுவது அக்னி சகல தேவர்கள் மயமாகவும் – சகல மந்திர மயமாகவும் – சகல வித்தை மயமாகவும் விளங்குவதாய் – இதனை எல்லாக் கிரியைகளிலும் அக்கினியைத் தியானிக்க வேண்டும் என்று கூறுவதாலும் அதன் பெருமை விளங்குகின்றது. ஆகவே இவ்வித சிறப்புப் பெற்ற அக்கினியில் அக்கினிகார்யம் செய்து அக்கினியில் அந்தந்த மூர்த்திகளை ஆவாகனம் செய்து பின் நாட்சந்தானம் – அதாவது அக்னியிலிருந்து பிரதானகும்பத்துடன் தொடர்புபடுத்தி அக்னிகாண்மும் – முடிவில் விஷேதிரவிய ஓமமும் நிகழும் – முடிவினில் "மகாபூர்ணா குதி" செய்து – அக்னியில் பூஜித்த இறைவனை கும்பத்தில் ஒடுக்கி – கும்பத்தை எழுந்தருளச் செய் – சங்குகளால் மூர்த்திக்கு அபிஷேகம் செய்வர்.

இவ்வாறு சிறந்ததான சங்க அபிஷேகத்தினால் நாம் வேண்டிய – இஷ்ட சித்திகளைப் பெறுவதுடன் இகத்திலும் – பரத்திலும் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவோம்.

எனவே இவ்வுலகிலே கலவகைப் பிறப்புக்களிலும் சிறந்த மானிடப் பிறவியினைப் பெற்ற நாம் இயன்ற அளவு சிவகைங்கரியங்களை செய்து வந்தால் பெரும்பயனும், பிறவி பெற்ற தன் முழுப்பயனும் பெற்றவர்கள் ஆவோம்.

சுபம்.

# சங்காபிஷேகம்

புகழ் பெற்ற ஆலயங்களில், பல சமயங்களில் நூற்றெட்டு முதல் ஆயிரத்தெட்டுச் சங்குகளில் நன்னீர் நிரப்பி, அதனை முறைப்படி பூசித்து, அந்நீரை ஆலய மூர்த்திகட்கு அபிஷேகம் செய்வதைச் "சங்காபிஷேகம்" என்கின்றோம்.

இவ்வபிஷேகம் நடத்தும் முறைகளைக் கவனித்தால் இதற்கும் மனித இனத்திற்கும் உள்ள தொடர்பு, அதனால் ஏற்படும் நன்மைகளும் இதனுட் பொதிந்து கிடப்பதை அறியலாம்.

## சங்குகள் வைக்கும் முறை

108 அல்லது 1008 சங்குகளையும் இறைவன் திருச்சந்நிதியில் பன்னிரண்டு இராசி குண்டங்களாகப் பிரித்து ஒவ்வோர் இராசி குண்டங்களிலும் ஒன்பது சங்குகள் வீதம் பன்னிரண்டு இராசியிலும் 108 சங்குகள் வைத்து எட்டுத் திக்குகளுக்கும் எட்டுப் பிரதான சங்குகளையும் நடுவில் வலம்புரி, இடம் புரி இரு சங்குகளையும் "சிவசக்தி" என அமைத்தல் வேண்டும்.

வலம்புரி, இடம்புரி சங்குகளைச் சுவாமியும் அம்பாளுமாகப் பாவித்துப் பிரதிட்டை செய்தல் வேண்டும்.

இவ்வாறு அமைக்கப் பெற்ற 118 சங்குகளிலும் 1+1+8=10=1 எல்லாம் "ஒருவனே" என்ற தத்துவப்படியும் அமைத்தல் வேண்டும்.

உடம்பின் அமைப்புப்படி குடத்தில் தேங்காய் தலையாகவும், தர்ப்பை முடிகள் தலைமயிராகவும், மாவிலைகள் அவயங்களாகவும், வெள்ளைநூல் நரம்புகளாகவும், வர்ணநூல் எலும்புகளாகவும், தசைகளாகவும், நிரப்புகின்ற நன்னீர் இரத்தமாகவும், பாவிக்கின்ற தத்துவப்படி இரண்டு வெள்ளிக் குடங்களில் நன்னீர் நிரப்பி, அவற்றில் கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, புனுகு விளாமிச்சிவேர், ஏலம், பன்னீர், மஞ்சள் முதலிய வாசனாதித் திரவியங்களைச் சேர்த்து ஒவ்வொரு சங்கிலும் மாவிலை, தர்ப்பை மலர் வைத்து யாக குண்டத்தின் எதிரில் அமைத்தல் வேண்டும்.

## பூஜை முறை

சங்குகள் ஒவ்வொன்றும் ஓம், ஓம் என்று ஒலித்துக் கொண்டிருக்கும். இவையாக குண்டத்தைச் சுற்றி ஐந்து நாழிகை நேரம் "ஓங்கார" மந்திரம் செபிக்க, அம்மந்திரம் தீர்த்தத்தில் கலக்கின்றது. தர்ப்பைப் புல் மூலம் தெய்வசக்திகளையும் மாவிலையில் உள்ள துவர்ப்புச் சக்தியையும் தீர்த்தம் ஈர்த்தும் கொள்கின்றது. வேத சாத்திரங்களின் செபமந்திரங்களும் ஓதி ஒவ்வோர் "இராசி" மண்டலத்திற்கும் எட்டுத்திக்குகளில் உள்ள சங்குகளும், வலம்புரி, இடம்புரி சங்குகளும் முறையே பூசைகள் செய்தல் வேண்டும்.

அதன் பின்னர் (யாக குண்டத்தில்) வேள்வி மண்டபத்தில் ஆகவணீபம், தட்சினாக்கினியம், காருளாபத்தியம் என்னும் முத்தியை முறையே, ஆல், அரசு, அத்தி, மா, பலா, வெள்ளெருக்கு, வன்னி, நாயுரிவி, தர்ப்பை முதலிய சிப்பிகளால் வளர்த்து, நவதானியம், வாசனாதி, திரவியம், கனிவகை, தேன், தேங்காய், பீதாம்பரம், இலவங்கம், தாம்பூலம், பொரி முதலியவற்றோடு நறுநெய் தாரையாகப் பெய்து ஒரே சோதிப் பிழம்பாக அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணைக் கடவுளுக்கு அக்கினி மூலமாகக் கொடுத்து பலிபோட்டு, காரியாக்கினியிலிருந்து மூவாக்கினியாகிய இரு சங்குகளிலும் பிரதிட்டை முடித்து தூபதீபநிவேதனம் கற்பூரார்த்தி முதலியவற்றைச் செய்து வாத்தியங்களோடு பிரகாரவலம் எழுந்தருளச் செய்து உலகம் தீங்கின்றி உய்யும் பொருட்டு வேண்டிக் கொண்டு ஆசிபெற்று ஒவ்வொரு சங்கு தீர்த்தத்தாலும் இறைவனை முறையே அபிஷேகம் செய்வித்தல் வேண்டும்.

தொடர்ந்து பல தீபங்கள் ஏற்றி, கண்கவர் அலங்காரங்கள் செய்து தூப நவக்கிரக அலங்கார தீபத்தால் பஞ்சபூதம் பஞ்ச இந்திரியம் (ஐம்புலன்கள்) ஐந்து முகங்களுக்கு பஞ்சமுக தீபாராதனையாக, சிவன்கள் சுகவாழ்வு பெறவேண்டி கற்பூரார்த்தி முதலிய மங்களகரமான ஆராதனைகள் செய்தல் வேண்டும்.

## வழிபாடும் பயனும்

இச்சாங்காபிஷேகத்தை மக்கள் கண்டுகளித்து வருகின்றனர். இதனைக் கண்டு இறைவனை வழிபடுகின்றவர்கள் எல்லாப்பேறும் பெற்றுப் பெருவாழ்வு நிறைவதற்கு சங்கு தீர்த்தம் பெற்று உட்கொண்டும், தலைமீது தெளித்தும் வருகின்றனர்.

நம் முன்னோர்கள் உடம்பையும் உள்ளத்தையும், உள்ளுறையும் பஞ்ச பூதங்களையும் புனிதமாக்கும் பொருட்டு இச்சங்காபிஷேக வழிபாட்டு முறையை வகுத்துள்ளனர்.

மருத்துவ குணங்கள் நிலையின் படியும், காலசக்கர சுழற்சியின் படியும் கார்த்திகை மாதம் தேள்போன்ற விருட்சிக இராசியில் பிரதான கோள் சூரிய கிரகம் சஞ்சரிக்கும் காலமாகும். தட்பவெப்ப நிலையில் மாறுபட்டு, மழை, குளிர் காரணமாக வெப்பநிலை இல்லாது நஞ்சுக்கிருமிகள் வளர்ச்சியால் மக்களின் உடற்கூறில் வேறுபாடுகள் தோன்றிப் பற்பல நோய்கள் அணுக வாய்ப்புண்டாகின்றது. எவ்விதப்பிணியும் நேராதிருக்கும்படி முன்னேற்பட்டாக அதனைத் தவிர்க்க ஒவ்வொரு சோமவாரமும் சங்காபிஷேகம் செய்து வந்தனர். இதனால் குளிர் நோய்கள், ஜலதோசம், இருமல், சுரம், பேதிகள், அணுகா என்று நம்பியிருந்தார்கள். உயிரினங்கள் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை. சீவனாகிய சிவன் அனைத்திலும் குடிகொண்டிருக்கிறார். சிவனுக்குச் செய்வதனைத்தும் மக்களையும் சார்ந்து நலம் பயக்கும் என்பதாலும், சிவனே சீவனாகும் என்ற திருமூலர் வாக்கின்படியும் கொண்டு, சங்காபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

கால முறைப்படியும், மருத்துவ அடிப்படையிலும் அனுபவ முறையாலும், சங்குகளில் நிரப்பும் நன்னீரிலே கலக்கப்பட்ட திரவிய வகைகள், கோரோசனை கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, சந்தனம், புனுகு சவ்வாது, அத்தர், விளாமிச்சை வேர், சாம்பிராணி, பன்னீர் பல விதப்பச்சிலை, மலர்கள், தர்ப்பை முதலியவற்றின் குணநலன்களாலும் இச்சங்கு தீர்த்தத்தை மக்கள் பருகியும், தெளித்தும் குடல் சம்பந்தமான எவ்வித நோயும் வராமல் காக்கவும், சித்தவைத்திய முறையையும் எண்ணிச் சங்காபிஷேகத்தைச் செய்து வருகின்றனர்.

உலக நலத்திற்காக, மனித நலத்திற்காக மேற்கொள்ளப்பட்டு வந்த இச்சங்காபிஷேகத் திருவிழாவை ஆண்டுதோறும் திருக்கோயில்களில் பெருவிழாவாக நடத்தி வருகின்றனர். இவ்வபிஷேக விழாவினைக் கண்டு களித்து அபிஷேகத் தீர்த்தத்தைப் பருகி நலம்பெறப் பெரும்பாக்கியமாக எண்ணி, உள்ளம், உடல் அனைத்தையும் புனிதமடையச் செய்து அம்மையப்பரின் பேரருள் பெற்று இம்மையிலும் மறுமையிலும் பேரானந்தப் பெருவாழ்வு அடைவோமாக.

# அபிஷேக திரவியங்களும் அதன் பலாபலன்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுத்த ஜலம் | - | சாந்தி தரும். |
| 2. | வாசனைப் பொருள் அபிஷேகம் | - | மல நிவாரணம் |
| 3. | வாசனைத் திரவியங்கள் | - | ஆயுள் வலிமை தரும். |
| 4. | தைலம் (எண்ணெய்) | - | சுகத்தை தரும். |
| 5. | சந்தனக் குழம்பு | - | செல்வத்தைத் தரும். |
| 6. | பால் | - | ஆயுள் விருத்தி |
| 7. | தயிர் | - | புத்திர பாக்கியம் |
| 8. | நெய் | - | மோட்சம் |
| 9. | தேன் | - | இசை ஞானம் |
| 10. | கருப்பஞ்சாறு | - | நித்ய சுகம் தரும் |
| 11. | வாழைப்பழம் | - | பயிர் விருத்தி |
| 12. | பலாப்பழம் | - | மக்கள் ஆதரவும் அன்பும் |
| 13. | சக்கரை | - | சத்துரு நாசம் |
| 14. | மாம்பழம் | - | சகல நன்மை |
| 15. | மாதுளம் பழம் | - | பகைவர் கேடு |
| 16. | தோடம்பழம் | - | பூமி இலாபம் |
| 17. | நாரத்தம்பழம் | - | நற்புத்தி |
| 18. | இளநீர் | - | சந்தான விருத்தி |
| 19. | விளாம்பழம் | - | ரோக நிவர்த்தி |
| 20. | எலுமிச்சம்பழம் | - | மருத்துவ நிவாரணம் |
| 21. | பச்சைக் கற்பூரம் | - | பயமின்மை |
| 22. | கோரோசனை | - | ஆயுள் பெலம் |
| 23. | கஸ்தூரி | - | காரிய சித்தி |
| 24. | பன்னீர் | - | குளிர்மை |
| 25. | அன்னம் | - | ஆயுள் ஆரோக்கியம் |
| 26. | பஞ்ச கவ்யம் | - | ஆன்ம சுத்தி |
| 27. | பஞ்சாமிர்தம் | - | செல்வச் சிறப்பு |
| 28. | பேரீந்து, முந்திரிகை | - | உளத் தூய்மை |
| 29. | விபூதி | - | நோய் நிவாரணம் |
| 30. | குங்குமப் பூ | - | மனச் சாந்தோஷம் |
| 31. | மஞ்சள் நீர் | - | இல்லச் சிறப்பு |
| 32. | பூரண கும்ப அபிஷேகம் | - | இறையருள் தருவது |
| 33. | சங்காபிஷேகம் | - | தர்மார்த்த காமிய மோட்சம் தருவது. |

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூற் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூலிக வாகன !
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்கு தானெழுந். தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளத்தினிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டா ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கமு மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே

இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில்காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக ! விநாயக ! விரைகழல் சரணே !

## 21 பெயர் கொண்ட சூரிய சுலோகம்

ஓம் விகர்த்தனோ விவஸ்வாம்ஸ் ச
மார்த்தண்டோ பாஸ்கரோ ரவி :/
லோகப்ரகாசக : ஸ்ரீ மான் லோகச க்ஷீர்
க்ரஹேச் வர /
லோகஸாக்ஷீ த்ரிலோகேச : கர்த்தா
ஹர்த்தா தமிஸ்ரஹா /
தபனஸ் தாபனஸ் சைவ சுசி :
ஸப்தாச்வ வாஹன : //
சுபஸ்தி ஹஸ்தோ ப்ரஹ்மா ச
ஸர்வதேவ நமஸ்க்ருத : //

இச்சுலோகம் மூவுலகிலும் பிரசித்தமானது இச் சுலோகத்தை படிப்பதனால் சூரிய சகஸ்ர நாமம் படிப்பதானல் உண்டாகும் பயன் கிடைக்கும். ஏவன் இச் சுலோகத்தை காலையிலும் மாலையிலும் படிக்கிறானோ அவன் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விடுபடுவான். வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தாலும் அவற்றினின்றும் விடுபட்டுச் செல்வங்களைப் பெற்று ஆரோக்கியத்துடன் மழலைச் செல்வங்களையும் பெற்று இன்புறுவான்.

## விஷ்ணு சகஸ்ர நாமம்

"ஸ்ரீ ராம ராம ராமேதி – ரமே ராமே
மனோரமே ! ஸகஸ்ரநாம தத்துல்யம்
ராமநாம வரா நநே"

திருமணமாகாத கன்னிப் பெண்கள், குழந்தை பாக்கியம் அற்றவர்கள், நோயில் வீழ்ந்து கிடப்பவர்கள். ஆப்பிரேஷன் செய்ய வேண்டும் என்ற நோயாளர், எந்த வகையான இக்கட்டிலும் நீங்கள் மனதில் நம்பிக்கையுடன் விஷ்ணு சகஸ்ர நாமத்தை கூறிவந்தால் உங்களது இன்னல்கள் விரைவில் நிவர்த்தியாகும்.

# விநாயகர் கவசம்

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்த்த சென்னி
அளவுபாட வதிகசவுந் தரதேகம்
தோற்கடர் தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோ தரர்காக்க
தடவிழிகள் பாலச்சந்திரனார் காக்க
கவின் வளரும் அதரங்கச முகங்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சி புகம் கிரிசை சுதர்காக்க
நனிவாக்கை விநாயகர் தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளெழிற்
செஞ்செவி பாச பாணி காக்க
தவிர் தலுறா திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைத் சிந்திதார்த்தர் காக்க
காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களம் கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாயகன்
காக்க இதயந் தன்னைத்
தோமகலுங்கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர்காக்க
பக்கம் மிரண்டையுந் தராதகர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்னகரன் காக்க விளங்கி லிங்கம்
வியாள பூடணர்தாங் காக்க
தக்க குய்யந் தன்னைவக் கிருதுண்டர்
காக்க சகனத்தையல்லல்
உக்க கணபன் காக்க ஊருவை
மங்கள மூர்த்தி யுவந்து காக்க
தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க
விருபதமேக தந்தர் காக்க

வாழ் கரங்கிப் பிரப் பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க
வில்பதும வத்தர் காக்க
கேழ்கிரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க
அக்கினியிற் சித்தீசர் காக்க
விக்னவர்த் தனர் மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்
கசகன்னன் காக்க திகழ் உதீசி
தக்க நிதிபன் காக்க
வடகிழக்கி வீசாத் தனரே காக்க
ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க
விரவினுஞ் சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க
இராக்கதர்பூத முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத வேக முறு
பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர்
தாம் விரைந்து காக்க
மதிஞானம் தவம்தான மானமொளி
புகழ் குவம்வண் சரீர முற்றும்
பதிவான தனம்தானி யங்கிரகம்
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பவுத்திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க
வென்றி சீவி தங்கபிலர் காக்க
கரியாதி யெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக் காலமுமோ
திடினும்பா விடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா னறிமின்கள்
யாரொருவ ரோதினாலு
மன்றவாங கவர்தேகம் பிணியறவச்
சிரதேகமாகி மன்னும்.

# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உன் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் ருெந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறத்திளைத்தேன் எம்பெருமான்

மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானம் விமலா
பொய்யாயின வெல்லாம் போய் கல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வாய்
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வே
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

*திருச்சிற்றம்பலம்*

# திருப்பள்ளியெழுச்சி

1. போற்றியென் வாழ்வினில் ஒளிதரு முதலே
புவியிரு ளகன்றது அகன்றது துயரம்
ஆற்றலில் மானிடர்க்கருள் மழை பொழிந்தே
அணைத்திட வேண்டுதும் அன்னையின் மேலோய்
காற்றினில் மலர்ந்தது முத்தமிழ் வேதம்
கரமலர் கூப்பினர் அக்கரை மாந்தர்
ஏற்றுடைக் கொடியுடையார் திருமகனே !
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

2. குணதிசை கதிரவன் உதயம தானான்
குவலயம் விழித்தது விழித்தது கமலம்
மணமலர் இனமெல்லாம் மலர்ந்தன காவில்
வண்டுகள் உமிழ்ந்தன தேன்துளி பூவில்
கணபதி கோயிலில் மணியொடு சங்கும்
கடலொலி மெலிவுறக் கறங்கின ஞானம்
இணையறு புகழ்பெறும் அக்கரைப்பற்றில்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

3. பொய்கையில் தாமரை பூத்தது வண்டு
புதுமலர் தேனள்ளிப் பருகின உண்டு
கைவளை குலுங்கிட நல்லின மடவார்
காவிய விழிமலர்ந் தேயிசை பொழிவார்
செய் பழனத்திடை உழவொலி உடனே
திருமணியொலியொடு சங்கினமார்ப்ப
ஏய்தரு வளமுடை அக்கரைப்பற்றில்
எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே !

4. ஆணவமகன்றன அகன்றது இருளும்
அருளொளி எழுந்தன எழுந்தனன் கதிரோன்
மாணொலி செய்துமே குருகினமார்ப்ப
மங்கையர் செங்கையில் மங்கலமெடுத்தார்
நீணகர் தெருவெலாம் செந்தமிழோசை
நித்தனின் கோயிலில் சங்கின நாதம்
ஏணறு திருவளர் அக்கரைப்பற்றில்
எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே !

5. காலையிற் கதிரவன் ஒளிர்க்கதிர் பரப்பி
கனயிருள் கடிந்தனன் கன்றொடு தாயும்
சேலொடு கயல்வரால் உகழ்ந்திடும் பொய்கை
சென்றன எருமைகள் தீம்புனலோடு
பாலிழிந் தொழுகிட பங்கையமலரில்
பள்ளிகொள் குருகினம் பருகின கற்பில்
ஏலுறு மாதர்சூழ் அக்கரைப்பற்றில்
எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே !

6. தேமலர் கைக்கொடு வருபவர் ஒருபால்
தேனுறழ் யாழினம் இசைப்பவர் ஒருபால்
தூ மணிவாசகம் சொல்பவர் ஒருபால்
துதியொடு திருப்புகழ் பாடுவரொருபால்
காமனின் கணையென கமலங்கள் பறித்துக்
கயமுக வள்ளல் தாளிடுபவர் ஒருபால்
ஏமுறு வயல்கள் சூழ் அக்கரைப்பற்றில்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

7. ஆதவன் வரவு கண்டார்த்தன கிளிகள்
அந்தணர் இருக்கொடு அருந்தமிழ் புகன்றார்
பூதலம் விழித்தது புல்லிருள் மறையப்
பொலிவுறத் தண்ணுமை மத்தள ஓசை
காதினி லொலித்ததும் கனிமொழிமடவார்
கண்மலர்ந்தின்புறப் பாலமுதடுவார் !
ஏதமில் மாதர் சூழ் அக்கரைப்பற்றில்

எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

8. மலரொடு தீபங்கள் ஏந்தின ரொருபால்
மண்டியிட்டுருகியே அழுபவ ரொருபால்
உலகிடைத் துறவற மோம்புவ ரொருபால்
உண்ணெகிழ்ந் துருகிட இசைப்பவரொருபால்
அலகொடு மெழுக்கிடும் அரிவைய ரொருபால்
ஆனந்தக் கூத்தினை ஆடுவரொருபால்
இலகிடு புகழ் பெறு அக்கரைப்பற்றில்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

9. ஆதியு மந்தமும் நடுவுமாய் நின்றே

அனைத்தையும் நடத்திடும் அருட்பெருங்கடலே

வேதனும் மாயனும் அடிமுடி காணா

விமலனார் தந்தருள் வித்தகக் களிறே !

பாதக மலவினைத் தளையினை அறுத்துப்

பதமுத்தி தந்தெமைப் பாலிக்க வேண்டும்

ஏதமில் அறம்வளர் அக்கரைப்பற்றில்

எம்பெருமான் பள்ளிஎழுந்தருளாயே !

10. செந்தமிழ் மொழியினில் சீரிசைபாடி

திருவருள் வேண்டினோம் அடியவர் கூடி

அந்தமில் கடலொலி யாமென முரசோ

டரோகரா எனுமொலி அடைந்தது வானில்

கந்தமும் மதம் பொழி கருணையங்கடலே

கருதருமானந்தக் கற்பகக் களிறே

எந்தமை ஆண்டுவந் தின்னருள் தாராய்

எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

11. அகரமும் உகரமும் மகரமுமானாய்

ஐம்பத்தோ ரட்சரத் துட்பொருளானாய்

பகரரும் உரு அரு அருவுருவானாய்

பைந்தமிழவ்வையின் பாட்டினில் மகிழ்ந்தாய்

மிகமன முருகியே வேண்டி நிற்கின்றோம்

வேறினியார் துணை பூவினிலெமக்கே

இகபர சுகந்தரும் ஏரம்ப நாதா

எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

# திருவெம்பாவை

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின் செவி தான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே !
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர் !
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசு மிடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்?

3. முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ! ஈசன் படி அடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை?
இத்தனையும் வேண்டும் எனக்கேலோர் எம்பாவாய்

4. ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்

5. மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய் !

6. மானே நீ நென்னலை நாளை வந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடேலோர் எம்பாவாய் !

7. அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இரஞ்சீரான்
சின்னங்கள் கேட்கச் சிவன் என்றே வாய் திறப்பாய்
தென்னா என் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் !

8. கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் !

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே !
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்ற உன்சீ ரடியோம்
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப்ப பணி செய்வோம்.
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய் !

10. பாதாளம் எழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஒத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன் பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் !

11. மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல் போல்
செய்யா வெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய் !

12. ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடேலோர் எம்பாவாய் !

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தவினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் !

14. காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் !

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரைக் கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவப் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் !

16. முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கும் முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் !

17. செங்கண் அவன்பால் திசை முகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலம் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கன் அரசை அடியோங் கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் !

18. அண்ணா மலையான் அடிக்ககமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர் வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் !

20. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற் பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீர் ஆடேலோர் எம்பாவாய்.

# திருப்பொற்சுண்ணம்

1 முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

2 பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங் கூத்தன்
தேவியுந் தானும் வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

3 சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே

4 காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

5 அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர மோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

6 உலக்கைக் பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்து நாமே

7 சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

8 வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டடந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையின்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

9 வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

10 முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநானே

11 மாடு நகைவாள் நிலாவெறிப்்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடித்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

12 மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்–டருமை–காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

13 மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநானே

14 சங்கம் அரற்றிச் சிலம்பொலிப்ப
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

15 ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநானே

16 ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகமக் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

17 தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழு சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

18 அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
எழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே

19 வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடி
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்பல லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே

20 வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

# அபிராமியம்மை பதிகம்

## தொண்டரொடு கூட்டுக

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாதம உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமுங் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பு முத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகாலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச்சிலைகளும்
கர்ணகுண்டலமுமதி முகமண்டலம் நுதற்
கஸ்தூரி யிட்ட பொட்டும்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியுங் குந்தநிகர் தந்தமும்
கோடுசோடான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூபுரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போல நிறை
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

நீடுக கங்களுக் காதாரமாய் நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத்திரண்டறும் வளர்கின்ற
நீமனை வியாயிருந்தும்
வீடுவீடுகடோனும் ஓடிப்புகுந்துகால்
வேசற் றிலச்சை யும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளம் தளர்ந்து நின்(று)
உன்மத்தனாகியம்மா
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்?
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினிற்போய்
நடுவினி யிருந்து வந்தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்(டு)
ஈனந்தனைத் தள்ளி எனது நா னெனுமானம்
இல்லா மலேது ரத்தி.
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்து நெஞ்(சு)
இருளற விளக்கேற்றியே
ஆனந்த மானவிழி யன்னமே உன்னையென்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகடவூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

# ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம்

பண் — நாதநாமக்கிரியை

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெய ஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடிடுமே
நஹநஹ தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி யானவனே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா !

தண்டினி தேவி தக்ஷினி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோகநி வாரணி ஜெயதுர்க்கா !

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே மாதிரி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர்ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசினியே
ரோகநிவாரணி சோகநிவாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !

திருமக ளானாய் கலைமகளானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா !

திருமக ளானாய் கலைமகளானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா !

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோக நிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா !

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநிவாரணி சோகநிவாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா !

ஜெய ஜெய சைவ புத்திரி ப்ரஹ்ம
சாரணி சுந்த்ர கண்டினியே
ஜெய ஜெய கூஷ்மான் டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்யவளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஹீநவ துர்க்கையளே
ரோக நிவாரணி சோகநிவாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !

## பலன் வழி:-

செவ்வாய் – வியாழன், அஷ்டமி ஆகிய தினங்களில் காலையில் படிக்க நற்பலன் விளையும், நோய்கள் தீர அன்றாடம் ஐந்து தடவையும் குடும்பத்துன்பங்கள் தீர காலையிலும், மாலையிலுமாக எண்பத்தொரு நாட்களும் தொடர்ந்து படித்துவர அன்னை அருள் கூடும். கோவில்களில் விளங்கும் ஸ்ரீ துர்க்கா சந்நிதியில் ராகு காலத்தில் பாடிவரின் கிரக பீடையும் துன்பமும் தீரும். செவ்வாய்க் கிழமை தீபத்தின் முன்பு ஆசார சீலராயிருந்து படிக்கும் கன்னிகைகளுக்கு விவாக பிராப்தியும் ஏற்படும்.

துர்க்கைச் சித்தர்

# இலக்குமி தோத்திரம்

கொழுதியிசை யளிமுரலுந் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கை போல
மழையுறழுந் திருமேனி மணிவண்ண
னிதயமலர் வைகுமானே
முழுதுலகு மினிதீன்ற வருட்கொம்பே
கரகமலமுகிழ்த் தெந்நாளுங்
கழிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதீர
வருள்கொளிக்குங் கமலக்கண்ணாய்.

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி
செங்கமலக் கையாய் செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலான்
றனையீன்ற விந்தைதூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலு
ளவதரித்தோ யன்பர் நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிநஞ் செழுஞ்சுடரே
யென வணக்கஞ் செய்வான் மன்னோ.

மடற்கமல நறும் பொகுட்டி லரசிரக்குஞ்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெல்லாங் காவல் பூண்டான்
படைத்தனான் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன்றானுந்
துடைத்தனனின் பெருஞ் சீர்த்தி யெம்மனோ
ராலெடுத்துச் சொல்லற் பாற்றோ

மல்லனெடும் புவியனைத்தும் பொது நீக்கித்
தனிபுரக்கு மன்னர்யாருங்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகில்
நிகரில்லாக் காட்சியோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர்தாமும்
அல்லிமலர்ப் பொருட்டுறையு மணியிழை நின்
னருணோர்க்க மடைந்துளாரே.

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின் மேனித் திருவே வேலை
அங்கணுல கிருள்துரக்கு மலர்க்கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்பதம்மா.

# சகலகலா வல்லி மாலை

வெண்டா மரைக் கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்
பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமுது
ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்லியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதம் தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராத தென்னே
நெடுந்தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்து இருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினா சனளி சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ் ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேம்பட்ட பன்னந மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

குமரகுருபரர்

# அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம்

## 1. ஆதிலக்ஷ்மி

ஸுமநஸ வந்தித ஸுந்தரி மாதவி
சந்தர ஸஹோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷ ப்ரதாயிநி
மஞ்ஜுள பாஷிணி வேதநுதே
பங்கஜ வாஸிநி தேவஸு பூஜித
ஸத்குண வர்ஷிணி சாந்தியுதே
ஜய ஜய ஹேமது ஸுதந காமிநி
ஆதிலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## 2. தான்யலக்ஷ்மி

அயிகலி கல்மஷ நாசிநி காமிநி
வைதிக ரூபிணி வேதமயே
க்ஷீர ஸமுத்பவ மங்கள ரூபிணி
மந்த்ர நிவாஸிநி மந்த்ரநுதே
மங்கள தாயிநி அம்புஜ வாஸிநி
தேவ கணாச்ரித பாதயுதே
ஜயஜய ஹேமது ஸுதந காமிநி
தான்யலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## 3. தைர்யலக்ஷ்மி

ஜயவர வர்ண ! வைஷ்ணவி ! பார்கவி !
மந்த்ர ஸ்வரூபிணி மந்தரமயே
ஸுரகண பூஜீத சீக்ரபல ப்ரத
ஜ்ஞான விகாஸிநி சாஸ்த்ர நுதே
பவபய ஹாரிணி பாப விமோசநி
ஸாது ஜநாச்ரத பாதயுதே
ஜய ஜய ஹேமது ஸுதந காமிநி
தைர்யலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## 4. கஜலக்ஷ்மி

ஜய ஜய துர்கதிநாசினி காமிநி
ஸர்வபல ப்ரத சாஸ்த்ரமயே
ரதகஜ துரக பதாதி ஸமாவ்ரத
பரிஜய மண்டித லோகநுதே
ஹரிஹர ப்ரும்மஸு பூஜித ஸேவித
தாப நிவாரணி பாதயுதே
ஜய ஜய ஹோமதுஸுதந காமிநி
கஜலக்ஷ்மி ரூபணே பாலயமாம்

## 5. ஸந்தானலக்ஷ்மி

அயிகக வாஹிநி மோஹிநி சக்ரிணி !
ராக விவர்த்திநி ஜ்ஞானமயே
குணகண வாரிதி லோக ஹினதஷிணி
ஸ்வரஸப்த பூஜித கானநுதே
ஸகல ஸுராஸுர தேவ முநீச்வர
மாநவ வந்தித பாதயுதே
ஜய ஜய ஹேமதுஸுத நகாமிநி
ஸந்தான லக்ஷ்மி பாலயமாம்.

## 6. விஜயலக்ஷ்மி

ஜய கமலாஸநி ஸத்கதி தாயிநி
ஜ்ஞான விகஸிநி கானமயே
அனுதின மர்ச்சித குங்கும நூஸர
பூஜித வாஸித வாத்யனுதே
கனகதரா ஸ்துதி வைபவ வந்தித
சங்கர தேசிக மான்யபதே
ஜய ஜய ஹேமதுஸுதந காமிநி
விஜயலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## 7. வித்யாலக்ஷ்மி

ப்ரணத ஸுரேச்வரி ! பாரதி ! பார்க்கவி !
ஸோக விநாசிநி ! ரத்னமயே
மணிமய பூஷித கர்ண விபூஷண
சாந்தி ஸமாவ்ருத ஹரஸ்யமுகே
நவநிதி தாயிநி கலிமலஹாரிணி
காமித பலப்ரத ஹஸ்தயுதே
ஜய ஜய ஹேமதுஸுதந காமிநி
வித்யாலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## 8. தனலக்ஷ்மி

திமிதிமி திந்திமி திந்திமி திந்திமி
துந்திபி நாத ஸுபூர்ணமயே
குமகும குங்கும குங்கும குங்கும
சங்க நிநாத ஸுவாத்யநுதே
வேத புராணே திஹாஸ ஸுபூஜித
வைதிக மார்க ப்ரதர்சயுதே
ஜய ஜய ஹேமது ஸுதந காமிநி
தனலக்ஷ்மி ரூபணே பாலயமாம்.

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு
குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம். நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

நூல்
நிலமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வாகனனார்
கையில்வே லாலெனைக் காக்கவேன் றுவந்து
வரவரவேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிறைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக,
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ர்ரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க.
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட

இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழி போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்

ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்துற வாகவும்
உன்னைத் துகிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசடன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்

காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்த்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

*வேலும் மயிலும் துணை.*

# பஞ்ச புராணம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்

இடரினும் தளரினும், எனதுறு நோய்;
தொடரினும் உன் கழல், தொழுது எழுவேன் !
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை;
மிடறினில் அடக்கிய வேதியனே !
இதுவோ எமை ஆளுமாறு, ஈவதொன்று எமக்கு இல்லையேல்;
அதுவோ எனது இன் அருள் ! ஆவடுதுறை அரனே!

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

மாதர் பிறை கன்னியானை, மலையான் மகளொடும் பாடிப்;
போதொடு நீர் சுமந்துஏத்திப், புகுவார் அவர்பின் புகுவேன்;
யாதும் சுவடு படாமல், ஐயாறு அடைகின்ற போது;
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன் !
கண்டேன் அவர் திருப்பாதம் ! கண்டறியாதன கண்டேன் !

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும், சார்வினும் தொண்டர்; தருகிலாப்
பொய்ம்மை ஆளரைப் பாடாதே, எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள் !
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம், இடர் கெடலுமாம் ;
அம்மையே ! சிவலோகம் ஆள்வதற்கு, யாதும் ஐயுறவு இல்லையே !

மாணிக்க சுவாமிகள் திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துஉன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் "போற்றிசயசய
போற்றி" என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.

திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா

திக்கடா நினைந்து நெஞ்சு இடிந்து உருகும் திறந்தவர் புறத்திருந்து அலச
மைக்கடா அனைய என்னை ஆள் விரும்பி மற்றொரு பிறவியில் பிறந்து
பொய்க்கடா வண்ணம் காத்து எனக்கு அருளே புரியவும் வல்லரே எல்லே !
அக்கடா ஆகில் அவர் இடம் களத்தை அணிதிகழ் ஆதித்தேச்சரமே !

சேந்தனார் திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

சேக்கிழார் பெரிய புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாவிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

அருணகிரிநாதர் திருப்புகழ்

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணம்நாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நான் என்று மார்தட்டும் பெருமாளே.

முத்தைத் தரு பத்தித் திருநகை – அத்திக்கிறை, சத்திச் சரவண
முத்திக் கொரு, வித்துக் குருபர – எனவோதும்
முக்கட் பரமற்குச் சுருதியின் – முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்து மூவர்க்கத்தமரரும் – அடிபேண
பத்துத்தலை தத்தக் கணைதொடு – ஒன்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத் திகிரியின் இரவாக
பக்தர்க்கிர தத்தைக் கடவிய – பச்சைப்புயல் மெச்சத் தரு பொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு கழுதாட
திக்குப்பரி அட்டப் பயிரவர் தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவுரிக்குத் ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை – குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென முது கூகை
கொட்புற்றெழ – நட்பற்றவுணரை – வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே !

கடவுள் வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விட மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

# கொடிக்கவி

சந்தானகுரவர் உமாபதி சிவாச்சாரியார் அருளியது

### விருத்தம்

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருள் அடராது உள்ளுயிர்குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும், திரிமலத்தை
குளிக்கு முயிர், அருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

பொருளாம் பொருள்ஏது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது – அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்காது உணர்வரிய தன்மையினை நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள்நல்கக் கொடி.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்பெரு எழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையுங்
கூசாமல் காட்டக் கொடி.

### திருவாசகம் (திருதச அங்கம்)

சோலை பசுங்கிளியே தூநீர் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடி கூறாய் சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல் விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறும் கொடி.

# நவசந்திப் பண்கள்

ஆலயங்களில் நடந்துவரும் வருடாந்த உற்சவ காலங்களில் கொடியேற்ற விழாவிலன்றும், கொடியிறக்கும் விழாவிலன்றும் நவசந்திப் பண்கள் ஓதுவது நாமறிந்ததே அவ்வாறு ஓதப்பெறும் பண்களும் அவற்றிற்குரிய சில திருமுறைகளும் இதோ

## 1. கொடித் தம்பத்தருகில்

திருச்சிற்றம்பலம்

பண் :- இராகம் :- காம்போதி

மடையின் வாளைபாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவமென் கொலோ

நீடும்புனற் கங்கையுந் தங்க முடிமேல்
கூடும்மலை யானொரு பாகம் அமர்ந்தார்
மாடும் முழு வம்பதி ரம்மட மாதர்
ஆடும்பதி அம்பிலா வந்துறை யாரோ

தடங்கொண்ட தொர் தாமரைப் பொன் முடிதன் மேல்
குடங்கொண்டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண்டதொர் பாம்பரையார்த்த பரமன்
இடங்கொண்டிருந்தான் றனிடை மருதீதோ.

பெண்தான் பாகமாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக்காவு கோயிலாக்
கண்டான் பாதங்கையாற் கூப்பவே
உண்டான் நங்சை உலக முய்யவே

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக்காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் விளைபோய் ஓங்கி வாழ்வரே.

பண் :- காந்தாரபஞ்சமம் இராகம் :- கேதார கௌளை

சொற்றுனை வேதியன் சோதி வானவன்
பொற்றுனை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுனை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுனை யாவது நமச்சி வாயவே.

மின்னியல் செஞ்சடை வெண்பிறையன் விரிநூலினன்
பன்னிய நான்மறை பாடியாடிப் பல வூர்கள் போய்
அன்னம் அன்னந்நடை யாளொடு மமரும்மிடம்
புண்னை நன் மாமலர் பொன்னுதிர்க்கும் புனவாயிலே

வாழினும் சாவினும், வருந்தினும் போய்
வீழினும் உன்கழல், விடுவேன் அல்லேன் !
தாழிளம் தடம்புனல், தயங்க சென்னிப்
போழின மதிவைத்த, புண்ணியனே!
இதுவோ எமை ஆளுமாறு, ஆவதொன்று எமக்கு இல்லையோ.
அதுவோ எனது இன்அருள் ! ஆவடுதுறை அரனே !

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவிலும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறும் கொன்றைப் போதணிந்து
கனல் எரி அனல் புல்கு கையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஆவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ எனது இன் அருள்! ஆவடுதுறை அரனே!

தும்மலோடு அருந்துயர், தோன்றிடினும்
அம்மலர் அடியலால், அரற்றா என் நா
கைமல்கு வரி சிலைக்கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ, முனிந்தவனே !
இதுவோ எமை ஆளுமாறு, ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள்! ஆவடுதுறை அரனே !!

# பிரம்மசந்தி - கோபுர வாசல் நீலாம்பரி

ஆலயங்களில் நடந்துவரும் வருடாந்த உற்சவ காலங்களில் கொடியேற்ற விழாவிலன்றும், கொடியிறக்கும் விழாவிலன்றும் நவசந்திப் பண்கள் ஓதுவது நாமறிந்ததே அவ்வாறு ஓதப்பெறும் பண்களும் அவற்றிற்குரிய சில திருமுறைகளும் இதோ

பண் :- மேகராகம் - குறிஞ்சி இராகம் :-

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வான் அமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே

விடலேறு, பட நாகம் அரைக்கசைத்து
வெற்பரையன் பாவை யோடும்
அடலேறொன் றதுவேறு அஞ்சொலீர்
பலி என்னும் அடிகள் கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியின்
உடன் வந்த கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கம் செழுமுத்தங்கு
ஈன்றலைக்கும் திருவையாறே

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங் கோயில்
கொங்காளப் பொழில் நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல் நீங்கிச்
செங்கால் நல் வெண்குருகு பைங்கானல்
இரைதேரும் திருவையாறே

ஊன்பாயும் முடைதலை கொண்டூரின்
பலிக்குழல்வார் உமையாள் பங்கர்
தான் பாயும் விடையேறும் சங்கரனார்
தழுலுருவர் தங்குங் கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன்பாட மீன்பாயச் செழுங்கமல
மொட்டலரும் திருவையாறே

## இந்திர சந்தி - கிழக்கு

பண் :- மேகராகம் - காந்தாரம் இராகம் :- வேளாவல்லி

கரவாடும் வன்நெஞ்சார்க்(கு) அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாட்ச் சடை, தாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துக் தொழுநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறு

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சந்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது று பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடி சாய்த்துத் தொழ நின்ற முதல்வனை
அப்போது மலர் தூவியைம் புலனுமகத்தடக்கி
எப்போது மினியானை யென் மனத்தே வைத்தேனே

## அக்கினிசந்தி - தென்கிழக்கு

பண் :- மேகராகம் - கொல்லி இராகம் :- நவரோஜ்

சலம்பூவொடு தூபமற ந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினு முன்னை மறந்தறியேன்
உன்நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டுழல் வாய்
உடலுள்ளுறு சூலை தவித்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே

வன்னியும் மத்தமும் மதிபோதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவை கொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடவர் ஏடகத் தொருவனே

மண்ணுண்ட மாலவனும் மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திரு உருவம் விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்ட திருவே மிக்க தில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரம நீ ஆடுமாறே

பொய்யினைத் தவிரவிட்டுப் புறமோ அடிமை செய்ய
ஐய நீ ! அருளிச் செய்யாய் ஆதியே ஆதி மூர்த்தி
வையகம் தன்னில் மிக்க மல்கு சிற்றம்பலத்தே
பையநின் ஆடல் காண்பான் பரம நான் வந்தவாறே

கண்டவா திரிந்து நாறும் கருத்தினால் நின்தன் பாதம்
கொண்டிருந்தது ஆடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டு பண்பாடும் சோலை மல்கு சிற்றம் பலத்தே
என் திசையோரும் ஏத்த இறைவா நீ ஆடுமாறே

## இயம சந்தி - தெற்கு

பண் :- கௌசிகம் இராகம் :- பைரவி

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

நல்வினைப் பய்ன் நான்மறையின் பொரு
கல்வியாய கருத்தன் உருத்திரன்
செல்வன் மேய திருமழ பாடியைப்
புல்கி யேத்தும் அருபுகழாகுமே

வாழ்க அந்தனர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல், வேந்தனும் ஒங்குக;
ஆழ்கதீயது எல்லாம், அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்க்வே !

வெந்த குங்குலியப்புகை விம்மவே
கந்த நின்றுலவுங் கழிப்பாலையார்
அந்த மும்மளவும் மறியாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே.

## நிருதி சந்தி - தென்மேற்கு

பண் :- நட்டபாடை

இராகம் :- கம்பீரநாட்டை

அங்கமும் வேதமும் ஓதுநாவலர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவிழ் மாடவீதி
மருகல் நிலாவி யமைந்த சொல்லாய்
செங்கயலார் புனற் செல்லமல்கு
சீர்கொள் செங்காட்டங்க குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடும்
கண்பதீச் சரம் காமுறவே

ஈறாய் முதலொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாருமறை நான்காய்வரு பூதமவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோ டெட்டுத் திசைதானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே

அங்கத்து உறும் நோய்கள், அடியார்மேல் ஒழித்தருளி
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டநன் நகரில்
பங்கம் செய்த மடவாளொடும் பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சத்தானே !

நந்தார் படை ஞானம் பசு ஏறி நனை கவிழ்வாய்
மத்தம் மதயானை உரிபோர்த்த மழுவாளன்
புத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பு அணிவான் திருக்கேதீச்சரத்தானே !

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

## வருணசந்தி - மேற்கு

பண் :- சீகாமரம்

இராகம் :- நாதநாமக்ரிய

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
கள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே

ஆலந்தானுகந்தமுது செய்தானை யாதியையமரர் தொழுதேத்தும்
சீலத்தான் பெரிதும் முடையானைச் சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாளுமை நங்கை யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக்கம் பனெம்மானைக் காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

வானநாடனே வழித்துணை மருந்தே மாசிலாமணியே மறைப்பொருளே
ஏனமாவெயிறாமையுமென புமீடுதாங்கிய மார்புடையானே
தேனெய்பாறயிராட்டுகந்தானே தேவனே திருவாடுதுறையுள்
ஆனையே யெனை யஞ்சலென்றருளாயா ரெனக்குறவமர்களேறே

## குபேரசந்தி - வடக்கு

பண் :- தக்கராகம் இராகம் :- மாளவி

பொடியுடை மார்பினர் போர் விடையேறிப்
பூதகணம் புடை சூழக்
கொடியுடையூர் திரிந்தையங் கொண்டு
பல பல கூறி
வடிவுடைவாள் நெடுங்கண் உமைபாகம்
ஆயமன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமிழ் மாமவரிட்டுக் கறைமிடற்றா
னடி காண்போம்.

குரும்பை முலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொருஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்பு வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடு அணிமொழில்சூழ் அயலின்
கருப்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலரும் கல யநல்லூர் காணே.

சீரணிதிகழ் திருமார்பில் வெண்ணூலர்
திரிபுரம் எரிசெய்த செல்வர்
வாரணி வனமுலை மங்கையோர் பங்கர்
மான்மறி ஏந்திய மைந்தர்
காரணி மணிதிகழ் மிடறுடை அண்ணல்
கண்ணுதல் விண்ணவர் ஏத்தும்
பாரணி திகழ் தரு நான் மறையாளர்
பாம்புரம் நன்னகர் ஆரே

நீநாளும் நன்நெஞ்சே நினைகண்டாய் யாரறிவர்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்ப புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

மங்கையோர் கூறுடையான் மன்னுமறையின்றான்
அங்கையோர் வெண்டலையானாடரவம் பூண்டுகந்தான்
திங்களொடுபாம் பணிந்த சீரார்திருமுடிமேற்
கங்கையினான் மேலியுறை கோயில்கைச்சினமே

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுறுவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே

திறங்கொண்ட அடியார் மேல் தீவினை நோய் வாராமே
அறங் கொண்டு சிவதன்மம் உரைத்த பிரான் அமருமிடம்
மறங் கொண்டங் கிராவணன்றான் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே

## வாயுசந்தி - வடமேற்கு

பண் :- தக்கேசி

இராகம் :- மகுடராகிரி

வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பெறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
என்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்தனி
ஆரூரானை மறக்கலுமாமே

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக்கடைந்தெழுந்த
ஆலநஞ்சுகண்ட வர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை உண்டு
கண்டத்தேவைத்த பித்த நீ செய்த
சீலங் கண்டு நின் திருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன் கூருளானே.

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

## சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
புதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.

## வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாள்.

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

## இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி.

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி.

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாம்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர் மாண்பே

நீறும்மெய் பூசி நிறைசடை தாழ
நெற்றிக்கண் ணாலுற்று நோக்கி
ஆறது சூடி ஆடர வாட்டி
ஐவிரற் கோவனை ஆடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே.

## ஈசான சந்தி - வடகிழக்கு

பண் :- சாளாபாணி இராகம் :- பந்துவாரளி

(சாளாபாணி நடைமுறையில் இல்லை. பதில் சாதாரிப் பண்ணைப் பயன்படுத்தலாம்)

தலையே நீவணங்காய் தலைமாலை தலைக்ககணிந்து
தலையாலே பலிதேடும் தலைவனை தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ! கடல், நஞ்சுண்ட கண்டன் தன்னை;
எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேன்மின்களோ! சிவன், எம்மிறை செம்பவள;
எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும், செவிகாள் கேண்மின்களோ.

வாயே வாழ்த்து கண்டாய் – மதயானை உரிபோர்த்துப்
பேய் வாழ் காட்டகத்து ஆடும் பிரான் தன்னை; வாயே வாழ்த்து கண்டாய்

எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி
அம்புந்த கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம் பொன் செய் அம்பலத்தே சேர்ந்திருக்கையாயிற்றே

# ஆராத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ ஜெய.

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை யெல்லாம் அடைய ( மறைய) அம்மம்மா
பக்திபெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை – ஓம் ஸ்ரீ ஜெய.

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி வரமருள்வாய் அம்மம்மா
ஈசுவரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம் ஸ்ரீ ஜெய.

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ வழிகாட்டிடுவாய்
ரக்ஷிதேவியுன் அடைக்கலமே – ஓம் ஸ்ரீ ஜெய.

நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா – ஓம் ஸ்ரீ ஜெய.

# உன் கருணை வழியவேண்டும்

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித் தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்
காலிரண்டும் உன்னடியை நாடவேண்டும்
நவ நவமாய் வடிவெடுக்கும் மாகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
பண்ணமைக்கும் நாவுனையே பாடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்.

கவலைகளைத் தீர்த்து விடும் காமேஸ்வரி
காரிருளில் தீச்சுடரே ஜோதீஸ்வரி
நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினிலே திருநாமம் வழிய வேண்டும்
துன்பமெல்லாம் போக்கிடும் துர்க்கேஸ்வரி
தொழுதகைக்கு வளமளிக்கும் ஞானேஸ்வரி
கற்றதெல்லா மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வழியவேண்டும்.

பார்வையிலே பரமளிக்கும் பரமேஸ்வரி
பக்தர்களின் துதிசுமக்கும் கமலேஸ்வரி
சுற்றமெல்லாம் நீடூழி வாழ வேண்டும்
தொல்லை இந்த வாழ்வை விட்டு ஓட வேண்டும்
இன்பமான அமைதி எங்கு மோங்க வேண்டும்
இதயமெல்லாம் ஈசன் கோயிலாக வேண்டும்
மண் வளமும் மனவளமும் பெருவேண்டும்
மாநிலத்தில் உருகருணை வழியவேண்டும்.

# தேவி தோத்திரம்

வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்கும் ஆனவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் கண்ணகி தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே

உலகை யீன்றவள் கண்ணகி உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் கண்ணகி நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் கண்ணகியே
தேவி கண்ணகி ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே

செம்மை யானவள் கண்ணகி ஜெபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் கண்ணகி இன்ப மானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை கண்ணகியே
தேவி கண்ணகி ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே

உயிரு மானவள் கண்ணகி உடலுமானவள்
உலக மானவள் எந்தன் உடைமை யானவள்
பயிரு மானவள் கண்ணகி படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த கண்ணகியே
தேவி கண்ணகி ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே

துன்ப மற்றவள் கண்ணகி துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் கண்ணகி அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் கண்ணகியே
தேவி கண்ணகி ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே

குருவு மானவள் கண்ணகி குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் கண்ணகி திரிசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் கண்ணகியே
தேவி கண்ணகி ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே

கண்ணகி பக்தனின் பெரும் அன்பை ஏற்றவள்
துன்ப நேரத்தில் என்னை தேடி வருபவள்
துன்ப காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
அன்புக் கண்ணகியே என்னை காக்கும் கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே.

சிலம்பு கண்ணகியே இதயக் கமலக் கண்ணகியே
கருணைக் கண்ணகியே வீரக் ககனக் கண்ணகியே
அன்னை கண்ணகியே என்றும் அருளும் கண்ணகியே
அன்புக் கண்ணகியே ஜெய கண்ணகி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே
தேவி கண்ணகியே ஜெய தேவி கண்ணகியே

★★★★★★

*அர கரோ கரா – தாயே*
*அர கரோ கரா – தாயே*

அன்னை கண்ணகி அம்பிகையே – அரகரோகரா
எம்மையாளும் ஈஸ்வரியே – அரகரோகரா
என்றும் இன்ப மானவளே – அரகரோகரா
அன்பர்களின் இரட்சகியே – அரகரோகரா
அவலவினை தீர்ப்பவளே – அரகரோகரா
வட்டு நகர் செல்வதியே – அரகரோகரா
தீனர்களின் தாயாபரியே – அரகரோகரா
கையில் சிலம்பு நாயகியே – அரகரோகரா
எங்கள் அன்ன பூரணியே – அரகரோகரா

# லலிதா நவரத்னமாலை

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந் தரனாற் றநலம்
பூக்கும் நகையாள் புவனேச் வரிபால்
சேர்க்கும் நவரத்தினமா லையினைக்
காக்கும் கனநாயகவா ரணமே

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கன வானதம்
பெற்றும் தெரியார் நினையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க் கெம னாக எடுத்தவளே
வற்றாத அருட் சுனையே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமே னியிலே நினைவாய்
நினைவற் றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம் பிகையே.

## முத்து

முத்தே வரும்முத் தொழிலாற் றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவா சினியே சரணம்
தத்தே றியநான் தயைன் தாய்நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக் கிணைவாழ் வடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

### பவளம்

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம்செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம்பவ ளம்பொழி பாரோ
தேம் பொழி லாமிது செய்தவ ளாரோ
எந்தை யிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணு பவர்க்கருள் எண்ண மிகுந்தாள்
மந்திர வேத மயப்பொரு ளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

### மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாப் பொலியா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும் நின் துதியும்
நவிலா தவரை நாடா தவளே
நாணித் திருநா மமும் நின் துதியும்
நவிலா தவரை நாடா தவளே
மாணிக்க ஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம் பிகையே.

### மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
ச்ருதி ஜதிலயமே இசையே சரணம்
அரகஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெற அரு ளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம் பிகையே.

### கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல் வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

### பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விலாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரேக நிவாரணி வாணி
சாம்பவீ சந்த்ரக லாதிரி ராணி
அஞ்சன மேனி அலகருத பூரணி
அம்ருத ஸ்வரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

### வைடூரியம்

வலையொத் தவினை கலையொத் தமனம்
மருளப் பறையா ஒருவியொத் தவிதரல்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற் றசைவற் றநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூ ரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகை.

### பயன்

எவர்எத் தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின் றிடுவார்
அவர் அற் புதசக்தி எல்லாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ்வா ரவரே.

# ஸ்ரீ கிருஷ்ண நாமாவளி

| | | |
|---|---|---|
| உன்னடியில் அன்பு வைத்தோம் | – | கண்ண பரமாத்மா |
| உலகெலாம் நீ எனக்கு | – | கண்ண பரமாத்மா |
| வண்ண மயில் காலையிலே | – | கண்ண பரமாத்மா |
| வசந்த மணம் பரப்புகின்றாய் | – | கண்ண பரமாத்மா |
| பொன் பரவும் அருணலிலே | – | கண்ண பரமாத்மா |
| புன்னகை செய் அருளழகா | – | கண்ண பரமாத்மா |
| மின்னொளிரும் மேகத்திலே | – | கண்ண பரமாத்மா |
| மின்னுவதுன் வண்ணமடா | – | கண்ண பரமாத்மா |
| வஞ்சனை செய் பூதகியை | – | கண்ண பரமாத்மா |
| வட்டமுலை உண்டு கொன்றாய் | – | கண்ண பரமாத்மா |
| பிஞ்சிளம் சேய் தளிரடியால் | – | கண்ண பரமாத்மா |
| மேயச் சகடை உதைத்தவனே | – | கண்ண பரமாத்மா |
| கன்றரக்கன் உடலை வீசி | – | கண்ண பரமாத்மா |
| கலகலெனச் கனியுதிர்த்தாய் | – | கண்ண பரமாத்மா |
| குன்றெடுத்துக் கோகுலத்தில் | – | கண்ண பரமாத்மா |
| கொடும் புயலில் தடுத்து நின்றாய் | – | கண்ண பரமாத்மா |
| நச்சரவு மேலிருந்தே | – | கண்ண பரமாத்மா |
| நர்த்தனம் செய் அர்த்தமென்னே | – | கண்ண பரமாத்மா |
| அச்சமில்லை அச்சமில்லை | – | கண்ண பரமாத்மா |
| அருளெம்மைக் காக்கும் அப்பா | – | கண்ண பரமாத்மா |
| காற்றினில் பூங்குழலே | – | கண்ண பரமாத்மா |
| காதில் வந்து கொஞ்சுதப்பா | – | கண்ண பரமாத்மா |
| ஆற்றினிலும் வேதவொலி | – | கண்ண பரமாத்மா |
| ஆத்ம சுகம் பேசுதப்பா | – | கண்ண பரமாத்மா |
| ஆவியிலே கலந்து விட்டாய் | – | கண்ண பரமாத்மா |
| அறிவினுக்கும் அறிவானாய் | – | கண்ண பரமாத்மா |
| நாவினிலே கலந்து விட்டாய் | – | கண்ண பரமாத்மா |
| நல்ல முதம் போலினிப்பாய் | – | கண்ண பரமாத்மா |

# கண்ணலிங்கேஸ்வர ஸ்வாமி
# திருவூஞ்சல்

1. சீராரும் பூங்கமல வாச வட்டூர்த்
   தெக்கணப்பா யாலயத்துச் சேர்ந்து வாழும்
தாராரும் கொன்றைமதி நதியஞ் சூடுஞ்
   கடிலர் தற்பரர் சுயம் ப்ரகாச !
ஏராருங் கண்ணலிங்க சாமியின் மேல்
   இசைபெருகு திருவூஞ்சல் இனிது பாடக்
காராரும் தந்திமுகத்தைந்து செங்கைக்
   கற்பகத்தி னிரு சரணங் காப்ப தாமே.

2. பொங்கு திருச் சதுர்வேதங் கால்களாகப்
   பொற்பு நிறை யுபநிடதம் விட்டமாக
அங்கமுறு மாகமங்கள் கயிறதாக
   அழகு செறி ஐந்துகலை யணிகளாகச்
சங்கமுறு பிரணவமே பீடமாக
   தழை மதுரத் திருவூஞ்சல் வாஞ்சை யாக
கங்கை நதியணி சடையா யாடீரூஞ்சல்
   கண்ண லிங்க நாயகரே ஆடீ ரூஞ்சல்.

3. இடப்பாக மருவுமுமை பாங்க ராக
   இன்ப மகிழருள் கருணை இனிமை யான
தடப்பாலை கண்ணகாம் பிகையோர் பாகந்
   தழைந் தொளிர நவமணியி னணிகள் மின்ன
திடத்தாருஞ் சதுர்வேத வாக மங்கள்
   செய செய வென் றார்ப்பரிக்கத் தேவர் போற்ற
கடப்பாலார் நந்திமுத லோர் களிப்பக்
   கண்ணலிங்க நாயகரே ஆடீரூஞ்சல்.

4. தெங் கினிளம் பாளையெதிர் வாளை தாவித்
   திங்களமுதிடையளைந்து திகழ மீறி
அங்கமுறு பித்தர்மடு வாடி நீடும்
   அம்புயத்தின் மலர்பதுங்கு மழக தான
சங்கமுறு வட்டுநகர் தெக்கிணப்பாய்
   தழைத்த நவ மணிக்கோயில் சாரு நாத
கங்கை யுமை யிருபாக வாடீ ரூஞ்சல்
   கண்ண லிங்க நாயகரே ஆடீ ரூஞ்சல்.

5. ஆதியருள் புவிவாழி செல்வம் வாழி
   அந்தணர்க ளாவினிரை யாசர் வாழி
மேதகைய வணிகரொடு வேளாண் வாழி
   மிக்கவுல கோர்தரும் விஜயம் வாழி
காதல் செறி சிவதொண்ட ரடியார் வாழி
   கண்ணலிங்க சாமியருள் கவினும் வாழி
மேதகைய மணவூஞ்ச லினிது வாழி
   விருப்பமுடன் படிப்போரும் வாழி வாழி.

# கண்ணகாம்பிகை திருவூஞ்சல்

## காப்பு

சீராருஞ் சந்தமதி லத்தி யித்தி
சேதாம்பல் முதலான செல்வ நீடி
ஏராரும் லங்கையணி யாழ்ப்பாணத்தி
லிசைந்த திரு வட்டுநகர்த் தெக்கிணப்பாய்
தாராரும் கோயில் கொளு மமுத கும்பந்
தழை கணாம்பிகை மீதில் ஊஞ்சல் சாற்றக்
காராருந் தந்திமுக மைந்து செங்கைக்
கற்பகத்தினிரு சரணங் காப்ப தாமே.

## ஊஞ்சல் வண்ணம்

பொன்னிலங்கு நிலனமைத்து மரகதத்திற்
பொலிகால்கள் பவளத்தின் விட்ட மாக
தன்னிலகு சாம்புநதம் பரந்த ராக
தழைத்த முத்த மழகுநிறை நாணதாக
வன்னமலி சங்கநிதி பலகை யாக
வளருமணித் திருவூஞ்சல் வாஞ்சை யாக
கன்னல் விளை தெக்கிணப்பாய் கோயில்கொண்ட
கண்ணகாம்பிகையுமையே யாடீ ரூஞ்சல்.

## சபா வண்ணம்

வானமமுத லான சக்தி கவிகை பற்ற
மகிமாவே யாதியன கவரி சுற்ற
ஏமமலி சசிமுதலோர் வட்டமேந்த
எண்டகைய ரதிதேவி பனிநீர் சிந்த
காமரு சீரரம்பையர்களூஞ்ச லாட்டக்
கமலை முதலைந்து சக்தி மார் துலங்க
பூமருவுந் தெக்கிணப்பா யால யஞ்சேர்
புனிதை கணாம்பிகை யுமையே யாடீ ரூஞ்சல்.

## நார் வண்ணம்

குழு னெழுந்த கயல்வாழை தெங்கு தாவிக்
கோகனக முகை விழுந்து குதித் தெழுந்து
வழை மருவுந் தேனருந்தி மாறி மீதி
மதிகனலயி னூடுழக்கி வயலிற் பாயும்
தழை மருவுந் தெக்கிணப்பாய் நகர மீது
தழைந்த பொன்னி னாலயத்திற் சர்வ ரூப
கழை நடன சாம்பவியே யாடீ ரூஞ்சல்
கண்ணகாம் பிகையுமையே யாடீ ஞ்சல்.

## சம்பிரம வண்ணம்

கொத்துமணி முத்தாரங் கொப்பு வாளி
கொலிசு தண்டை காலாழி பீலி யோங்க
நந்துமூக் குத்தி பில் லாக்கு கம்மல்
நகையினணி பொன்வட்ட மாதிமின்ன
சத்த சுர நாகசுர வீணை தித்தி
சல்லாரி முதலான சரம்பு ரட்ட
கத்திகைநேர் குழலசைய வாடீ ரூஞ்சல்.
கண்ணகாம் பிகையுமையே யாடீ ரூஞ்சல்.

## அங்க வண்ணம்

துங்க நிறை யுமையவளே யாடீ ரூஞ்சல்
துலங்கு திருக் கௌரியம்மை யாடீரூஞ்சல்
கங்கை சிவை சாம்பவியே யாடீ ரூஞ்சல்
கணி கணாம்பிகை சத்தி யாடீ ரூஞ்சல்
அங்கமல மனோன்மணியே யாடீ ரூஞ்சல்
ஐந்தங்க மாறங்க மாடீ ரூஞ்சல்
சங்க சக் கரநாமை யாடீ ரூஞ்சல்
தழை கணாம் பிகை யுமையே யாடீ ரூஞ்சல்.

# கண்ணலிங்கேசர் எச்சரிக்கை

சீரராரு ளொளியே வெறு வெளியே
சிவமே யருந்தவமே கண்ண லிங்கேசா – எச்சரிக்கை
உருவார் மதி நதி சூடிய ஒருவா கண்ண காம்பா
உயர் பூசனை உகந்தார் கண்ண லிங்கேசா – எச்சரிக்கை

## பராக்கு

திரு மருவு தெக்கிணப்பாய் தேவே பாராக்கு
திங்களுடன் கங்கையணி கோவே பராக்கு
உருமருவு வட்டுநகர் உகந்தாய் பராக்கு
உத்தமர்கள் சிந்தனை உகந்தாய் பராக்கு

## லாலி

திருவளருங் கங்கைநதி திங்களணி நாதா லாலி
தேவி கண்ண காம்பிகைகொள் சோதியுமைநாதா லாலி
மருமருவு வட்டுநகர் வாசபிர காசா
வண்ணமிகு கண்ணலிங்க தேசகிரு பேசா லாலி லாலி.

## கப்பற்பாட்டு

காசிநகர் கங்கைநதி கலந்திருந்து நல்லருளால்
தேசுநிறை கப்பலேறிச் செந்திருமால் அயன் வணங்க இந்தையா
வாசவன் முதலான தேவர்கள் வணங்க
வளர்பேரி டம்மார பீரங்கி யார்ப்ப
பூசிதமார் கல்கற்றா பம்பாயை நீங்கிப்
பொலிவான கடன் முழுங்க மீன்களெதிர் துள்ள
பாகமுறு மதுரைநகர் தூத்துக்குடி கொழும்பு
பரிவான யாழ்ப்பாண காங்கேசன் துறைமேல
வாசமுறு வட்டுநகர் தெக்கிணப்பாயின்
வந்தருளி நாலுகந்தாய் கண்ணலிங்கா ஏலேலோ ஏலையலோ

# கண்ணகாம்பிகை எச்சரிக்கை

திருவாரருண் மயமாகிய சிவசாம்பவி யுமையே
கருவார் தரு குலழாய் கண்ண காம்பா – எச்சரிக்கை
துடிநேரிடை யுடையாய் எமை யுடையாய்மழுப் படையாய்
கடிசேர்குழல் மலர்க்கண்ண காம்பா – எச்சரிக்கை
மதியோங்கிய தெக்கிணப்பாயின் நகருறைவாய்
கதிசேர் குழற் கண்ண காம்பா – எச்சரிக்கை

## பராக்கு

திரு நிறையுந் தெக்கிணப்பாய் தேவி பராக்கு
சிவமுவந்த சாம்பவியா மாவீ பராக்கு
மருமருவு குவளை விழி மானே பராக்கு
மதியணியுஞ் சடைமுடிநம் கோனே பராக்கு

## லாலி

துங்கநிறை வட்டுநகர் துலங்கு திரு வருளார்
மங்கலமார் தெக்கிணப்பாய் வாழ்ந்தருளு மணியே லாலி
எங்களையாள் சாம்பவியே ஏழுலகம் வணங்கும்
இந்திரை கணாபிகையே ஈஸ்வரியே லாலி லாலி

## கப்பற் பாட்டு

திருநிறையு முலகமுய்ய தெக்கிணப்பா யாலயத்தின்
மகமருவுங் கோயில் கொண்டமாது கண்ண காம்பிகை சீர் இந்தையா
ஆறங்க மந்திரங் கப்பலேயாக
அணியான பிரணவம் பாய்மரமதாக
தேறிரிய சிவசக்தி பாயாக வென்றும்
சிறீங்காரம் நாணாகக் சௌங்காரங் கானா
தேறுமணி சிவயோக சாக்குகளை யேற்றி
சிந்தை யெனும் பாற்கடலி லோடுதே யிப்போ ஏலேலோ ஏலையலோ

## வாழி

புவி வாழி உயிர் வாழி தருமம் வாழி
போத நிறை சகவளங்கள் பொலிந்து வாழி
சவிவாழி மதிவாழி பசுக்கள் வாழி
சைவ நெறி யாசாரந் தழைத்து வாழி
தவ ஞானத் தெக்கிணப்பாய் நகரம் வாழி
தையல் கணாம் பிகை யினரு டானும் வாழி
இவரோகைத் திருவூஞ்ச லினிது வாழி
இசை படித்தோர் கேட்போர்க ளென்றும் வாழி.

# வைரவர் தோத்திரம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

# மந்திரம்

ஓம் திரயம்பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்தனம்
உர்வாருக மிவ பந்தனாத்
மருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்

சுத்த சத்துவ குணம் பொருந்தியவரும் ஆன்ம ஒளியை
வளர்ப்பவருமாகிய முக்கண்ணனைத் தியானிப்போமாக
காம்பிலிருந்து வெள்ளரிப்பழம் தானே விடுவடுவது போல
பிறப்பு இறப்பு என்ற பந்தத்திலிருந்து உமதருளால்
விடுபடுவோமாக மரண பயம் ஏற்படும் போதும் அப்பயத்தி
னின்றும் உமதருளால் விடுபடுவோமாக பேரின்பப்
பாதையிலிருந்து விலாகாதிருப்போமாக.

# மங்களம்

பண் - கௌசிகம் | ராகம் - பைரவி | தாளம் - ஆதி

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரண் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

அன்னை அன்னை அன்னை அன்னை அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுளே விளங்கும் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் கிற்சவைக்கு மங்களம்


சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தாத்திரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடாயனாய மங்களம்
சாந்த சக்தி மங்களம் சர்வசக்தி மங்களம்
சீதாராம மங்களம் ராதாகிருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்

கல்லப் பிழையும்
கருதாப் பிழையும்
கசிந்துருகி நில்லாப் பிழையும்
நினையாப் பிழையும்
நின் ஐந்தெழுத்தை சொல்லாப் பிழையும்
துதியாப் பிழையும்
தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே

நம பார் வதீ பதயே
அர ஹர மகா தேவா
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
சிற் சபேசா சிவ சிதம்பரம்
சிருச்சிற்றம்பலம்
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க



விநாயகப் பெருமானின் கும்பாபிஷேக திருக்காட்சி



பழமை வாய்ந்த கோயில் கேணியில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை இங்கு காணலாம்.



கண்ணகி அம்மனின் கும்பாபிஷே திருக்காட்சி.



வைரவப் பெருமானின் கும்பாபிஷேக திருக்காட்சி.



திருக்கல்யாண திருக்காட்சி.



கும்பாபிஷேக யாக மண்டபம்.



நந்தி பலியீட கும்பாபிஷேக திருக்காட்சி



கண்ணலிங்கேஸ்வரின் திருக்காட்சி.



மூலஸ்தான தூபி அபிஷேக திருக்காட்சி.



பிள்ளையார் தூபி அபிஷேக திருக்காட்சி.



கண்ணகி அம்மனின் தூபி அபிஷேக திருக்காட்சி.



வைரவ சுவாமி கோயில் தோற்றம்.

# நன்றியுரை

எல்லாம் வல்ல கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்ய உதவிய மெய்யடியார்களுக்கும், குறிப்பாக திருப்பணி வேலைகளை பொறுப்பெடுத்து செய்த மெய்யன்பர்களுக்கும் மற்றும் பண உதவி பொருளுதவி, சரீர உதவி என்பவற்றை வாரி வழங்கிய அன்பர்களுக்கும் கொழும்பிலும், வெளிநாட்டிலும் பணம் சேர்த்து அனுப்பிய எமது பிரதிநிதிகளுக்கும், அஷ்டபந்தன மருந்து இந்தியாவில் இருந்து பல இடர்களின் மத்தியில் வாங்கி அனுப்பிய அடியார்களுக்கும் குறிப்பிட்ட ஒரு மாத காலத்துள் கட்டிட, வர்ண வேலைகளை முடித்துதவிய கலைஞர்களும் கிரியைகளை விரிவாக சிறப்பாக நடாத்திய குருமாருக்கும் கோயில் ஐயாவுக்கும் மண்டலாபிஷேக உபயகாரர்களுக்கும் மங்கள வாத்திய காரருக்கும் ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும் சிறப்பாக புகைப்படமெடுத்து உதவியவர்களுக்கும் மற்றும் எல்லா விதத்திலும் தொண்டுகள் உதவிகள் புரிந்தவர்களுக்கும் இக் கும்பாபிஷேக மலரை சிறப்பாக வெளியிட உதவியோருக்கும் சிறப்பாக அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் எமது ஆலய பரிபாலன சபை சார்பிலும் தொண்டர் சபை சார்பிலும் எல்லாம் வல்ல கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானை பிராத்தித்துக் கொண்டு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

இங்ஙனம்
கூ ஆலய பரிபாலன சபையும்,
தொண்டர் சபையும்.



# T. RASIAH & SON

# த. இராசையா அன் சன்

- DULUX
- DUCO
- LANKA PRIDE

போன்ற சகலவிதமான தீந்தைகளுக்கும் இன்றே
நாடுங்கள் யாழ்ப்பாணத்தில்

**T. Rasiah & Son,**
23/10, Stanley Road,
Jaffna

---

சகலவிதமான மின் இணைப்புகளுக்கும் உபகரணங்களுக்கும்

# JAFFNA ELECTRICALS

**Electrical Contractors & Dealers**
**94 (6), Stanley Road, Jaffna.**
**T.phone No: 2353**

கிளை

## மகேஸ் சக மைந்தர்கள்

3, மொடல் மார்க்கட்,
சாவகச்சேரி.



PRINTED BY UNIE ARTS (PVT) LTD. NO. 48 B, BLOEMENDHAL ROAD. COLOMBO-13. TEL:330195